


28 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca
info@vlambaram.com
web: vlambaram.com
tamilvanakkam.com




நதி: 28 பாலம்: 17 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் SEPTEMBER 01, 2018

# ரொறன்ரோ நகரசபையின் செயற்திறன் அதிகரிப்பு!

ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்றப் பொதுத்தேர்தலின்போது ஒன்ராரியோ அரசின் செயற்திறனை அதிகரிப்பதால் மட்டுமே ஒன்ராரியோ மக்களின் வரிப்பணத்தில் $6 பில்லியனைச் சேமிப்பேன் எனக் கூறி ஒன்ராரியோ நாடாளுமன்றத்தின் 124 ஆசனங்களில் பெரும்பான்மையான 76 ஆசனங்களைப் பெற்று ஆட்சிக்கு வந்த முதல்வர் டக் ஃபோர்ட், ஒன்ராரியோ அரசின் செயற்திறன் அதிகரிப்பு நடவடிக்கைகளை 2018 யூன் 29இல் முதல்வராகப் பதவி ஏற்ற உடனேயே ஆரம்பித்து விட்டார்.



2018 யூலை 30இல் ஒன்ராரியோ நாடாளுமன்றத்தில் ‘சிறந்த உள்ளூராட்சி மன்றச்சட்டம்’ என்று Bill 5 ஐ சமர்ப்பித்ததன் மூலம் ரொறன்ரோ நகரசபையின் உறுப்பினர் எண்ணிக்கையை 47இல் இருந்து 25ஆகக் குறைத்துள்ளார். இச்சட்டமூலம் நாடாளு மன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு இராணியின் பிரதிநிதியின் கையொப்பத்துடன் 2018 ஒகஸ்ட் 14இல் சட்டமாகியது.

இவ்வாறு ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்ததிற்கு ஒன்ராரியோ முதல்வர் கூறிய காரணங்கள்:

ரொறன்ரோ நகரசபை உள்ளடக்கிய பிரதேசத்தில் 25 கனேடிய நாடாளுமன்றத் தொகுதிகள் உள்ளன. அதே போல் இப்பிரதேசத்தில் 25 ஒன்ராரியோ நாடாளுமன்றத் தொகுதிகள் உள்ளன. இதனால் ரொறன்ரோ நகர-சபைக்கும் இதே 25 தொகுதிகளின் எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு 25 நகரசபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

44 உறுப்பினர்களைக் கொண்ட தற்போதைய ரொறன்ரோ நகரசபை, கனடாவிலேயே இயங்கும் நகரசபைகளில் மிகவும் செயற்திறனற்ற (most dysfunctional) நகர-சபையாகத் திகழ்வதுடன், நகரத்திற்குத் தேவையான அத்திய அவசியமான தேவைகளை நிறைவேற்றாமல் வீணாக நகரசபை திட்டங்களை விவாதிப்பதிலேயே காலத்தைச் செலவிடுகின்றது. 47 உறுப்பினர்களைக் கொண்ட புதியசபை இவ்விடயத்தை மேலும் தீவிரமாக்கும்.

ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 25 ஆகக்குறைப்பதன் மூலம் நான்கு வருடங்களில் $25.5 மில்லியன் சேமிக்கப்படும்.

இதனால் நகரசபை அங்கத்தவர்களின் எண்ணிக்கையை 25 ஆகக்குறைக்கிறோம். குறைந்த உறுப்பினர்களைக் கொண்ட நகர-சபை முக்கிய விடயங்களில் தீர்மானம் எடுப்பதை விரைவுபடுத்தும். ரொறன்ரோ மக்கள், திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும் என நினைக்கின்றனர். அவர்கள் அரசியல் பற்றியோ அரசியல்வாதிகள் பற்றியோ கவலைப்படுவது இல்லை.

2018ஆம் ஆண்டிற்கான ரொறன்ரோ நகரசபையின் நிர்வாகச் செலவினங்களுக்கான $13 பில்லியன் வரவு செலவுத்திட்டத்தில், 44 ரொறன்ரோ நகரசபை

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)































Thas Real Estate Team
Expertice + Knowledge + Power
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, Ont.
www.soldbythas.com
16 Years of Business Experience
Thas Thirunavukkarasu
Sales Representative Dip-in-Eng(Hons)
416-388-4333
thasremax@gmail.com
SOLD OR WE'LL BUY IT!
வீடு வாங்குவதற்கு பணம் போதவில்லயா? உடன் அழையுங்கள்
$445,000
Oshawa Townhouse BR:2 WR:2
2 Years Old. Near Unit & 407
211Leadershipdr.com
$1,290,900
Brampton BR 5 WR 4 Ravine lot
4 Yrs Old, Financing Available
$375,000
McCowan/Steeles BR: 1 WR:1
Maint. Fee $373 (Incld. All Utilities)
$849,000
Oshawa North New Home
Over 3000 SF BR:4 WR:4
$129,900
Build your dream Home
in Lindsay 66x422 FT
$749,800
Pickering BR:3+1 WR:4
Fin. Bsmt. Sep. Entrance
$339,900
Markham & Sheppard
BR:1 WR: 1 Maint. Fee $265
From $499,000
9 Brand New Houses Available
in Lindsay. Bungalow & 2 Storey
$429,000
Markham BR:2 WR:2, 1000+ SF
Maint. Fee $243 Incld. Water
INTEREST FREE RENOVATION LOAN
Jalal Sayah
Sales Representative
416-569-7570
remax4jalal@gmail.com


GURANTEED SOLD !
*Chance to Win Vacation Ticket
New Price Call
4 Bed Rooms - Detached 2-Storey
Yonge St / Bloor St E
New Price Call
Condo - Apartment
Boyne St And Gray Ave -Simcoe
$759,999
Detached 2-Storey
Halton Hills Ontario
$9,500,000
Land Designated
Main St & Church -Halton Hills
$449,999
2-Storey - Semi Detached
Clarington Ontario
$350,000
Designated - Industrial
Highway 7 And Weston Rd
$489,000
2 Bed Room Condominium
Barrie Ardagh Simcoe 507-8-N
SOLD
Att/Row/Townhouse
1% CASH BACK
Ask For Details
REAL ESTATE
Big / Small
SOLD
MORTGAGE
Banks / Private
APPROVED
INSURANCE
Banks /Insurance Companies
ACTIVE
Ruban Lingam
Sales Representative
Call: 647-928-5626
www.rubanlingam.com
Ask for more details
RUBAN TEAM
Real Estate - Finance
Investments
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Miracle Realty Ltd., Brokerage*
*Some conditions may apply
*Independently Owned & Operated



அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மாடம்
றொரன்றோவில் வர்த்தகத்துறையில் 25வது வருட வெள்ளி விழா காணும் நிறுவனம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
5 நிமிடங்களில் உங்கள் கையில் குறைந்த வட்டியுடன் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்
உங்கள் பழைய நகைகளை அதியுயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்
1.5% முதல் 2% வட்டி மட்டுமே (per month)
எவ்வளவு தொகையானாலும் மிக குறைந்த வட்டியுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
அம்மா போல அம்மா பவுண் புறோக்கர்ஸ்
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
உங்கள் முதலை மாதாமாதம் கட்டிக்குறைக்கலாம் உங்கள் கட்டுப்பணத்தை வங்கியினூடாகவும் செலுத்தலாம்.
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுசேவை
416-757-0034, 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத்தரிப்பிட வசதிகள் உண்டு.
Shankar & Co.
விற்கு அருகாமையில்




HOMES,CONDOS,BUSINESS,COTTAGE, LAND
Days Rent from189/-
5 bm .5 acre lot
COTTAGE FOR SALE
$498K
Lake front 1 hr north
Richmond Hill
3 BEDROOM 4 WASHROOM HOUSE W/ IN LAW APARTMENT
PAT PUSHPAKANTHAN
REAL ESTATE BROKER - HALL OF FAMER
416-894-1187
Century 21
AFFILIATE REALTY INC.
OFFICE: 416-290-1200
1% Listing Commission*
Also Available
17 YEARS REAL ESTATE EXPERIENCE
PAT WILL BEAT ANY DEAL*!!
Mavis /Britania
Basement apt
Excellent Large 4 Bedroom/4 Washroom LHeart Of Mississauga. Pot Lights Main Floor Laundry Room. Large Fenced Backyard.Newly Painted,Stone Patio,Main Fl Laundry, <>rent & Live Save On Deepest 134 feet
taunton/westney
3 bm luxury home with granite c.
Excellent Investment
INVESTMENT
Markham & 14 th ave. $238K.
Run your business
Scarborough
Large 4 bm bungalow with w/o Bsmnt 50 ft. x166 FT
1bm condo $1,650 RENT in Scarborough
2 bm condo$2,100 RENT in Scarborough
3 bm bungalow fr For RENT $2300

# நாமும் நமது இல்லமும் - 517

## நியூசிலாந்தில் ஆதன வியாபாரம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

அண்மைக் காலமாக நியூசிலாந்தின் (New Zealand) ஆதன விலை அதிகரிப்பு கட்டுக் கடங்காமல் போய்க்கொண்டிருக்கின்றது. 2016 மற்றும் 2017இன் ஆரம்பத்தில் வெளிநாட்டு மக்கள் GTA பெரும் பாகத்திலும் அதனைச் சுற்றிய சிறு பகுதி யிலும் வீடு/மனை வாங்கும்போது 15% மேலதிக ஆதனமாற்று வரி (Land Transfer Tax) செலுத்த வேண்டும் என்ற திட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் தொடர்ச்சி யாக, அடமானக் கடன் பெறுவதில் இறுக்கமான நிலைப்பாடு ஏற்படுத்தப்பட்டு, ஆதன வியாபாரம் கட்டுப்படுத்தப்பட்டது. இதனை ஒத்த நிலைமை நியூசிலாந்து அரசு வேறு உருவில் கொண்டு வந்துள்ளது. அனேகமான வெளிநாட்டவர் நியூசிலாந்தில் ஆதனம் வாங்குவது தடை செய்யப்பட்டுள்ளது.

அண்மைக் காலங்களில் வெளிநாட்டவர் களின் கொள்வனவு, குறிப்பாக சீன மக்களின் கொள்வனவு ஒக்லண்ட் (Oakland)ஐச் சுற்றியுள்ள பகுதியில் உள்நாட்ட வர்களுக்கு நெருக்கடியை கொடுத்துள்ளது. சில பகுதிகளில் ஏறக்குறைய 22%ஆன கொள்வனவுகள் வெளிநாட்டவர்களினாலேயே நடந்துள்ளது. சிங்கப்பூர், அவுஸ்தி-ரேலியாவுடன் நியூசிலாந்து Free Trade Agreement இல் ஒப்பமிட்டு இருப்பதால், இந்த நாட்டவர்கள் வாங்குவது ஏற்று கொள்ளப்படும்.

நியூசிலாந்து
(இரு தீவுகளினால் சேர்ந்த நாடு)
சனத்தொகை: 4.7 மில்லியன்
தலைநகரம்: வெலிங்டன்

### *ELECTRIC VEHICLE CHARGING STATION (EVCS)*

அடுக்குமாடி மனைகள் உள்ள கட்டிடத் தொகுதியில் எலெக்றிக்ஸ் வாகனங்களை மின்னேற்றம் (Charge) செய்வதற்குரிய புதிய இடங்களை உருவாக்கப்படுவதனைக் காணலாம். எதிர்காலங்களில் அதிகமான வாகனங்கள் எலெக்றிக் வாகனங்களாக வருவதற்குரிய சந்தர்ப்பங்களே உள்ளது. எனவே ஒரு அடுக்குமாடி மனையில் வாழ்பவரின் வாகனத்திற்கு EVC ஸ்ரேசன் தேவைப்பட்டால், கட்டிடத்தை பராமரிக்கும் நிறுவனத்துடன் (Property Management) தொடர்பு கொண்டு இதனை செய்யமுடியும். கட்டிடத்தை பராமரிக்கும் நிறுவனம் இதனை தடுக்க முடியாது. அதற்கு தகுதியான வரை-படத்துடன் அவர்களை அணுகி இதனை செய்ய முடியும். இதற்குரிய செலவை உரிமையாளர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.



### அடுக்குமாடிமனை குறுகிய கால வாடகை

அண்மைக் காலங்களில் அடுக்குமாடி மனையில் குறுகிய கால வாடகை என்பது நடைபெற்று வருவதனைக் காணலாம். குறுகிய கால வாடகைக்கு Air & BNB, Vacation Rental by Owner (VRBO), short term rental இவையே அண்மையில் அதிகமாகப் பாவிக்கப்படுகின்றன.

இவ்வாறு குறுகிய காலத்திற்கு வாடகைக்கு கொடுப்பதால் அடுக்குமாடி மனைகளில் மிக அதிகமான சத்தம் (noise), பாவனைப் பொருட்களை பழுதாக்குதல், குப்பைகளை சகல இடங்களிலும் போடுதல், Drugs பாவித்தல், அளவுக்கதிகமான குற்றங்கள்

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

CENTENARY
PHYSIO & REHAB
NEILSON & ELLESMERE

KERALA TRADITIONAL AYURTVEDIC TREATMENT & MASSAGE



OUR SERVICES
• Physiotherapy
• Massage Therapy
• Sauna
• Manual Therapy
• Wax Therapy
• Reflexology
• Chiropractic
• Acupuncture
• Shockwave Therapy
• Laser Therapy
• Taping
• Spinal Decompression

• Cervical Spondylitis
• Fibromyalgia
• Post Delivery Treatments
• Sciatica
• Polycystic Ovarian
• Obesity
(Male and Female Ayurvedic Doctors from Kerala)
கேரள பாரம்பரிய ஆயுர்வேத சிகிச்சையுடன் மசாஜ்.
கேரளாவைச் சேர்ந்த பயிற்சிபெற்ற ஆண்/பெண் வைத்தியர்களால் வழங்கப்படும்

Promotional offer.
$60 1 hour massage

SPECIAL DISCOUNT FOR STUDENTS & SENIORS



Lincy George
(Registered Physiotherapist)

We are specialized in
Vestibular rehabilitation & Pelvic Floor Treatments

வாகன விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சை
சகல காப்புறுதி நிறுவனங்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு உங்கள் கட்டணங்களை பெற்றுக்கொள்வோம்
2870 Ellesmers Rd. Scarborough (Neilson & Ellesmere) ON. M1E 4B8,
Phone: 416.724.4466 | Fax: 416.848.6037
info@centenaryphysio.com | www.centenaryphysio.com

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

- பவர் ஒப் சேல் பிரச்சினையிலிருந்து விடுபட ,
- நல்ல ரேட்ல மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க
- ரீபைனான்ஸ் செய்ய
- 2வது, 3வது மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- கொன்சுமர் ப்ரொபோசல், பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் பெற்றுக்கொள்ள
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க



## மற்றும் உங்கள் அனைத்து விதமான மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

WIN UP TO
$100,000*
Everyone Who Funds
A Mortgage With US
Ask How !
*See contest rules at
www.mortgagealliance.com/JeyRasathurai/contest.asp

"மோட்கேஜ் கிளினிக்"



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

**வோக் இன்**

**சனி 9.00 - 5.00 மணிவரை**

**416-613-2788 / 416-816-9011**

திங்கள்—வெள்ளி (call for an appointment)

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Broker
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto*

Corporate Office : 2006 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487 Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232




- ஆதித்தன் -

# அரசியல் தீர்வுக்கு பின்னரே அபிவிருத்தி என்ற வாதம் சரியானதா?

வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கக்கூடாது என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ள கருத்து விக்னேஸ்வரனுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும் இருந்து வந்த விரிசலை மேலும் அதிகரித்துள்ளது.

எதிர்வரும் வட மாகாணசபைத் தேர்தலில் விக்னேஸ்வரனை வேட்பாளராக களமிறக்கப் போவதில்லை என்கின்ற நிலைப்பாடு கூட்டமைப்பிற்குள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில், இந்த விவகாரத்தினால் கூட்டமைப்பிற்குள் பிளவுகள் ஏற்படக் கூடாது என்கின்ற எண்ணத்தில் கடந்த வாரங்களில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்குமிடையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. இதன்மூலம் ஒரு சுமுகமான முடிவு ஏற்படலாம் என்கின்ற எதிர்பார்ப்பு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கும், கூட்டமைப்பின் ஆதரவாளர்களுக்கும் ஏற்பட்டிருந்தது. ஆனால், ஜனாதிபதி செயலணி தொடர்பாக தற்போது தோன்றியுள்ள சர்ச்சை இந்த எதிர்பார்ப்பை தவிடு பொடியாக்கியுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குகொள்ளக் கூடாது எனத் தெரிவித்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அரசியல் தீர்வு ஒன்று எட்டப்படும் வரை அபிவிருத்தி செயலணியில் தாம் கலந்துகொள்ளப் போவதில்லை எனவும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் கலந்து கொள்ள வேண்டாம் என்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அக்கடிதத்தில் கோரிக்கை விடுத்திருந்தார். அவரது கோரிக்கை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

விக்னேஸ்வரன் அனுப்பியிருந்த கடிதம் தொடர்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி ஆராய்ந்தனர். செயலணியின் கூட்டத்தில் நிச்சயமாக கலந்து கொள்ள வேண்டும் என பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களுக்கு அபிவிருத்தி சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இதற்கும் அப்பால், காணிகள் விடுவிப்பு, சிங்களக் குடியேற்றங்கள், இராணுவ ஆக்கிரமிப்புக்கள் எனப் பல்வேறு பிரச்சினைகளும் உள்ளன. இவை குறித்து பேசுவதற்கும் தீர்வினை காண்பதற்கும் சிறந்த களமாக ஜனாதிபதி செயலணி அமைந்துள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதன்போது குறிப்பிட்டனர். இதனையடுத்து செயலணிக் கூட்டத்தில் கலந்து கொள்வதென தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், விக்னேஸ்வரனின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்ததன் பின்னரும் விக்னேஸ்வரன் கடுமையான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். பணத்தையும் தங்களுக்கான செல்வாக்கையுமே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்பார்க்கின்றனர் என்றும், தமிழ் மக்களுக்கான நீண்டகால அரசியல் தீர்வு குறித்து அவர்கள் மனங்கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், அபிருத்திக்கு முன்பாக அரசியல் தீர்வே வேண்டும் என்ற முதலமைச்சர் விக்னேஸ்வரனின் வாதத்தை பொதுவான கண்ணேட்டத்தில் பலரும் நிராகரித்து வருகின்றனர். நீண்ட காலமெடுக்கும் அரசியல் தீர்வுவரை காத்திருக்க முடியாததால் தங்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களை பாதிக்கப்பட்ட மக்கள் அவசரமாக எதிர்பார்க்கின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தியை துரிதப்படுத்துவதற்கு 48 பேர் கொண்ட சிறப்புச் செயலணி ஒன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்துவதை ஒருங்கிணைக்கவும், கண்காணிக்கவும் இந்த உயர்மட்ட செயலணி அமைக்கப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தச் செயலணியில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, 15 அமைச்சர்கள், இரண்டு மாகாணங்களின் ஆளுநர்கள், இரண்டு மாகாணங்களினதும் முதலமைச்சர்கள், சில அமைச்சுக்களின் செயலர்கள், முப்படைகளின் தளபதிகள், மற்றும் இராணுவ, அரச அதிகாரிகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதி



நிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த செயலணியில் இடமளிக்கப்படவில்லை. இவர்கள் புறக்கணிக்கப்பட்டமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில், செயலணியில் உள்ளடக்கப்பட்ட முதலமைச்சர் விக்னேஸ்வரன் தான் இதில் பங்கேற்பதில்லை என அறிவித்துள்ளதுடன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளக் கூடாது என கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில், கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தில் பங்கேற்பதானது அரசியல் தீர்வினை பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளில் எவ்விதமான பாதிப்பினையும் ஏற்படுத்தாதெனக் கூறியுள்ளார்.

ஜனாதிபதி செயலணியில் நேரடியாக பங்கேற்பதன் மூலம் குறைகளை சுட்டிக் காட்டி, அதற்கான தீர்வுகளைக் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கும் என்று கருதுவதாகவும், அத்துடன் இச்செயலணியில் பங்கேற்பதனால் அரசியல் தீர்வுக்கு உதவக்கூடிய வகையில் சாதகமாக மாற்றியமைப்பதற்கு முயற்சிக்கலாம் என்ற நம்பிக்கையை கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவும் செயலணியில் பங்குகொள்வதை ஏற்றுக்கொண்டுள்ளது. வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பிலான ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளதாக ரெலோ கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த செயலணிக் கூட்டத்தில் பங்கேற்பதால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் எவ்விதமான இடையூறும் ஏற்படாது என்றும், தமிழ் மக்களின் முழு ஆதரவுடன் தமிழ் தேசியக்கூட்டமைப்பு ஜனாதிபதி செயலணியில் பங்குபற்றும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுடனான முரண்பாடுகள் களையப்பட்டு, அவரே மீண்டும் அடுத்து வரும் வட மாகணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும் என்கின்ற கருத்தை கூட்டமைப்பின் தலைமையிடம் வலியுறுத்தி வரும் ரெலோவும் விக்னேஸ்வரன் கோரிக்கையை நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அபிவிருத்திக்கு முன்பாக அரசியல் தீர்வே வேண்டும் என்கின்ற கருத்தை தமிழ் மக்களின் நலன்கள் குறித்து சிந்திக்கும் எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏனெனில், அரசியல் தீர்வு எப்போது வரும் என்பது எவருக்கும் தெரியாது. அரசியல் தீர்வுக்கு வழிவகுக்கும் புதிய அரசியல் யாப்பும் முழுமை பெறுமா என்பதும் தெரியாது. சிலவேளைகளில், ஏதோவொரு விதத்தில் அரசியல் தீர்வு ஒன்றை அரசாங்கம் முன்வைக்குமானால் அது தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமா என்பதும் கேள்விக்குறியே. இந்நிலையில், அரசியல் தீர்வு வரும் வரையில் அபிவிருத்தி வேண்டாம் என்று கூறுவது முட்டாள்தனமானதே.

போர் முடிவடைந்த ஒன்பது வருடங்களாகின்றன. போரினால் பாதிக்கப்பட்டுள்ள

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7



# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 32



குரு அரவிந்தன்

முதற்குடி மக்கள் பரம்பரையாக வாழ்ந்த மனிரோபா, ஒன்ராறியோ எல்லையில் இருக்கும் சில பகுதிகளை ஐக்கிய நாடுகள் சபையின் கலச்சாரப் பிரிவு பலதரப்பட்ட கலாச்சாரம் நிறைந்த, இயற்கை வளம் கொண்ட பகுதியாகச் சென்ற மாதம் அறிவித்திருந்தது. முதற்குடி மக்களின் தலைவர்கள் இதை வரவேற்று அறிக்கை விட்டிருந்தனர். 'இந்த முடிவு எனக்கு மட்டுமல்ல, முதற்குடி மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரக்கூடியதாகும். என்னுடைய தாத்தாவும், அதன் பின் என்னுடைய தந்தையும் இந்தப் பாரம்பரிய நிலத்தைப் பாதுகாத்துக்கொள்' என்று அடிக்கடி எங்களிடம் சொல்வார்கள். எங்களை வழிநடத்திய அவர்களுடைய விருப்பம் இப்போதுதான் நிறைவேறுகின்றது' என்று பிளட்வெயின் முதற்குடி மக்களின் தலைவர்களில் ஒருவரான வில்லியம் ஜங் என்பவர் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடும்போது 'இந்தப் புனிதமான நிலத்தில் என்ன அழகு என்றால் எமது முன்னோர் பாவித்தது போலவே இந்த நிலத்தை அப்படியே இன்னும் பாவிக்கின்றோம்' என்று குறிப்பிட்டார். வில்லியம் ஜங் என்ற முதற்குடி இனத் தலைவரான இவர் இந்த நிலத்திலேயே பிறந்து வளர்ந்தவராவார். எனவேதான் தனது முன்னோரைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் கலச்சாரப் பிரிவினர் ( UNESCO World heritage Committee) கனடாவில் இதுவரை முக்கியமான எட்டு பாரம்பரிய இடங்களைத் தெரிவு செய்து அவற்றைக் கவனமாகப் பாதுகாக்கின்றார்கள். அதுபோல பத்து இயற்கை வளம் பொருந்திய இடங்களையும் கனடாவில் பாதுகாக்கின்றார்கள். இதற்கான முழு பாதுகாப்புச் செலவையும் அவர்களே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பாதுகாக்கும் இடங்களில் ஒன்று பிரிட்டிஷ் கொலம்பியாவின் மேற்குக் கரையோரத்தில் உள்ள முன்பு முதற்குடி மக்கள் வாழ்ந்த சிறிய தீவாகும். 1981ஆம் ஆண்டு இதன் பராமரிப்பைக் கலாச்சாரப் பிரிவினர் பொறுப்பு எடுத்தார்கள். பரம்பரையாக முதற்குடி மக்களில் ஓர் இனத்தவரான ஹைடா இந்தியர்கள் (Haida Indians) ஒருகாலத்தில் இச்சிறிய தீவில் SGang Gwaay (Ninstints) in Gwaii Haanas வாழ்ந்தார்கள். ஹைடா ஹவாய் என்ற இந்தச் சிறிய தீவில் வாழ்ந்தவர்கள் சுமார் 8000 வருடங்களுக்கு மேற்பட்ட கலாச்சாரத்தைக் கொண்டவர்கள். இவர்கள் அண்டங்காக்காவைத் தமது சின்னமாகக் கொண்டவர்கள். நிலத்தோடும் கடலோடும் கொண்ட தொடர்பு காரணமாக அவர்கள் காடுகளில் வேட்டையாடியும், கடல் வாழ் உயிரினங்களைப் பிடித்தும் வாழ்ந்தனர்கள். அவர்கள் வாழ்ந்ததற்கு அடையாளமாக சிடார் மரத்தில் செய்யப்பட்ட நீண்ட வீடுகளும், மரங்களில் செதுக்கப்பட்ட நினைவுத் தூண்களும் (Totem Poles) இத்தீவில் இன்றும் எஞ்சி இருக்கின்றன. இந்த நினைவுத் தூண்கள் பழுதடைந்த நிலையில் இருந்தாலும், ஹைடா இந்தியர்களின் கலைத் திறனை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

இயற்கை வளம் நிரம்பிய இத்தீவு மிருகங்கள், பறவைகளின் இருப்பிடமாகவும் இருக்கின்றன. சுமார் 1.5 மில்லியன் கடற்பறவைகள் கரையோரமாகக் கூடுகட்டி வாழும் இடமாக இத்தீவு இருக்கின்றது. இதைவிட கடல் வாழ் உயிரினங்களான திமிங்கிலம், டொல்பின், நட்சத்திரமீன், ஒக்ரோபஸ், சீல் போன்றவை இக்கரையோரக் கடலில் வாழ்கின்றன. இவற்றைப் பார்ப்பதற்காகவே பல சுற்றுலாப்பயணிகள் இத்தீவுக்குச் செல்கிறார்கள். ஹைடா இந்தியர்கள்ஆயிரக்கணக்கான வருடங்கள் இந்த இயற்கை வளங்களை நம்பியே இத்தீவில் வாழ்ந்தார்கள். தங்கள் உணவுக்காகவும், தோலுக்காகவும் காட்டிலும் கடலிலும் இவற்றையே வேட்டையாடிச் சீவித்தனர். ஐக்கிய நாடுகள் சபையின் கலச்சாரப் பிரிவினர் இத்தீவின் பராமரிப்பைப் பொறுப்பு எடுத்ததால் ஹைடா முதற்குடி மக்களின் கலாச்சார சின்னங்கள் இன்றும் கனடாவில் வான்கூவருக்கு அருகே உள்ள இத்தீவில் கவனமாகப் பாதுகாக்கப்படுகின்றன.

இங்கே இருக்கும் நினைவுத் தூண்கள் எல்லாம் கடலைப் பார்த்தபடி அமைக்கப்பட்டிருக்கின்றன. கடற்பாதையால் புதிதாக வருபவர்களுக்கு அங்கே யார் வாழ்கிறார்கள், அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறிந்துகொள்ள இந்தத் தூண்கள் உதவியாக இருந்தன. ஆயிரக்கணக்கான வருடங்களாக இங்கு இருக்கும் இத்தூண்களில் சில ஓரளவு பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. சில தூண்களின் பகுதிகள் உடைந்து சிதைந்த நிலையில் இயற்கையோடு கலந்து விட்டன. ஒரு காலத்தில் மிகச் சிறப்பாக ஐரோப்பியர்களுடன் தோல் வியாபாரத்தில் ஈடுபட்ட இவர்களில் பலர் 1862ஆம் ஆண்டு இப்பகுதியில் பரவிய பெரியம்மை நோய் காரணமாக இறந்து போனார்கள். தொடர்ந்து வேறுபல நோய்களாலும் இவர்கள் பாதிக்கப்பட்டதால் இப்பகுதியில் வாழ்ந்த முதற்குடி மக்களின் சனத்தொகை வேகமாகக் குறையத் தொடங்கியது. இதன் காரணமாக 1885ஆம் ஆண்டளவில் எஞ்சியிருந்தவர்கள் ஸ்கிட் கேட் என்ற இடத்திற்கு இடம் பெயர்ந்தார்கள். இவர்களது பெருந்தொகையான சாவிற்குக் காரணமான தொற்று நோய்களை ஐரோப்பியர்தான் கொண்டு வந்தனர் என்ற இவர்களது குற்றச்சாட்டு இன்றும் இருக்கின்றது.

இத்தீவுக்குச் செல்வதற்கு வான் வழிப்பாதை அல்லது கடல் மார்க்கமாகத்தான் செல்ல முடியும். தரைவழிப் பாதை கிடையாது, நேரத்தைக் கவனத்தில் கொண்டால் வான்வழிப் பாதை இலகுவானதும் விரைவானதுமாகும். ஆனால் சற்று கூடுதலாகச் செலவாகும். ஏயர்கனடா, பசுபிக் கோஸ்ரல் எயர்லைன்ஸ், இன்லான்ட் எயர் ஆகிய நிறுவனங்கள் விமான சேவையில் ஈடுபட்டிருக்கின்றன. கடல் வழிப்பாதையை



ரசிக்க விரும்பினால் படகிலும் அங்கு செல்லலாம். முற்கூட்டியே பதிவு செய்து வைப்பது நல்லது. பிசி பெறிஸ் என்ற நிறுவனத்தின் படகுகள் தினமும் இங்கு சென்று வருகின்றன. தீவைச் சுற்றிப் பார்க்க விரும்பினால் உங்கள் வண்டியையும் அங்கு கொண்டு செல்லலாம் அல்லது அங்கே வாடகைக்கும் வண்டியை எடுக்கலாம். கடற்கரைகளில் தங்குவதற்கான ஹோட்டல் வசதிகள் இருக்கின்றன. முக்கியமான பெரும்தெரு 16 சுமார் 70 மைல்கள் நீளமானது. அனேகமாக அங்குள்ள முதற்குடி மக்களின் எல்லா கிராமங்களுக்கு ஊடாகவும் இந்தப் பாதை செல்கின்றது. பொது வாகனப் போக்குவரத்து இங்கே கிடையாது. சைக்கிள் சவாரி செய்பவர்களுக்கு சான்ட்ஸ்பிற் என்ற இடத்தில் சைக்கிள்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம். சுற்றுலாப் பயணிகளுக்காக சங்கீத நிகழ்ச்சி, கலாச்சார நிகழ்ச்சி, விளையாட்டுப் போட்டிகள், விவசாயக் கண்காட்சி போன்றவை அவ்வப்போது இடம்பெறுகின்றன. முக்கியமாக முதற்குடி மக்களின் கலாச்சார நிகழ்வுகளைக் கண்டு களிக்கலாம்.

மிகநுட்பமான மரவேலைகள் செய்வதில் அனுபவம் மிக்க ரிம் போய்க்கோ என்ற முதற்குடி மகன் புதிதாக இரண்டு நினைவுத் தூண்களை ஹைடா இந்தியர்களுக்காகச் செய்திருந்தார். பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஸ்கிட்கேற் என்ற இடத்தில் நெடும்சாலைக்கு அருகே இருக்கும் ஹைடா கலாச்சார மண்டபத்தில் வைப்பதற்காகவே இந்த ரொரோம் போல்ஸ் சிடார் மரத்தில் செய்யப்பட்டன. தனது தாத்தாவான லாடாவிடம் இருந்து இந்தக் கலையைக் கற்றுக் கொண்டதாகவும், இக் கலையில் கொண்ட ஆர்வம் காரணமாக மேற்கொண்டு மரவேலைகளுக்குப் புகழ் பெற்ற செதுக்கியான பில் ரெய்ட் என்பவரிடம் இதற்கான நுட்பங்களைக் கற்றதாகவும் அவர் குறிப்பிட்டார். பொதுவாக இப்படியான ரொரோம் தூண்கள் செய்வதற்கு இரண்டு வருடங்களாவது எடுக்கும் என்றாலும், இந்த ரொரோம் தூண்களை அவசர தேவைக்காக எட்டு மாதத்தில் செய்து முடித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது உள்ள நவீன கருவிகளும் இதை விரைவாகச் செய்வதற்கு மிகவும் உதவியாக இருந்திருக்கின்றன. சிவப்பு நிறமான சிடார் மரங்களில் இத்தகைய நினைவுத் தூண்களைச் செய்வதற்குக் காரணம், அந்த மரங்களில் கசியும் ஒருவகை எண்ணெய் அதன் காலத்தை நீடித்து வைத்திருக்கும் என்பதையும் அவர் குறிப்பிட்டிருந்தார். ஸ்கிட்கேற் பகுதியில் இருக்கும் நவீன தூண்கள் பில் ரெயிட் என்பவரால் 1978ஆம் ஆண்டு செதுக்கப்பட்டதாகும். புதிய ஹைடா தூண்கள் செதுக்கப்படுவதைப் பார்க்க விரும்பினால் ஸ்கிட்கேற்ரில் ஹைடா கலாச்சார மண்டபத்துக்கு அருகே உள்ள இடத்தில் சென்று பார்க்கலாம். பழைய மாசெற் பகுதிக்குச் சென்றாலும் இது போன்ற சில புதிய தூண்களைக் காணமுடியும்.

> உன் வாழ்க்கையின் எந்த ஒரு நாளில் உன் முன்னால் எந்தப் பிரச்சியையும் நீ சந்திக்காமல் முன் செல்கிறாயோ, அப்பொழுது தவறான பாதையில் நீ பயணிக்கிறாய் என்று அறிவாய்.
> - சுவாமி விவேகானந்தர்


Build Your Career in Mortgage Lending - Join my office! Training Provided

MORTGAGE ALLIANCE

Mortgage Loans for:
• Land
• Construction
• Rental Properties
• Consolidate 1st & 2nd Mortgages
• Consolidate high Interest Debts
• Self Employed

1585 Markham Road, Suite 110
Scarborough, ON M1B 2W1
Tel: 647-922-5704

SAM SURENDRAN
Mortgage Agent Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca



Corporate office: Mortgage Alliance, 200-2005 Sheppard Ave E, Toronto, ON M2J 5B4. Tel:1-877-366-3487. Lic# 10530

# தேர்தல்களை தாமதப்படுத்துவது ஜனநாயக உரிமையை மீறும் செயல்!

**- விகிர்தன் -**

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதில் தாமதம் ஏற்பட்டு வருகின்றமை 'நல்லாட்சி' அரசாங்கத்தின் ஜனநாயகம் மீதான சந்தேகத்தையே ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் தேர்தல்களை உரிய காலங்களில் நடத்தாமல் இழுத்தடிப்பதென்பது பொதுமக்களின் ஜனநாயக உரிமையை மீறும் செயலாகவே கருதப்படுகின்றது.

ஜனநாயகம் குறித்து அதிகம் பேசிவரும் இந்த அரசாங்கம் ஏற்கனவே கலைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலைக் கூட உரிய காலத்தில் நடத்தாமல் பல்வேறு காரணங்களைத் தெரிவித்து பிற்போட்டு வருகின்றமை மக்கள் மத்தியிலும், பொது அமைப்புக்கள் மத்தியிலும் அரசாங்கம் மீதான ஒருவித வெறுப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக்கட்சி புதிய முறைமையிலேயே மாகாணசபைகளுக்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளது. விகிதாசார முறை மோசடி நிறைந்தது என்றும், அதனால் புதிய முறையிலேயே தேர்தலை நடத்த வேண்டும் என்றும் ஆரம்பத்திலிருந்தே சுதந்திரக் கட்சியினர் கூறி வருகின்றனர். ஜனாதிபதியின் நிலைப்பாடும் இதுவாகவே உள்ளது.

இந்நிலையில், மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அது வெற்றியடையும் நிலையில் மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்தலாம் என்கின்ற எதிர்பார்ப்பு அரசாங்கத்திற்கு இருந்தது. ஆனால், கடந்த 24ஆம் திகதி மாகாணசபை தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் தொடர்பான அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு தோல்வியடைந்துள்ளது.

குறித்த அறிக்கை தொடர்பில் அன்றைய தினம் இடம்பெற்ற வாக்கெடுப்பில், அறிக்கைக்கு ஆதரவாக எவரும் வாக்களிக்கவில்லை என்பதோடு, அதற்கு எதிராக 139 பேர் வாக்களித்தனர்.



மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அறிக்கைக்கு ஆதரவாக சபையில் கருத்துகளை தெரிவித்தபோதும், வாக்கெடுப்பின் போது சபையில் இருக்கவில்லை. ஐக்கிய தேசிய முன்னணி, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்கள்அறிக்கைக்கு எதிராக வாக்களித்திருந்தனர். இதனால், இந்த எல்லை நிர்ணய அறிக்கை தோல்வியடைந்துள்ளதால், மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதில் மேலும் தாமதம் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

புதிய தேர்தல் முறைமையினால் சிறுபான்மைக் கட்சிகளுக்கு கடும் பாதிப்பு ஏற்படலாம் என்பதனால் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் இதனை எதிர்த்து வாக்களித்தன. மாகாண எல்லை நிர்ணயத்தில் சிறுபான்மை இனங்களுக்கு அநீதி விளைவிக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவிக்கின்றார். குறித்த எல்லை நிர்ணய அறிக்கை புள்ளி விபரங்களை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் சிறுபான்மை இனங்களின் பிரதிநிதித்துவம் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணய அறிக்கையை ஏற்றுக் கொண்டால் சிறுபான்மை தேசிய இனங்களின் பிரதிநிதித்துவங்கள் பறிபோகும் நிலை ஏற்படும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். பலரது எதிர்ப்பை மீறி எல்லை நிர்ணய அறிக்கையை நிறைவேற்றும் அரசாங்கத்தின் முயற்சியானது பல்வேறு சந்தேகங்களை தோற்றுவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த எல்லை நிர்ணய அறிக்கையை தயாரிப்பதற்கு அனைத்து தரப்பிடமிருந்தும் ஆலோசனை கோரப்பட்ட போதிலும், சிறுபான்மை தரப்புகளால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் நிராகரிக்கப்பட்டே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எல்லை நிர்ணய அறிக்கை தேசிய ஐக்கியத்திற்கு பாதகமானது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை திருத்தப்பட வேண்டும் என்றும், அது திருத்தங்களின்றி நிறைவேற்றப்பட்டால் இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாண சபை முறைமையும் நாசமாகிவிடும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற எல்லை நிர்ணய அறிக்கை குறித்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே இவ்வாறான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டன.

கிழக்கு, சப்ரகமுவ, வட மத்திய மாகாண சபைகள் ஏற்கனவே கலைக்கப்பட்டுள்ளதால் அம்மாகாணங்கள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிலையில் செயற்படுகின்றன. இம்மூன்று மாகாண சபைகளுக்கும் உடனடியாக தேர்தலை நடத்தியிருக்க வேண்டும். அத்துடன் மேலும் சில மாகாண சபைகள் இன்னும் சில மாதங்களில் கலைக்கப்படவுள்ளன. இந்த அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல் இவ்வருட இறுதிக்குள் நடத்தப்படும் என்று அரசாங்கம் கூறியிருந்தது. பின்னர் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் அதாவது ஜனவரி ஐந்தாம் திகதி இத்தேர்தல்கள் எவ்வித்திலும் நடத்தப்படும் என் பிரதமர் ரணியில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

ஆனால், இக்குறிப்பிட்ட காலத்திலும் இத்தேர்தல்கள் நடத்தப்படும் வாய்ப்பு இல்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. எல்லை நிர்ணய அறிக்கை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் பிரதமர் தெரிவித்துள்ள கருத்துக்கள் இந்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் முறைமை தொடர்பில் எழுந்துள்ள சிக்கல் நிலை மாகாண சபைத் தேர்தல் பிற்போடுவதற்கு காரணமாகவுள்ளது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தேர்தலை எந்த முறைமையில் நடத்துவது என்பதில் உடன்பாடற்ற தன்மை காணப்படுகின்றமையானது தேர்தல் பிற்போடப்படுவதற்கு காரணமாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எல்லை நிர்ணய அறிக்கையின் தோல்விக்குப் பின்னர், மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலான பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதற்காக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐவர் கொண்ட குழுவை நியமிப்பதற்குரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கட்சி பிரநிதிகளின் இணக்கத்துடன் ஐவர் அடங்கிய குழுவொன்று சபாநாயகர் கரு ஜயசூரியவினால் நியமிக்கப்படவுள்ளது. பிரதமரைத் தவிர, குழுவில் நியமிக்கப்படும் ஏனைய உறுப்பினர்கள் அரசியலுடன் தொடர்பற்ற புத்திஜீவிகள் என சபாநாயகர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைத் தேர்தலை எந்த காரணத்திற்காகவும் பிற்போடக் கூடாது என்பது சபாநாயகர் கரு ஜயசூரியவின் நிலைப்பாடு எனவும், குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவர்களுடன் மாகாணசபைத் தேர்தல் குறித்து சபாநாயகர் கலந்துரையாடியுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரினால் நியமிக்கப்படும் ஐவரடங்கிய குழு, தமது அறிக்கையை எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் சமர்ப்பிக்குமாயின், ஜனவரி மாதத்தில் தேர்தலை நடத்த முடியும் என தேர்தல் ஆணைக்குழு மற்றும், எல்லை நிர்ணய ஆணைக்குழு ஆகியவை தெரிவித்துள்ளன.

நாட்டில் மஹிந்த ராஜபக்ஸ அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டு, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பொறுப்பேற்றதன் பின்னர் 2015ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் மட்டுமே உரிய முறையில் நடைபெற்றது. 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலைக் கூட தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் பாரிய அழுத்தங்களின் பின்னரே அரசாங்கம் நடத்த முன்வந்தது. இப்போது நடத்தப்பட வேண்டிய மாகாண சபைகளுக்கான தேர்தல் மோசமான இழுபறிக்குள் உள்ளது.

நடைபெறவிருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தல் பழைய முறைமையிலா புதிய முறைமையிலா அல்லது கலப்பு முறைமையிலா நடத்தப்பட வேண்டும் என்கின்ற விவாதங்களுக்கு அப்பால், இத்தேர்தல் சிக்கிலின்றி உரிய முறையில், உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு.

**எது நடந்தாலும், அதை நிகழ்காலத்தில் சந்திப்பதுதான் நல்லது.**

- ஜே.கிருஷ்ணமூர்த்தி -

28 கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
உடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca / info@vlambaram.com
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# மருந்துக் கட்டணத்தில் ஒன்ராரியோ மாகாண அரசின் சலுகை

## கனடிய தகவல் தொடர் 293




**ஒன்ராரியோ மாகாணத்தில் வைத்தியரினால் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை இலசவசமாக அல்லது குறைந்த கட்டணத்தில் வாங்கிக் கொள்ள தகைமையுள்ளவர்கள் யார்?**

கனடா முழுவதும் உள்ள மாகாண அரசுகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் இதனை நடைமுறைப்படுத்துகின்றன.

'ஒன்ராரியோ மருத்துவ காப்புறுதித் திட்டம்' (OHIP -Ontario Health Insurance Plan) வைத்திருக்கும் பின்வரும் நிலைமையில் உள்ளோர் வைத்தியரினால் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை இலசவசமாக அல்லது குறைந்த கட்டணத்தில் வாங்குவதற்கு தகுதிக்குள்ளாகின்றனர்.

1. Seniors Co Payment Drug Prgram
65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் ஆனால் அவர்களின் மொத்த வருட தேறிய வருமானம் (annual net Income) என்பது தனிநபராக இருந்தால் $19,300க்கு குறைவானதாகவும், தம்பதிகளின் கூட்டு வருமானமாக இருந்தால் $32,300 க்கு குறைவானதாகவும் இருத்தல் வேண்டும் .

இவர்கள் வைத்தியரினால் பரிந்துரைக்கப்பட்ட ஒவ்வொரு மருந்திற்குமான மருந்துக் கட்டணம் (dispensing fees) $2 மட்டும் செலுத்தினால் போதும். (ஆனால் ஒகஸ்ட் 01, 2019 இலிருந்து இவ் $2 செலுத்தத் தேவையில்லை என கடந்த லிபரல் கட்சி மாகாண ஆட்சியில் இருந்தபோது அறிவித்திருந்தது.)



2. நீண்டநாள் பராமரிப்பு நிலையம் அல்லது வீடுகளில் விசேட கவனிப்பில் இருக்கும் நோயாளிகள். Living in a long term care facility or at home with special care.

3. உடல், உள நிலைமை பாதிக்கப்பட்ட நிலையில் அரச உதவித்தொகை பெறுவோர். ODSP - Ontario Disability Support Program recipients.

4. மாகாண அரச சமூகநல உதவிப் பணம் பெற்றுக் கொண்டிருப்போர். Social assistance income recipients from "Ontario works".

5. Children & Youth Pharmacare.
24 வயதுக்குப்பட்ட பிள்ளைகளுக்கு வழங்கும் இலவச மருந்துத் திட்டம் (ஜனவரி 01, 2018 இலிருந்து இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் புதிய மாகாண அரசு இதனை நிறுத்தியுள்ளது.)

6.றில்லியம் மருந்துத் திட்டம்
Trillium Durg Program.

வருமானம் குறைந்த ஒவ்வொருவருக்கும் இத்திட்டம் கைகொடுக்கின்றது.

அதாவது தமது வருமானத்தில் 4% வீதம் வரை ஒவ்வொரு வருடமும் கட்டணம் செலுத்த வேண்டும். அதற்கு மேலாக வாங்கும் மருந்துகள் இலவசமாகும்.

**சில குறிப்பிடப்பட்ட விலை கூடிய மருந்துகள், வழமைபோல் மருந்துகளுக் குரிய ஒன்ராரியோ மாகாண அரச உதவி திட்டத்திலிருந்து இலவசமாக பெறமுடியாது உள்ளது. இதற்கு ஏதாவது தீர்வு உள்ளதா?**

ஒன்ராரியோ மாகாணத்தில் இத்தகைய நிலைமையில் தவிர்ப்பவர்களுக்கு ஒரு மாற்றுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மாகாண அரசின் மருந்துத் திட்டத்தில் இவற்றினை அட்டவணைப்படுத்தப்படாத மருந்துகள் (Unlisted Drugs) என குறிப்பிடப்படும்.

EAP- Exceptional Access Program
அட்டவணைப்படுத்தப்படாத மருந்துகளை விதிவிலக்கப்பட்ட தொடர்புகள் திட்டத்திற்கு விண்ணப்பித்து உங்கள் சலுகைகளை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பபடிவங்களை இணையதளங் களிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் அல்லது ஒன்ராரியோ அரச அலுவல கங்கள் (Service Ontario) மற்றும் மருந்தகங்களிலும் (Pharmacy) பெற்றுக் கொள்ளலாம். நிரப்பப்பட்டு, தங்களின் விண்ணப்பபடிவங்களை மருந்தினை சிபார்சு செய்த மருத்து வர் நேரடியாகவே தொலை-நகல் மூலம் அனுப்பி வைக்கலாம்.

Ontario Ministry of Health & Long Term Care
Exceptional Access Program Branch
5700, Yong Street, 3Rd Floor
Toronto Ontario M2M 4K5
தொலைநகல் இலக்கம் பின்வருமாறு
416-327-7526 அல்லது 1-866-811-9908

விண்ணப்பத்தில் பின்வரும் தகவல்கள் வழங்கப்படல் வேண்டும்

- மருந்தினை சிபார்சு செய்யும் மருத்துவரின் விபரங்கள் (Prescriber Information)
- நோயாளியின் விபரம் (Patient Information)
- கோரப்பட்ட மருந்தின் விபரம் (Drug Requested)
- Diagnosis & Reason for use
- தற்போது, முன்னர் பாவிக்கும் மருந்துகள் (Current & Previous Medications)
- Clinical Information

மேற்குறிப்பிட்ட தகவல்களை வழங்க மருந்தினை சிபார்சு செய்யும் மருத்துவர் கைச்சாத்திட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

தேவையான மருந்து நோயின் கடுமை ஆகிய இரண்டினையும் அடிப்படையாக வைத்து இத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த அரச மருந்தாளர்கள், விசேட மருத்துவ குழுவின் பரிசீலனையினை தொடர்ந்து 3 நாளிலிருந்து 6 கிழமைக்குள் மனிதாபிமான அடிப்படையில் முடிவு பண்ணுவார்கள்.

**மாகாண அரசின் திட்டங்களின் கீழ் இலவசமாக மருந்துகள் வாங்க முடியாதவர்களுக்கு வேறு வழி எது?**

கனடாவில் இலவசமாக மருந்துகள் வாங்கும் திட்டத்தில் சேர்ந்து கொள்பவர்கள் எவரும், அவர்கள் குடியிருக்கும் மாகாணத்தில் அவ் அரசு வழங்கும் "மருத்துவ அட்டை" (OHIP Card) வைத்திருப்பவராக இருத்தல் வேண்டும்.

மாகாண அரசின் "மருத்துவ அட்டை" (OHIP Card) இல்லாதவர்களுக்கு மத்திய அரசு இன்னொரு திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றது.

"மத்திய அரசின் இடைக்கால மருத்துவ திட்டம்" (Interim federal health program) என்னும் பெயரில் நடைமுறையில் இருக்கும் திட்டத்தில் பின்வரும் நிலைமையில் உள்ளோர் சேர்ந்து கொள்ள முடியும்.

- அகதி அந்தஸ்து கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலைமையில் இருப்போர்.
- கனடாவில் வசிக்கும் உரிமை இல்லாது தடுப்புக் காவலில் இருப்போர்.

மேற்குறிப்பிட்ட நிலைமையில் அடிப்படை மருத்துவ வசதிகள், மருந்து வசதிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

**மாகாண & மத்திய அரசின் ஆதரவு மருந்துகள் வாங்கும் திட்டத்தினுள் சேர முடியாதவர்களுக்கு வேறு தீர்வு என்ன?**

இருவகையில் தீர்வுகளை காணலாம்.
1. தொழில் செய்யும் இடங்களில் ஊழியர்களுடன் சேர்ந்த குழுவான மருத்துவ காப்புறுதி திட்டம். (Group medical Insurance contributed by employer)

2. நேரடியாக முகவர் மூலம் மருந்துகளுக்கான காப்புறுதி திட்டம் காப்புறுதிகளிலிருந்து பெற்று வைத்திருப்பது. (Individual private drug plan) ஆனால் இதற்கு செலுத்தும் கட்டணம் என்பது அதிக மாகவே இருக்கும்.



TBC Toronto Business College
கணக்கியலின் கல்வியின் ஓர் முதன்மை நிறுவனம்
Learning Today... Leading Tomorrow



ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks Diploma
Work as Account Payable , Accounts Receivable , Book Keeper Etc.
Many Jobs are available

EARLY CHILDCARE ASSISTANT (ECA)
40 Weeks Diploma
Accredited by the NACC
Work as Childcare Assistant , Childcare Worker Etc.
Immediate Job Opportunities

PERSONAL SUPPORT WORKER (PSW)
28 Weeks Certificate
Accredited by the NACC
Work as Support Worker , Care Giver , Personal Attendant , Etc.
Immediate Job Opportunities

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma
Work as Account Payable , Accounts Receivable , Book Keeper Etc.
Jobs available in plenty

FOOD SERVICE WORKER (FSW)
17 Weeks Diploma
Work as Food Preparer,Kitchen Helper, Food Service Counter Attendant

SECOND CAREER
Candidates Welcome

GOVERNMENT GRANT
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ மூன்று ஆண்டுக்குள் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefit பெற்றவர்கள் அரசாங்க நன்கொடையாக $28000 or more பெறலாம் திருப்பி செலுத்தத் தேவையில்லை
● Certain conditions may apply

PART TIME COURSES
Windows 2010, Word 2016, Excel 2016
Power Point 2016 , Access 2016
Quick Books 2017 Sage 50 Accounting 2017 & Sage 300 2017
Firstaid & CPR , Food Handler Certifcation

● 100% Instructor Led Training ● Small Class Sizes
● Placement Assistance ● Ample Free Parking

☎ 416-291-5155 / 416-500-5300 ☎
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# ரொறன்ரோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

உறுப்பினர்களுக் கான அலுவலக நிர்வாக செலவுகள் மட்டும் $23 மில்லியன் ஆகும். ஒரு நகரசபை உறுப்பினரிற்கான வருடாந்த சம்பளம் $112,000. இத்துடன் அவரது அலுவலக நிர்வாகச் செலவுகள் மேலதிகமாக வழக்கப்படுகிறன. இம் மேலதிக செலவுகளில் விளம்பரச் செலவு,




போக்குவரத்துச் செலவு, அவர்களது உதவி யாளர்களுக்கான சம்பளம், வாகனச்செலவு, நகரசபை தொடர்பான கூட்டச்செலவுகள், விருந்துச்செலவுகள் உட்பட பலவகைப்பட்ட அலுவலக நிர்வாகச் செலவுகள் அடங்கும்.

CBC ஊடகத்தின் தகவல் ஒன்றில் சில நகர-சபை உறுப்பினர்கள் $200,0000இற்கு மேல் அலுவலக நிர்வாகச் செலவுகளைப் பெறுவதாகவும் இது குறித்து கருத்துத் தெரிவித்த ரொறொன்ரோ நகரசபை உறுப்பினர் Joe Mihevc ஒன்ராரியோ மாகாண அரசு தான் உட்பட எல்லா நகர-சபை உறுப்பினர்களின் நிர்வாகச் செலவினங்களை மூன்றாம் நடுநிலை-நிறுவனம் ஒன்றால் அவதானிக்க வேண்டும் என 2018 ஏப்ரல் 09இல் தெரிவித்திருந்தார்.

ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வட்டாரங்களின் எல்லையை கனேடிய நாடாளுமன்ற மற்றும் ஒன்ராரியோ நாடாளுமன்ற தொகுதியின் எல்லையாக மாற்றியமைக்க வேண்டும் எனப்பலகாலமாகக் குரல் கொடுத்து வந்த ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் Jim Karygiannis ஒன்ராரியோ முதல்வரின் இந்த அறிவிப்பை மிகவும் தீவிரமாக ஆதரித்து ஊடகங்களில் தனது கருத்துக்களை வெளியிட்டுவருகிறார்.

ரொறன்ரோ நகரசபை பரப்பளவில் 2.73 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். 47 வட்டாரங்களைக் கொண்ட நகரசபை சராசரி 62,082 பேரை ஒவ்வொரு வட்டாரத்திலும் கொண்டிருக்கும். ஆனால் 25 தொகுதி களைக் கொண்ட புதிய நகரசபை சராசரி 109,262 பேரை ஒவ்வொரு தொகுதியிலும் கொண்டிருக்கும்.

அமெரிக்காவின் Los Angeles நகரம் 4 மில்லியன் சனத்தொகையைக் கொண்டது. அதன் நகரசபையில் நகரமுதல்வரை விட 15 உறுப்பினர்களே உள்ளனர். அதாவது 266,651 பேருக்கு ஒரு நகரசபை உறுப்பினர் இருக்கின்றார். இதேபோல் அவுஸ்திரே-லியாவின் Brisbane நகரிலும் 2.35 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். அங்கு நகரமுதல்வரைவிட 26 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர்.

புதிய உள்ளூராட்சி மன்றச்சட்டம் 2018 ஒகஸ்ட் 14இல் அமலுக்கு வந்தபடியால் வேட்பாளர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் திகதியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் நகரசபைக்கான தேர்தல் நடை பெறும் 2018 ஒக்ரோபர் 22ஆம் திகதியில் எந்த மாற்றமும் இல்லை.

நகர முதல்வருக்கான வேட்பாளர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் தினம் 2018 யூலை 27 ஆகும். இத்திகதியிலும் எந்த மாற்றமும் இல்லை.

நகரசபை உறுப்பினர்களுக்கான வேட்பாளர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் திகதி 2018 செப்ரெம்பர் 14 ஆக மாற்றப்பட்டுள் ளது. நகரசபை உறுப்பினர்களுக்கான வேட்பாளர் மனுவை 2018 யூலை 27இற்கு முன்னர் தாக்கல் செய்தவர்கள் மீண்டும் அவர்கள் வேட்புமனுவை 2018 செப்ரெம்பர் 14ஆம் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யவேண்டும்.

ரொறன்ரோ நகரசபையில் ஒன்ராரியோ மாகாண அரசின் Bill 5 சட்டமூலம் தொடர்பாக நடந்த விவாதத்தில் 17 நகர-சபை உறுப்பினர் ஒன்ராரியோ முதல்வரின் நகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைப்பதை ஆதரித்தனர். 24 நகரசபை உறுப்பினர்கள் இந்த நகரசபை உறுப்பின ரைக் குறைக்கும் திட்டத்தை எதிர்த்தனர்.

ஒன்ராரியோ நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவியும் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவியுமான Andrea Horwath உரையாற்றும் போது ஒன்ராரியோ முதல்வரின் இந்தத் திடீர் அறிவிப்பை ஜன-நாயக மரபை மீறும் செயல் எனக்கூறி வன்மையாக எதிர்த்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் முதல்வர் தன்னுடைய இந்தத்திட்டத்தை ஏன் ஒன்ராரியோ பொதுத் தேர்தல் நடைபெற முன்னர் கூறவில்லை என்றும் கேட்டார்.

2018 ஒகஸ்ட் 20இல் ரொறன்ரோ நகரசபை ஒன்ராரியோ மாகாண அரசின் இந்த நகர-சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்கும் திட்டத்திற்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கு நகரசபையின் சட்ட ஆலோசர்களைக் கேட்க வேண்டும் என 27-15 வாக்கு வித்தியாசத்தில் பிரேரணை ஒன்றை கொண்டு வந்து நிறைவேற்றினர்.

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

# மார்க்கம் ஏழாம் வட்டார தமிழ் வேட்பாளர் அறிமுகக்கூட்டம்



ஒகஸ்ட் 19ஆம் திகதி காலை எட்டு மணிக்கு மார்க்கம் ஏழாம் வட்டாரத்திலுள்ள சதேர்ண் அரோமா (Southern Arroma) உணவகத்தில், மார்க்கம் ஏழாம் வட்டார தமிழ் வேட்பாளர் அறிமுக கூட்டம் நடைபெற்றது. மார்க்கம் ஏழாம் வட்டாரத்தில் ஐந்து தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களது பெயர் விபரங்கள் கீழே உள்ளன. இவர்களில் மூவர் சமூகமளித்திருந்தனர். இக்கூட்டத்தை தேடிப்பார் இணையமும், தேசியம் சஞ்சிகையும், ஊடகவியலாளர் லங்கதாசும் இணைந்து நடத்தினர். கூட்டம் காலை உணவுடன் ஆரம்பமானது. ஒரு சமூக நலன் நோக்கத்திற்காக தமது இடத்தை இலவசமாகக் கொடுத்து, வந்திருந்தோர் அனைவருக்கும் இலவச உணவளித்த சதேர்ண் அரோமா உணவகத்தினர் பாராட்டுக்கு உரியவர்கள். ஊடகவியலாளர் லங்கதாஸ் இக்கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தினார். சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கூட்டத்துக்கு சமூகம் அளித்திருந்தனர்.

வேட்பாளர்கள் கிள்ளிவளவன் செல்லையா, மலர்விழி வரதராஜா, சோதி செல்லா ஆகியோர் முதலில் தங்களை அறிமுகப்படுத்தி, தாங்கள் ஏன் தேர்தலில் போட்டியிடுகின்றோம், ஏழாம் வட்டார மக்களுடைய தேவைகள் என்ன என்பது பற்றிக் கூறினார்கள். பின்னர் ஊடகவியலாளர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட எண்ணின் பிரகாரம் கேள்விகள் கேட்டனர். நிகழ்ச்சி சமூக வலைத்தளங்களில் நேரடியாகவும் ஒளிபரப்பப்பட்டது. சோதி செல்லா கடந்த தடவையும் தேர்தலில் போட்டியிட்டவர். மலர்விழி வரதராஜா கடந்த தேர்தல்களில் வேறு வேட்பாளர்களுக்காகப் பிரச்சாரம் செய்துள்ளார். சமூக உதவி நிறுவனங்களில் நிதிப் பங்கீட்டு இலாகாவில் பணிபுரிந்துள்ளார். கிள்ளிவளவன் செல்லையா ஒரு பொறியலாளர். ஏழாம் வட்டாரத்தில் பணிபுரிந்துள்ளார். வீதிப் போக்குவரத்து, பாதுகாப்பு போன்ற விடயங்களில் நல்ல அறிவு கொண்டவர். இவர்களுடன் போட்டியிடும் மைக் இலகுப்பிள்ளை ஸ்ரீதரன், கீத்திகா லோகன் கணபதி ஆகியோர் கூட்டத்துக்கு சமூகமளிக்கவில்லை.

கூட்டத்தின் பின் பகுதியில் மார்க்கம் நகரின் மற்றைய வட்டாரங்களில் போட்டியிடுபவர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். ஐந்தாம் வட்டாரத்தில் போட்டியிடும் ஸ்ரீ சிவசுப்பிரமணியம், ஏழாம் வட்டாரத்தில் கல்விச்சபை உறுப்பினருக்காகப் போட்டியிடும் கவிதா செந்தில் ஆகியோர் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

ஒரு ஜனநாயக நாட்டில், ஒவ்வொரு குடிமகனுக்கும் தேர்தலில் போட்டியிட உரிமை உண்டு. ஆனால் ஒரு மொழி, ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பலர் ஒரே தேர்தல் தொகுதியில் அல்லது வட்டாரத்தில் போட்டியிடும் பொழுது, அந்த மொழிக் குடும்பத்துக்கு அல்லது அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கான பிரதிநிதித்துவம் இல்லாமல் போகலாம். போட்டியிடுபவர் ஒரு குறிப்பிட்ட சமூகத்துக்கான பிரதிநிதி அல்ல. அத் தொகுதியில் வாழும் அனைத்து சமூக மக்களின் பிரதிநிதி.

கூட்டத்தில் வழக்கறிஞர் ஒருவர் தமிழர், தமிழர் சார்பில் போட்டியிட வேண்டும் என்று கூறுவதைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள் எனக் கேள்வி கேட்டபோது, கிள்ளிவளவனும், மலர்விழியும் அது தவறானது எனத் தெரிவித்திருந்தனர். நீங்கள் மற்றைய சமூகத்தை அணுகும் பொழுது எவ்வாறு அறிமுகப்படுத்துவீர்கள் எனக் கேட்டபோது அவர்கள் தங்களது நோக்கம் பற்றியே கூறி அறிமுகப்படுத்தவதாகக் குறிப்பிட்டார்கள். தாங்கள் தமிழர் என அறிமுகப்படுத்தியதாகக் கூறவில்லை. இதில் வேட்பாளர்கள் தெளிவாக இருக்கின்றனர்.

கூட்டத்தை லங்கதாஸ் சிறப்பாக வழி நடத்தினார்.

ரொரன்ரோ மாநகரம் தவிர்ந்த பகுதிகளில் போட்டியிடும் தமிழர்கள்:

சாந்தா சுந்தரசன் (வட்டாரம் 3)
ஜெரமையா விஜயரட்ணம் (வட்டாரம் 5)
ஸ்ரீ சிவசுப்பிரமணியம் (வட்டாரம் 5)
மைக் இலகுப்பிள்ளை ஸ்ரீதரன் (வட்டாரம் 7)
கீத்திகா லோகன் கணபதி (வட்டாரம் 7)
கிள்ளிவளவன் செல்லையா (வட்டாரம் 7)
மலர்விழி வரதராஜா (வட்டாரம் 7)
சோதி செல்லா (வட்டாரம் 7)
கவிதா செந்தில் (கல்விச் சபை)
நிரன் ஜெயநேசன் (பிராந்திய கவுன்சிலர்)
இராஜசிறீ சிறிஸ்கந்தராஜா (பிராந்திய தலைவர்)
ருக்சன் பரா (கல்விச் சபை வட்டாரம் 4-5)
யுவனிதா நாதன் (கல்விச் சபை வட்டாரம் 7-8)
ஸ்கந்தா சிங்கராஜா (வோன் நகர பிராந்திய கவுன்சிலர்)
வினோத் குமார் மகேசன் (பிரம்ரன் மேயர்)


October 1, 2018
provincial election

Important dates

From September 10 to 27

**Enter your name on the list of electors or modify your entry**

Go to the address shown on the information card that you received in the mail. Be sure to bring one or more pieces of identification that, together, show your name, date of birth and address.

From September 21 to 27

**7 days for voting in advance**

Advance polling dates, times and locations are shown on the information card that you received in the mail. Be sure to bring one of the five required pieces of identification.

September 21, 22, 25, 26 and 27

**Register and vote at the same time**

Take one or several pieces of identification that, together, indicate your name, date of birth and address to the office of your division's returning officer. You'll find the address on the information card that you received in the mail.

All advance polling stations are accessible to individuals with reduced mobility.

October 1

**Election day**

You will receive a reminder card in the mail showing the address of your polling station on election day, along with the names of the candidates running in your electoral division. Be sure to bring one of the five required pieces of identification.

NEW! Text "REMINDER" to VOTEQC (868372) and receive a text message that will remind you to go vote on October 1.

**For more information:**

- Visit our website at www.elections.quebec;
- Contact us:
  - info@electionsquebec.qc.ca;
  - 1-888-ELECTION (1-888-353-2846).

TDD If you are deaf or hearing impaired, you can dial 1-800-537-0644, toll free.

**All votes are important.**
**In the provincial election, it's your vote!**

élections Québec

# இன்னல் நீக்கும் இயற்கை – 32



- அகணி -
authorakani@gmail.com

முதலியார் சு. திருச்சிற்றம்பலவர் அவர்கள் தொகுத்து வெளியிட்ட வைத்தியக் கைமுறைகள் என்ற நூலிலிருந்து வாசித்து அறிந்து கொண்ட விடயங்களை இந்த இதழில் குறிப்பிடலாம் என்று நினைக்கின் றேன். இந்தச் சிறுநூல் 1938ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஆனாலும் இன்றைக்கும் பயன்படக்கூடிய விடயங்களை அறிந்து கொள்ள முடிந்தது. வயிற்றுளைவு ஏற்படும் பொழுது செய்யக்கூடிய மருத்துவக் கைமுறைகள் பற்றி இந்த நூலில் வாசிக்க முடிந்தது. தொற்று நோய்களில் ஒன்றான இந்த நோய் பெருங்குடல் பகுதியில் ஏற்படுகின்றது. உடலில் ஏற்படும் சூடு, உணவு சமிபாடு அடையாமை போன்ற காரணங்களாலும் இந்த நோய் ஏற்படுகின் றது. மலச்சிக்கல், சீதம் போதல், வாய்வுக் கோளாறு, வயிற்றில் ஏற்படும் பூச்சி போன்ற சிக்கல்கள் இந்த நோயுடன் தொடர்புபடுகின்றன. வயிற்றில் வலியேற் பட்டு அடிக்கடி வயிற்றிலிருந்து மலம் போய்க்கொண்டிருந்தால் வயிற்றுளைவுக் கான அறிகுறியாகக் கருதமுடியும். அப்பொழுது ஒரு அவுன்ஸ் ஆமணக்கெண் ணையைக் குடிக்கக் கொடுத்து கீழுள்ள முறைகளைச் செய்துவர வயிற்றுளைவு குணமாகும் என்று கூறப்படுகின்றது.

புளித்த தயிரைச் சுடுசாதத்தில் கலந்து உண்ணுதல், வெங்காயத்தை நெய்யில் பொரித்து சோற்றில் கலந்து உண்ணுதல் போன்றவை பயனளிக்கும். நோய் கடுமை யாக இருந்தால் காலம் தாமதிக்காது மருத் துவரை நாடவேண்டும். அரைமுற்றலான விளாங்காயை நன்றாகத் துருவியெடுத்து அதில் இருமடங்கு தேங்காய்த் துருவல் சேர்த்து கசக்கிப் பிழிந்து வடிகட்டிய சாற்றை மூன்று தடவை குடிக்க வயிற் றுளைவு சுகமாகும். வெந்தயத்தை நீர்விட்டு அரைத்து சமவளவில் தேன் கலந்து குடிக்க வயிற்றுளைவு சுகமாகும். முற்றிப் பழுத்த மாதுளம்பழச் சாற்றில் கற்கண்டு கலந்து குடித்தால் வயிற்றுளைவு சுகமாகும்.

சலக்கடுப்பு, சலம் போகும்பொழுது எரிவு எற்படுதல் போன்ற பிரச்சினைகளுக்கு பழப்புளியைக் கரைத்துக் குடித்தால் பயன் கிடைக்கும். ஒரு மேசைக்கரண்டி நல்லெண் ணையில் இரண்டு கரண்டி தண்ணீர் கலந்து குடித்தால் பயன் கிடைக்கும். சல அடைப்பு ஏற்படும் பொழுது கற்றாழஞ் சோறு, சந்தனம் ஆகியவற்றைக் கலந்து தொப்பிள் பகுதியில் பூசினால் சலவடைப்பு குறையும்.

மூலக்கடுப்பு ஏற்பட்டால் வாழைப்பூவைத் துவைத்து சாறு பிழிந்து அதில் ஒரு பாக் களவு சீரகத்தை அரைத்துப் போட்டுக் குடித்தால் பயன் கிடைக்கும்.

பல்லில் ஏற்படும் சூத்தையினால் பல்லில் கூச்சம் ஏற்படும் பொழுது கராம்புத் தைலத்தை எடுத்து பஞ்சில் தோய்த்து பல்லுக்குள் வைத்து வர கூச்சம் குறையும். பித்தக் கொதிப்பால் தலையிடி ஏற்படும் பொழுது கீழ்க்காய் நெல்லியிலையை வாயில் போட்டு மென்று விழுங்கினால் தலையிடி குறையும். நீர்ப்பிடிப்பால் தலை யிடி ஏற்படும்பொழுது ஓமத்தை அரைத்து தலையில் தேய்த்து வெந்நீரில் முழுகினால் தலையிடி குறையும்.

அதிக யோசனையால் தலையிடி ஏற்படும் பொழுது நல்ல காற்றுள்ள இடத்தில் நடக்க குணமாகும். வாய்வு காரணமாக ஏற்படும் தலையிடிக்கு பால் சாம்பிராணியையும், அதன் அரைப்பங்கு மிளகும் கலந்து அரைத்து சீலையில் தடவிக் கொழுத்தி வரும் புகையை மூக்கினால் இழுக்க சுகம் வரும். மூளையில் வாய்வு கூடி ஏற்படும் மண்டைக்குத்துக்கு கொதிநீரில் கம்பளியை அவித்து பிழிந்து தாங்கக்கூடிய சூட்டோடு ஒத்தணம் கொடுக்க சுகமாகும்.

ஜலதோசம் ஏற்பட்டால் ஊதுமாக்கூழைக் காய்ச்சிக் குடித்தல் நல்லது. இரவில் வெந்நீரில் சிறிது நேரம் காலை வைத்து இருந்து விட்டு, காரமாகச் செய்த மிளகுநீர் இரசம் அருந்தி கம்பளியால் போர்த்துப் படுக்க வியர்வை உண்டாகி ஜலதோசம் குறையும். ஒடியல் கூழைக் குடித்தாலும் ஜலதோசம் கட்டுப்படும்.

அடுத்து வெள்ளரிக்காயின் (Cucumber) மருத்துவப் பயன்களைப் பற்றி அறிந்து கொள்வோம். வெள்ளரிக்காய் உடலுக்கு நல்ல குளிர்ச்சியைத் தரும். பித்த நீரை வெளியேற்றக் கூடியது. சிறுநீர்க் கோளாறு, இரைப்பைக் கோளாறு ஆகியவற்றைக் குணமாக்கும். மயக்கம் ஏற்பட்டால் வெள்ளரிக்காய்ச் சாறு குடித்தால் மயக்கம் நீங்கும். காலையில் வெள்ளரிக்காய்ச் சாற்றைக் குடித்து வந்தால் உடலில் நல்ல பயன்கள் ஏற்படும். இது மிகவும் கலோரி குறைந்ததும் அதிகளவு நீர்த் தன்மை கொண்டதுமான காய்கறி. வெள்ளரி. ரசத்தை தொடர்ந்து சாப்பிட உடல் உடை குறையும்.




வெள்ளரியில் சோடியம், கல்சியம், இரும்பு, பொஸ்பரஸ், கந்தகம், மக்னீசியம், சிலி கன், குளோரின், பொட்டாசியம் ஆகியவை உள்ளன. இரத்தத்தில் அதிகளவு சிவப் பணுக்களை உருவாக்கும். புகைபிடித்த லால் ஏற்படும் பாதிப்பை வெள்ளரிக்காய் குறைக்கும். இதில் அதிகளவு நார்ச்சத்து உள்ளது. நுரையீரல் கோளாறு, இருமல் உள்ளவர்கள் அதிகம் வெள்ளரிக்காய் சாப்பிடக்கூடாது என்று சொல்லப்படுகிறது. வெள்ளரிக்காய், வெள்ளரிப்பழம், வெள்ளரி விதை, வெள்ளரி இலை அனைத்திலும் நிறைந்தளவு மருத்துவக் குணங்கள் உள்ளன.

வெள்ளரிக்காய் சாப்பிட்டு வர நோய்கள் வராமல் தடுக்கும் சக்தி உடலில் ஏற்படும். புற்று நோயும் வராமல் தடுக்கும் சக்தி வெள்ளரிக்கு உண்டு. ஏனைய உணவு களால் ஏற்படும் கலோரியை எரிக்கும் தன்மை இதற்கு உண்டு. வாயில் சிறிது நேரம் வெள்ளரிக்காயை வைத்திருக்க வாயில் ஏற்படும் துர்நாற்றம் நீங்கும்.

வெள்ளரிக்காய் சாப்பிட்டால் மலச்சிக்கல் நீங்கும். வயிற்றுப்புண் உள்ளவர்கள் வெள் ளரிக்காயைச் சாப்பிட்டு வரக் குணமாகும். குதிவாதம் போன்ற பிரச்சினைகளுக்கும் வெள்ளரி சிறந்த மருந்தாகிறது. வெள்ளரி இலைகளைக் காயவைத்துப் பொடியாக்கி சீரகம் சேர்த்து வறுத்து சாப்பிட்டு வந்தால் தொண்டையில் ஏற்படும் சிக்கல்கள் நீங்கும். ஆண்மைக்குறைவைப் போக்க வெள்ளரி விதை உதவுகிறது. குழந்தைகள் சிறுநீர் கழிக்க சிரமப்படும்பொழுது வெள்ளரி விதையை அரைத்து அடி வயிற்றில் பூசினால் நிவாரணம் கிடைக்கும். வெள்ளரிப்பழம் சாப்பிடுவதால் கர்ப்பைப் பிரச்சினை, மாதவிடாய்க்கோளாறு ஆகி யவற்றுக்கு நிவாரணம் கிடைக்கும். தினமும் ஒரு வெள்ளரிக்காய் சாப்பிட்டு வந்தால் நிறைந்த பயன் கிடைக்கும். உடலின் சருமமும் இளமையாக இருக்கும். வயிற்றுப் பகுதியில் உள்ள கொழுப்புக் கரையவும் வெள்ளரிக்காய் உதவும். வெள் ளரிக்காயை தினமும் சாப்பிட்டு நிறைந்த பயனைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை இங்கே குறிப்பிட்ட விடயங்கள் உறுதிப்படுத்துகின்றன.

அன்பான விளம்பரம்
வாசகர்களே!

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப் பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோ சனையை மேற்கொள்ளுங்கள் என்று வலி யுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற் கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

## இந்திய...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

பாகிஸ்தான், வட கொரியா, இஸ்ரேல் மற்றும் இந்தியா. பாதுகாப்புத் துறையில் வல்லரசு நாடாக இந்தியாவை மாற்ற உதவியது வாஜ்பாய் காலத்தில் மேற் கொள்ளப்பட்ட அணு ஆயுத சோதனை தான். இன்றுவரை தெற்காசிய பிராந்தியத்தின் தவிர்க்க முடியாத சக்தியாக, இந்தியா விஸ்வரூபம் எடுக்கக் காரணமாக இருந்ததும், பொக்ரானில் மீண்டும் சிரித்த புத்தர்தான்.

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service – Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# இந்திய முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய்

ஜூன் 11, 2018 முதல் ஒன்பது வாரங்களாக டில்லியின் அகில இந்திய மருத்துவ கழக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் வாஜ்பாய். அவர் August 16, 2018 இல் மரணம் அடைந்தார்-

மத்திய பிரதேச மாநிலத்தின் குவாலியர் நகரில் டிசம்பர் 25, 1924இல் பிறந்தவர் வாஜ்பாய். அவர் ஒரு நல்ல கவிஞரும் கூட. தாயார் பெயர் கிருஷ்ணா தேவி, தந்தையின் பெயர் ஷியாம் லால் வாஜ்பாய். அடிப்படையில் வாஜ்பாய் ஆர்எஸ்எஸ் தொண்டர். 1977இல் அன்றைய மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்த ஆட்சியில் ஜனசங்கம் கட்சியின் பிரதிநிதியாக, வெளி யுறவுத்துறை அமைச்சராக இருந்தவர் வாஜ்பாய். பின்னர் பாரதீய ஜனதா கட்சி 1980இல் முறைப்படி தொடங்கப்பட்ட போது அதன் நிறுவன ஸ்தாபகராக இருந்தவர் வாஜ்பாய். 40 ஆண்டுகளுக்கும் மேலாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர் வாஜ்பாய். பத்து முறை மக்களவை உறுப்பினராகவும், இரண்டு முறை மாநிலங் களவை உறுப்பினராகவும் இருந்தவர் வாஜ்பாய். 1996இல் 13 நாட்களும், 1998 பெப்ரவரி-1999 ஏப்ரல்வரை 14 மாதங்களும் பிரதமராக இருந்தவர். வாஜ்பாயின் இந்த ஆட்சியை, ஒரு வாக்கில் கலைத்த பெருமை மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை சேரும். ஆனால் 1999 செப்ரெம்பரில் நடந்த மக்களவை தேர்தலில் வென்று 2004 மே மாதம் வரையில், அதாவது கிட்டத்தட்ட முழு ஆட்சிக் காலத்தையும் அனுபவித்த வர். காங்கிரஸ் அல்லாத ஒரு கட்சியின் பிரதமர், ஐந்தாண்டுகள் தொடர்ந்து இந்தியாவை ஆண்ட பெருமைக்கு சொந்தக்காரர் அடல் பிஹாரி வாஜ்பாய் மட்டும்தான்.

1999 - 2004 ஆட்சியில் 24 கட்சிகளை வைத்து நாட்டை ஆண்டவர் வாஜ்பாய். இது ஒரு மிகப் பெரும் சாதனைதான். இதற்கு முக்கிய காரணம், எல்லோரையும் அரவணைத்து செல்லும் வல்லமை, பிரத மர் இந்திரா காந்தி 1975 - 1977 கால கட்டத்தில் வாஜ்பாயை கைது செய்து சிறைக்கு அனுப்பினார். ஒன்றரை ஆண்டு கழித்து சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வந்தார். 1977 தேர்தலில் வென்று மந்திரி ஆனார். ஆனால் தனிப்பட்ட முறை யில் வாஜ்பாய்க்கு இந்திரா காந்தி மீது எந்த கோபமும் இல்லை. 1980 ஜூன் 23இல் இந்திரா காந்தியின் இளைய மகன் சஞ்சய் காந்தி விமான விபத்தில் இறந்த போது, அந்த செய்தி அறிந்த அடுத்த பத்து நிமிடத்தில் வாஜ்பாய் இந்திரா காந்தி யின் வீட்டுக்கு சென்று அவருக்கு ஆறுதல் சொன்னார்.




மூன்று முறை பிரதமராக இருந்திருக்கிறார் வாஜ்பாய். 1996இல் 13 நாட்கள் மட்டும் பிரதமராக இருந்தார். பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது என்பது தெளிவாகத் தெரிந்த காரணத்தால், வாக்கெடுப்புக்கு போகாமலேயே அவரே ராஜினாமா செய்து விட்டு சென்றார். இரண்டாவது தடவை 14 மாதங்கள், பெப்ரவரி, 1998 முதல் ஏப்ரல் 17, 1999 வரையில் பிரதமராக இருந்தார். பின்னர், 1999 செப்ரெம்பர் முதல் மே, 2004 வரையில் பிரதமராக இருந்தார். வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில்தான் 2002 மே மாதம் முதல் ஜூன் மாதம் வரையில் குஜராத்தில் இனப்படுகொலைகள் நடந்தன. அப்போது மோடி குஜராத்தின் முதலமைச்சர். நேரில் சென்று குஜராத் நிலவரத்தை பார்த்த பின்னர் வாஜ்பாய் சொன்ன கருத்து, குஜராத்தை ஆள்பவர்களுக்கு (மோடி) ராஜதர்மா வேண்டும் என்பதுதான். "இந்தப் படுகொலைகளுக்கு பிறகு நான் எந்த முகத்துடன் வெளிநாடுகளுக்கு செல்லுவேன்" என்று வெளிப்படையாகவே வாஜ்பாய் ஒரு முறை கூறினார்.

அமெரிக்காவுக்கு தெரியாமல் பொக்ரானில் அணு குண்டு சோதனையை வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர் தான் முன்னாள் பிர-தமர் அடல் பிகாரி வாஜ்பாய். 1998ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் திகதி இந்திய வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்வு தீர்மானிக்கப்பட்டது. இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத் தின் பொது இயக்குனராக அப்போது பதவி வகித்த விஞ்ஞானி அப்துல் கலாம் மற்றும் பிரதமர் வாஜ்பாய் ஆகிய இருவரும் ஒரு நீண்ட இரகசிய ஆலோசனை மேற் கொண்டனர். இந்தியாவின் அண்டை நாடுகளான சீனாவும், பாகிஸ்தானும் அணு ஆயுத வல்லமையில் அச்சுறுத்திக் கொண் டிருந்த நிலையில், இந்தியா மட்டும் கைகட்டி வாய் பொத்தி பார்க்க வேண்டுமா என்ற கேள்வியை அப்போது அந்த இரு வரும் ஒருவரை ஒருவர் பார்த்து கேட்டுக் கொண்டனர். நடத்துங்கள் அணுகுண்டு சோதனையை நடத்த நமது விஞ்ஞானி குழுவிடம் திறமை உள்ளது. தயார் என்றால் நாங்கள் செய்து முடிக்கிறோம், என்றார் அப்துல் கலாம். உடனே பச்சைக் கொடி காட்டினார் வாஜ்பாய். அணு ஆயுதம், தனது பிறப்புரிமை என்ற எண் ணத்தில் இருந்த அமெரிக்கா மற்றும் அமைதி விரும்புவதாக கூறும் ஐரோப்பிய நாடுகள் பலவும் இந்தியா மீது பொருளா தார தடை விதிக்கக் கூடும். பாகிஸ்தான் எல்லையில் அத்துமீறல் செய்யக்கூடும் என்பது போன்ற பல்வேறு சிக்கல்கள் இருப்பினும் துணிச்சலாக இந்த முடிவை எடுத்தார் வாஜ்பாய்.

1974ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி ராஜஸ்தான் மாநிலம் பொக்ரானில் இந்தியா முதல் முறையாக அணுகுண்டு சோதனையை நடத்தியது. அப்போது இந்திரா காந்தி பிரதமராக இருந்தார். புத்த பூர்ணிமா அன்று நடத்தப்பட்ட இந்த சோதனை, "சிரிக்கும் புத்தர்" என்றும் அழைக்கப்பட்டது. இதன்பிறகு அமெரிக்க நெருக்கடியை சந்தித்து வந்த இந்தியா, வாஜ்பாய் மற்றும் அப்துல் கலாம் கூட்டு முயற்சியால் 1998ஆம் ஆண்டு மே 11ஆம் திகதி அதே பொக்ரானில் அணுகுண்டு சோதனை நடத்தியது. ஆம், புத்தர் மீண் டும் சிரித்தார். ஒப்ரேஷன் சக்தி என்ற பெயரில் மூன்று முறை குலுங்கியது பூமி. 45 கிலோ தொன் ஹைட்ரஜன் குண்டை இந்தியா பரிசோதனை செய்தபோது, பாலைவனப் பகுதிகள் குலுங்கின. பல நாடுகளும் நில நடுக்கம் என்றுதான் ரிக்டர் அளவுகோலை பார்த்து நினைத்துக் கொண்டன. ஆனால் வல்லரசான அமெரிக்காவின், உளவு செயற்கைக் கோள் கழுகுப்பார்வையில் இருந்து இந்த சோதனையை மிக நேர்த்தியாக தப்புவிக்க செய்ததுதான், இந்திய விஞ்ஞானிகள் குழுவின் மற்றொரு பெரும் சாதனை. இந்தியா மீது போடப்பட்ட 30 ஆண்டு கால அணு ஆராய்ச்சித் தடைகளையும் அந்த குண்டு முழுவதுமாய் சிதறடித்தது.



பிரதமர் வாஜ்பாய் அளித்த பிரஸ் மீற்றுக்கு பிறகுதான், உலக நாடுகளுக்கு இந்தியா அணு குண்டு சோதனை நடத்தியது தெரிந்தது. அமெரிக்கா தனது மறைமுக வல்லாதிக்கத்தை இந்தியா மீது செலுத்திக் கொண்டிருந்த காலகட்டம் அது. அமெரிக்க உளவு அமைப்பான சிஐஏ இந்திய பாதுகாப்பு அமைப்பின் நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்து வந்தது. இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் தொலைபேசிகள் கூட ஒட்டுக் கேட்டதாக ஒரு தகவல் உண்டு.

அமெரிக்க உளவாளிகளிடமிருந்து தப்பிக்க, இந்திய விஞ்ஞானிகள் தங்கள் தொலை பேசி உரையாடலில் கூட பல்வேறு கோட் வேர்ட்டுகளை பயன்படுத்தினர். "தாஜ் மஹால்", "கும்பகர்ணன்", "சியரா" போன்ற வார்த்தைகளை பயன்படுத்தி கருத்துக் களை பரிமாற்றம் செய்தனர். அமெரிக்க செயற்கைகோள் கண்காணிப்பில் இருந்து தப்புவதற்காக, அப்துல் கலாம் உள்ளிட்ட விஞ்ஞானிகள்கூட ராணுவத்தினர் அணியும் சீருடை அணிந்துதான் பொக்ரான் சென்று வந்தனர். பெரும்பாலான பணிகள் இரவில் தான் மேற்கொள்ளப்பட்டன. ரகசியம் காத்த குழு அணுகுண்டை சுமந்துகொண்டு பெங்களூரிலிருந்துதான் தொலைதூரத்தில் உள்ள ராஜஸ்தானுக்கு லொறி சென்றது. இந்திய உளவு அதிகாரி ஒருவர் லொறி ஓட்டிச் சென்றார். இவ்வாறு ஒப்ரேஷன்கள் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டன.

பிரதமர் வாஜ்பாய், அப்துல் கலாம், அரசில் முக்கிய அங்கம் வகித்த அத்வானி, ஜோர்ஜ் பெர்னாண்டஸ், ஜஸ்வந்த் சிங், அணுசக்தி ஆணையராக இருந்த ராஜ கோபால சிதம்பரம் உள்ளிட்ட மிக சொற்பமானவர்களுக்கு மட்டுமே அணு குண்டு சோதனை நடத்தப்போவது முன்கூட்டியே தெரிந்திருந்தது. வல்லரசு இந்தியா ஸ்ரொக்கோம் சர்வதேச அமைதி ஆய்வு இன்ஸ்டிடியூட் அறிவிப்புப்படி, உலகிலேயே 9 நாடுகளிடம்தான் அணு ஆயுதங்கள் உள்ளன. அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா, சீனா,

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்...)

# Math World

## Since 1989

# Knowledge is not enough to teach, an experience with it makes a difference

## More than 28yrs of teaching experience; Certainly high quality skills ... for high performance

MATH WORLD
MOST ADVANCED TALENTED HELP

# MATH WORLD

MOST ADVANCED TALENTED HELP

Teaching Experience in MATH
For More Than 23 Years!

## SINCE 1989 (28+yrs)

Provides **FAST TRACK MATH** Programs

## Students Score in Math 90%+

**Guaranteed Results**

Proven Records!!

## ADVANCED FUNCTION & CALCULUS

**Gr 12**

* Students will complete the entire course in **ONE MONTH** at University standard level.
* This program will help students to preform at a very **HIGH PERCENTAGE**

## AP MATHS ➡ Gr9, Gr10 & Gr11

Students in this course will complete Math **ONE YEAR** ahead of their current grade level.

## THE MOST ADVANCED MATH PROGRAM ➡ G8-400

**Gr8**

* Students will be covering **G8, G9, G10, G11 & G12** in **TWO YEARS**

* Previous record produced **HIGHEST** Math standard

# 416-666-5515

“விண்ணளந்து வியந்து கொண்டிருக்கும் என்கண்கள், அனைத்துமளந்த எம்முன்னவர்களை அறிய விரிந்து கொள்கின்றன்.”

# கீழடி அகழ்வாய்வுகள்

## கிளறப்படும் உண்மைகள்-பன்முகப் பார்வை.



- கனி -
ptons@hotmail.ca
416.261.1348

சென்ற தடவை சுனாமி கடல்கோள் என்பவற்றின் பேதம் பற்றிக் கூறியிருந்தேன். இன்று இன்னொரு விடயத்துடன் தொடங்குகின்றேன். எங்களின் சொற்களைப் பாவியாது இன்னொரு மொழியின் சொல்லினைப் பாவிப்பதென்பது எங்களின் மொழிக்குச் செய்யும் முதற்துரோகமாகும். இது சம்பந்தமான ஒருவிடயத்தைக் கூற விரும்புகிறேன்.

தமிழர்களின் வானியல் அறிவிலே அந்நாட்களில் ஏழு கிரகங்கள் வானிலே உலவுகின்றன என்பது தெரிந்திருந்தது. அவை புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி என்பவற்றுடன் கதிரவன் (சூரியன்) சந்திரன் என்பவையாகும். மொழியாய்வாளர்கள் இந்தப் புதனும் சனியும் தமிழப் பெயர்கள் அல்ல, அவை சமஸ்கிருதப் பெயர்கள் என்று கூறித் தமிழர்கள் தங்களது வானியல் அறிவினை சமஸ்கிருதத்தின் மூலமே வளர்த்துக் கொண்டார்கள் என்று கூறி தமிழர்களின் அறிவியல் நிலையினை கீழே கொண்டு போனார்கள். உண்மையில் புதன் என்பதை நம்மவர்கள் அன்று ‘மால்’ என்றே அழைத்தார்கள். அதேபோல சனியைக் ‘காரி’ என்ற பெயரில்தான் நம்மவர்கள் அழைத்தார்கள். பின்னர் வந்த சமஸ்கிருதத்தின் மயக்கம் எங்களைப் புதன், சனி என்ற பெயர்களில் அவற்றை அழைக்க வைக்க, தமிழின் பழமை, சிறப்பு எல்லாம் மழுங்கடிக்கப்பட்டது. இன்றும் இதேபோலப் பல ஆங்கிலச் சொற்கள் தமிழை மேவி மறைத்து விட்டதை நான் கூறத் தேவையில்லை. இந்த விபரங்கள் இப்போது எங்களுக்குத் தெரிந்து விட்டதினால், இப்பிழையினைச் சரி செய்ய முயல்வோம்.

சரி, மீண்டும் கீழடி விடயத்திற்கு வருவோம். கிரகாமின் விடயங்கள் போன்ற பலவற்றைத் சிலர் தூசுதட்டி வெளிக்கொணர, ஆர்ப்பாட்டங்களும் சலசலப்புகளும் தமிழ் நாட்டில் ஏற்படத் தொடங்குகின்றன. சிறிய சிறிய அளவுகளில் கீழடி விவகார விளைவுகள், தமிழ்நாட்டில் ஆங்காங்கு கருத்தரங்குகளாகப் பேசப்படத் தொடங்கின. இவை எல்லாம் ஒரு சிறிய அளவினவைதான். எனினும் ஆர்வமுள்ள சில ஊடகவியலாளர்களினால் விபரம் காட்டுத்தீயெனப் பரவத் தொடங்கியது. நிலமையின் தார்ப்பரியத்தை உணர்ந்த மத்திய தொல்லியற்துறை கீழடியில் நான்காம் கட்ட அகழ்வாய்வுக்கு ஒத்துக் கொண்டது, சில சரி செய்தல்களுடன். தமிழக அரசும் கீழடி அகழ்வுகளில் அதிக ஈடுபாடு காட்டி வந்ததினால், கீழடி அகழ்வுகளின் உரிமம் முற்றாகவே தமிழ்நாட்டுத் தொல்லியற்துறையினருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

கீழடி அகழ்வாய்வுகளுக்கு அரசதரப்புகளில் ஒப்புதல்கள் கிடைத்தாலும் வேறு



சில இடைஞ்சல்கள் வந்தன. அகழ்வாய்வுகள் தொடங்கிய பின்னராக, கிழடியில், தென்னைகளின் தேங்காய் உற்பத்தித் திறன் குறைந்து விட்டது என்ற கருத்து வந்து விட்டது. மேலும் கீழடி ஒரு சுற்றுலாப் பகுதியாகவும் வரப்போவதால் தங்களின் தோப்புகளின் பராமரிப்புகளுக்கும் இடைஞ்சல் வந்துவிடும் எனவும் எண்ணி, தங்களுக்கு அரசினர் போதுமான அளவில் இழப்பீடுகள் தரவேண்டும் என்றும் கேட்கவும் தொடங்கினார்கள், சில தோட்ட உரிமையாளர்கள். இதனால் சில சமரசங்கள் இருபகுதியினருக்கும் இடையில் ஏற்பட்ட வேண்டி வந்ததாகவும் ஒரு கதை பரவலாக வந்தது. ஆனால் கீழடியின் விவசாயிகள் சங்கத் தலைவர், வி. வெங்கடசுப்பிரமணியன் அவர்கள், கீழடி விவசாயிகள் அகழ்வாய்வுக்கு எந்தவொரு இடைஞ்சலும் கொடுக்கவில்லை என்று கூறுகின்றார். ஆனாலும் நாலாம் கட்ட ஆய்வுகள் சற்றுத் தாமதமாகத்தான் தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

கலாநிதி சிவானந்தன் என்ற தொல்லியல் நிபுணரின் தலைமையில், 12 பேர் கொண்ட குழுவினரால் 2018ஆம் ஆண்டிற்கான ஆய்வுகள் இப்போது கீழடியில் நடந்து கொண்டிருக்கின்றன. 5.5 மெய்யிரம் (55 இலட்சம்) இந்தியா ரூபா செலவில், தமிழ்நாட்டின் தொல்லியற் துறையினர் இந்த நாலாம் கட்ட ஆய்வுகளைத் தொடங்கியுள்ளனர். கீழடியின் 110 ஏக்கர் பரப்பிலும் எதிர்காலத்தில் அகழ்வுகள் கட்டம் கட்டமாக விரிவுபடுத்தி நடத்தப்படும் என்கிறனர் இதுவரையில் 4000த்திற்கும் அதிகமான தொல்பொருட்கள் இந்த நாலாம் கட்ட அகழ்வுகளிற் பெறப்பட்டுள்ளன எனக் கூறுகின்றார்கள். அப்பொருட்களில், மருந்துரைக்கும் சட்டிகள் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது கீழடியில் வாழ்ந்தவர்கள் சுகாதர விடயங்களுடன், மருத்துவத்திலும் அதிக அக்றையுடன் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறதென ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

தமிழ்நாட்டின் தொல்லியற்துறையினர் இதிலே ஈடுபட்டிருப்பதால் கீழடி அகழ்வாய்வில் பல மாற்றங்கள் கிடைக்கலாம் என நம்பப்படுகிறது. முக்கியமாக, அகழ்வுகளில் அகழ்ந்தெடுக்கப்படும் தொல்பொருட்கள், தமிழ்நாட்டிலே உள்ள அருங்காட்சியகங்களில் வைக்கப்படும் என்பதும் கீழடியின் தொல்பொருட்கள் கீழடிக்கு அண்மையில் ஒரு அருங்காட்சியகம் அமைத்து அங்கே வைத்துப் பேணப்படும் என்றும், அத்துடன் தமிழ்நாட்டில் எவ்விடத்தில் அகழ்வுகள் செய்யினும் அவ்வவ்விடங்களில் அருங்காட்சியகங்கள் அமைத்துப் பொருட்கள் பாதுகாக்கப்படும் என்ற முடிவும் தமிழ்நாட்டரசால் முடிவு செய்யப்பட்டது.

கீழடி அகழ்வுகள் பொதுவாகவே ஒவ்வொரு வருடமும் பெப்ரவரியில் தொடங்கி, செப்ரெம்பர் முடிவுவரை வரையில் நடை-பெறும். செப்ரெம்பரின் பின்னர் அப்பகுதியில் மழை பெய்வதால், அகழ்வுகள் நிறுத்தப்படுவதுடன், அகழ்பரப்புகளில் மழை வெள்ளப் பாதிப்புக்கள் இருக்கக் கூடாது என்பதனால் அகழ்பரப்புகளை, அகழ்வாராய்ச்சிச் செயற்பாட்டு முறையில் பெரிய பெரிய தரப்பாள் துணிகள் போட்டு மண்ணால் மூடிவிடுவது வழக்கம். தொல்லியல் ஆய்வாளர்களின் சாதாரண நடைமுறையான இது, சாதாரண மக்களுக்கு அகழ்வாய்வுகள் நிறுத்தப்பட்டுவிட்டன, முடக்கப்பட்டுவிட்டது என்ற எண்ணத்தைக் கொடுக்கும். கார்த்திகை, மார்கழி, மாதங்களிற் கீழடிக்குச் சென்று பார்த்தால், எல்லாம் மண் போட்டு மூடப்பட்டுக் கிடக்கும். இதனைப் பார்த்து, கீழடியை மறைக்கிறார்கள் என்று கருதி ஆவேசப்பட்டவர்களும் பலர் உண்டு.

கீழடியின் கண்டு பிடிப்புகள் எங்களிடையே பல எதிர்பார்ப்புகளை, ஆவல்களைத் தூண்டி விட்டது என்றது என்னவோ உண்மைதான். ஆனால் அவற்றின் விளைவுகளும் பல இடைஞ்சல்களைப் பல தரப்பட்டவர்களுக்கும் கொடுக்கின்றன என்பதும் சற்றுக் கசப்பான உண்மைதான். எடுத்துக்காட்டாக, கீழடியில் வெறுமனே 4 ஏக்கர் பரப்பிலேதான் இதுவரையில் அகழ்வுகள் செய்யப்பட்டுள்ளன. அதனைக் கொண்டு ஒரு காத்திரமான முடிவினை ஆகழ்வாய்வாளர்களாற் கூற முடியாது. தங்களது அனுமானங்களையே கூற முடியும். கீழடியில் ஒரு நகர வாழ்க்கை இருந்திருக்கலாம் என்ற அவர்களது உத்தேசத்தைப் பெரிதாக்கி, அங்கே ஒரு நகரக் குடியிருப்பு இருந்தது என்ற முடிவினை எடுப்பதும் நல்லதல்ல. இன்னமும் 100 ஏக்கர் பரப்பில் அகழ்வுகள் செய்யப்பட்டு, ஆய்வுகள் நடத்தப்பட உள்ளன. அவற்றிக்கு இடைஞ்சலாக எமது நடவடிக்கைகள் இருக்கக் கூடாது. இப்பவே, அகழ்வாய்வாளர்களிடம் இங்கே ஒரு நகரம் இருந்தது என்று கூறுகிறீர்களா? அது எவ்வளவு பழமையானது? என்பது போன்ற கேள்விகளைக் கேட்டு அவர்களைச் சங்கடப்படுத்தக் கூடாது. ஆர்வக் கோளாறினாலோ அல்லது விபரத்தை மற்றவர்களை விட நாங்கள் முன்னராகத் தெரிந்து கொள்ள வேண்டும்

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

metromath
LEARNING CENTRES


MATH & READING & WRITING.

CALL TO REGISTER TODAY!

**Metromath Learning Centres** provide affordable, comprehensive math, reading and writing programs to students from grades 1-8. Using a proven Accelerated Learning Program, Metromath applies effective teaching strategies geared towards each student's individualized learning approach.

AN INDIVIDUALIZED APPROACH TO ACADEMIC GROWTH!

647 977 9749 | WWW.METROMATH.CA | 3195 SHEPPARD AVE. E




# அரசியல்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

மக்களின் வாழ்வாதாரம் இன்னும் மேம்படுத்தப்படவில்லை. இப்போது அதற்கானதொரு வாய்ப்பு கிட்டுமானால் அதனை சரியாகப் பயன்படுத்திக் கொள்வதுதான் புத்திசாலித்தனமானது.



போரை முடிவிற்கு கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ பாதைகளை செப்பனிடுவது, கட்டடங்களை அமைப்பது போன்ற அபிவிருத்திப் பணிகளை மட்டுமே மேற்கொண்டார். இவ்வாறான அபிவிருத்திப் பணிகளால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வதாரம் சிறிதும் மேம்படவில்லை என்பதுதான் உண்மை.

இனிமேல் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமான திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இதற்கான ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்க வேண்டிய பொறுப்பும் கடமையும் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு உள்ளது.

தற்போது அமைக்கப்பட்டுள்ள செயலணியின் மூலமாக மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கான பாரிய நிதியை வெளிநாடுகளே வழங்க முன்வந்துள்ளன. எனவே, மத்திய அரசாங்கத்தின் தனிப்போக்கான திட்டங்களுக்கு இடமளிக்காமல் முறையான திட்டங்களை வகுத்து செயற்பட வடக்கு கிழக்கில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், முதலமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் உட்பட அனைவரும் ஒருமித்து முன்வரவேண்டும்.

குறித்த இந்த செயலணியை ஆரம்பத்திலேயே நிராகரிப்பது முறையாகாது. அதன் திட்டங்கள் தவறான வழியில் செல்லுமானால் அதனை மக்கள் முன்பும், சர்வதேசத்தின் முன்பும் வெளிப்படுத்திவிட்டு அதிலிருந்து வெளியேறுவதுதான் சிறந்த செயற்பாடாக அமையும்.

அரசியல் தீர்விற்கான முயற்சியும், அபிவிருத்திக்கான பணிகளும் இரண்டு பாதைகளாகவே அமைய வேண்டும். இதில் அரசியல் தீர்விற்கான பாதை மிக நீண்டது என்பதையும் உணர வேண்டும்.

அரசியல் சுயநலன்களுக்காக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார நலன்களை புறக்கணித்து செயற்படுவது மக்களுக்கு செய்யும் பெருந் துரோகமாகவே அமையும்.

# ரொறன்ரோ...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

இது தொடர்பான வழக்கு விசாரணை ஒன்ராரியோவின் மேல் நீதிமன்றில் (Superior Court) 2018 ஒகஸ்ட் 31 இல் நடைபெறும்.

ரொறன்ரோ நகரசபைத் முதல்வர் John Tory கருத்துத் தெரிவிக்கையில் தான் ஒரு சட்டத்தரணி. ஒன்ராரியோ மாகாண அரசிற்கு ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றி முடிவு எடுக்கும் அதிகாரம் உண்டு. ஆனால் நகரசபைத் தேர்தல் நடைபெற உள்ள நேரத்தில் நகரசபையுடனோ அல்லது மக்களிடமோ கருத்துக்கள் எதுவும் கேட்காமல் மாகாண முதல்வர் எவ்வித முன்னறிவுப்பும் இல்லாமல் நகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பது தவறு, அது ஜனநாயக மரபும் அல்ல என்றார்.

Los Angeles நகரசபையில் 15 உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர் என்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஊடகங்கள் அங்கு நகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் நகரத்தின் தேவைகளை ஆராய்ந்து நகரசபைக்கு ஆலோசனை வழங்க என பல குழுக்கள் (Neighborhood Councils) அமைக்கப்பட்டுள்ளன எனக் கூறியுள்ளன.

CP24 மற்றும் CTV ரொறன்ரோ ஊடகங்கள் ரொறன்ரோ மக்களிடையே நடத்திய கருத்துக்கணிப்பின் முடிவுகளை அவை 2018 ஒகஸ்ட் 16 இல் வெளியிட்டிருந்தன. இக்கருத்துக்கணிப்புகளின் படி 48%ஆன ரொன்றன்ரோ வாக்காளர்கள் நகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 25 ஆகக் குறைப்பதை ஆதரித்திருந்தனர். 35% ஆன ரொறன்ரோ வாக்காளர்கள் நகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைப்பதை எதிர்த்திருந்தனர்.

குறைந்த எண்ணிக்கையான நகரசபை உறுப்பினர்களைக் கொண்ட நகரசபையின் செயற்திறன் அதிகரிக்கும் என 48%ஆன வாக்காளர்கள் தெரிவித்திருந்தனர். அதேவேளை 35%ஆன வாக்காளர்கள் நகரசபை உறுப்பினர்களைக் குறைப்பது நகரசபையின் செயற்திறனை அதிகரிக்காது எனத் தெரிவித்திருந்தனர்.

Aird and Berlis என்னும் ரொறன்ரோ சட்டநிறுவனத்தைச் சேர்ந்த சட்டத்தரணி John Mascarin மாகாண அரசு நகரசபையின் உறுப்பினர் எண்ணிக்கையை மாற்றுவது தொடர்பாக CBC ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியில் நகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாற்றும் பூரண அதிகாரம் மாகாண அரசுக்கு உண்டு. 20 வருடங்களுக்கு முன்னர் மாகாண அரசு ரொறன்ரோவில் இருந்த ஆறு நகரசபைகளையும் கலைத்து அவற்றை ஒரு ரொறன்ரோ நகரசபையாக ஒருங்கிணைத்த போதும் இவ்வாறே அப்போதைய நகரசபைகளின் உறுப்பினர்கள் மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படுகின்றன எனக்கூறினர். ஆனால் மாகாண அரசு திட்டமிட்டபடியே ஆறு நகரசபைகளையும் ஒன்றாக இணைத்தது என்றார்

# கேரளா வெள்ளம் உணர்த்தும் பாடம்

## தமிழகத்தைச் சூழ்ந்துள்ள அபாயங்கள்!

**- கண்ணன் -**

பேய் மழையாக மாறிய பருவ மழை, கருணை காட்டாத வெள்ளம், மூழ்கிப்போன வீடுகள், தீவுகளாக காட்சியளிக்கும் நகரங்கள், சொந்த ஊரில் அகதிகளான மக்கள் என வரலாறு காணாத பேரிடரால் கண்ணீரில் தத்தளிக்கிறது கடவுளின் தேசம். பதைபதைக்க வைக்கும் நிலச்சரிவும், பயங்கரமான வெள்ளமும், வெள்ளத்தில் சிக்கியவர்கள் காப்பாற்றுமாறு கதறும் காட்சிகளையும் பார்த்து மலையாளிகள் மட்டுமல்ல கேரளாவை நேசிக்கும் தமிழர்களும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

கேரளா வெள்ளத்தில் உரியிழந்தவர்களின் எண்ணிக்கை 400-ஐ தாண்டியிருப்பது பெரும் சோகம். வெள்ளமும் நிலச்சரிவும் கேரளாவின் அழகிய கட்டமைப்பையே உருகுலைத்துவிட்டது. லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையை புரட்டிபோட்டு விட்டது. வாழ்நாள் முழுதும் உழைத்து கட்டிய வீடு, சேர்த்த உடைமைகள் வெள்ளத்தில் அடித்துச் சென்று அகதிகளாக நிறுத்தி விட்டது. 10 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் வீடுகளில் இருந்து வெளி-யேறி முகாம்களில் தஞ்சமடைந்தனர். கிட்டத்தட்ட 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் பொருட்சேதம்.

தற்போது மழையின் தீவிரம் குறைய தொடங்கி, கேரளம் மெல்ல மெல்ல இயல்பு நிலைக்கு திரும்பி வருகிறது. இத்தனைக்கும் மலைப் பிரதேசம் ஏற்ற இறக்கமான பகுதிகள் என்பதால் பள்ளத்தில் தண்ணீர் ஓடிவிட்டிருக்க வேண்டும். ஆனால், அதிகம் பாதிப்புக்குள்ளான 13 மாவட்டங்களில் எல்லா ஊர்களிலும் ஆளை மூழ்கடிக்கும் அளவு தண்ணீர் உயர்ந்தது. அந்தளவு ஒரு சில நாட்களில் வானம் பிளந்து ஊற்றிவிட்டது.

இந்த திடீர் மழைக்கு என்ன காரணம்? இப்படிப்பட்ட திடீர் மழையை தமிழகம் சந்தித்தால் தாங்குமா? நிபுணர்களுடன் பேசினோம்.

திடீர் வெள்ளத்துக்கு என்ன காரணம்?

"இந்த திடீர் வெள்ளத்துக்கு காரணம் 'தீவிர காலநிலை நிகழ்வுகள்' (Extreme Climate Events). இது வரும் காலங்களில் இன்னும் அதிகமாகும். அதாவது, 3 மணி நேரத்தில் அதிகமான மழைப்பொழிவு நிகழ்ந்து, திடீர் வெள்ளம் ஏற்படும் என்று சர்வதேச காலநிலை விஞ்ஞானிகளும், பல்வேறு ஆய்வு அமைப்புகளும் தெரிவித்து வருகின்றன. உலகம் முழுக்க இது எங்கும் நிகழலாம்.

என்றாலும், இந்திய மாநிலங்களைப் பொறுத்தவரைக்கும் இதனால் ஏற்படும் அழிவு அதிகமாக இருக்கும். இந்த ஆண்டு ஜூன் மாதம் இந்திய தொழில் நுட்ப நிறுவனம் முக்கியமான ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டது.



புவியின் வெப்ப அளவு 1.5 முதல் 2 டிகிரி அளவிற்கு உயரும் போது இதைப்போன்ற தீவிர காலநிலை நிகழ்வுகள் அதிகமாகும் என்றும், குறிப்பாக 'குறுகிய நேரத்தில் அதிகம் மழை பெய்யும்' என்றும் அந்த ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது" என்கிறார், நம்முடன் பேசிய பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த சுந்தர ராஜன்.

"வன அழிப்பும் இந்தத் திடீர் வெள்ளப் பெருக்குகளுக்கு காரணம்" என்கிறார் சூழியல் எழுத்தாளர் எழுத்தாளர் தியடோர் பாஸ்கரன். "கேரளா அழிவுகளுக்கு முக்கிய காரணம் மேற்கு தொடர்ச்சி மலையை அழித்ததுதான். மரங்களை வெட்டி தேயிலை தோட்டங்கள் அமைத்தல், அணைகள் கட்டுதல், தைல மரங்கள் வளர்ப்பு, கனிமப் பொருட்கள் எடுத்தல், சூழலை சிதைக்கும் சாலைகள் போன்றவற்றால் மழை பெய்தால் அதனை உள்வாங்கி தக்க வைக்கும் தன்மையை மலைகள் இழந்துவிட்டன. முக்கியமாக, இந்தியாவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகள் என்பது ஸ்பொஞ்ச் போன்ற தன்மை கொண்டது. அதாவது, எவ்வளவு மழை பெய்தாலும் உறிஞ்சிக்கொள்ளும் தன்மை கொண்டது. அதனை அழித்து விட்ட காரணத்தால் இப்போது மழைத் தண்ணீர் அப்படியே கீழிறங்கி வெள்ளப் பெருக்கை ஏற்படுத்துகிறது" என்கிறார் தியடோர் பாஸ்கரன்.

அண்ணா பல்கலைக்கழக காலநிலை மாற்ற ஆய்வுமைய தலைவர் பேராசிரியர் ராமச்சந்திரனிடம் பேசினோம். "புவி வெப்ப மடைதல் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஒரு டிகிரி கூடினாலும் அபரிமிதமான விளைவுகள் உண்டாகின்றன. எனவேதான், உலகளாவிய அளவில் இரண்டு டிகிரிக்குள் வெப்பமயமாதலை குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம்.

வெப்பமயமாதலால் நிகழும் அபரிமிதமான விளைவுகளை இப்போதுள்ள விஞ்ஞானத்தாலேயே கணிக்க முடியவில்லை. கேரள, சென்னை வெள்ளம் போன்றவை அந்த வகைதான். புவி வெப்பநிலை இப்போது 0.8 டிகிரி அளவுக்கு உயர்ந்துவிட்டது. இதுவே ஒரு டிகிரியாக உயரும்போது தற்போது நிகழ்ந்தது போல இரண்டு மடங்கு பாதிப்புகள் உருவாகும். அதாவது ஒன்று மழை அதிகமாகப் பொழியும் அல்லது தொடர் வறட்சி நிலவும்.

தமிழகத்தின் மழை நாட்கள் அதிகபட்சம் 60 நாட்கள்தான். மழையின் அளவு 1200 மி.மீட்டர். ஆனால், பருவநிலை மாற்றத்தால் இனி ஐந்து நாட்களிலேயே 1200 மி.மீ. மழையும் பொழியும். 2015ஆம் ஆண்டு டிசம்பர் 01 மற்றும் 04ஆம் திகதிகளில் 800 மி.மீ. மழை பெய்தது. அதாவது சென்னையில் ஒரு வருடம் பெய்ய வேண்டிய மழை இரண்டே நாட்களில் கொட்டி தீர்த்துவிட்டது. அதுதான் சென்னை பெருவெள்ளத்திற்கு காரணம்" என்றார்.

### தமிழகம் செய்ய வேண்டியது என்ன?




"ஒவ்வொரு அழிவில் இருந்தும் தமிழகம் பாடம் கற்றுக்கொள்கிறதுதான். ஆனால், அதைப் பின்பற்றுகிறதா? 2015 டிசம்பர் பேய் மழையில் தமிழகத்தில் சென்னை, கடலூர் சந்தித்த பேரழிவுகள் எல்லோருக்கும் இயற்கை பற்றிய பயத்தை விதைத்தது. அது சென்னைக்கான பாடம் மட்டுமல்ல, இந்தியாவுக்கான பாடம் என்பதை உணர்ந்திருந்தால், இன்று கேரளா இத்தனை பேரழிவை சந்தித்

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)



# அதிசயக் கோயில் அங்கோர்



கலாநிதி
இரத்தினம் நித்தியானந்தன்

கடந்த இதழ் தொடர்ச்சி....

## ஆங்கோரின் தற்கால வளர்ச்சி

1972ஆம் ஆண்டிலிருந்து நிகழ்ந்த போர்களினால் நினைவுச் சின்னங்களுக்கு ஏற்பட்ட சேதம் மிகவும் குறைவு. நுழைவு வாயிலும் மற்றும் மேற்குப் புற சுவரிலும் தோட்டாக்களாலும் சூரிய ஆயுதங்களாலும் சிறியஅளவில் ஏற்பட்ட சேதங்கள் அங்கோர்வாட்டில் நிகழ்ந்த போரின் அடையாளங்களாக இன்றைக்கும் இருக்கின்றன. வெப்ப மண்டல காடுகளின் வளர்ச்சியாலும், கடுமையான மழையாலும், திருட்டாலும்தான் ஆங்கோரின் நினைவுச் சின்னங்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டன.

நினைவுச் சின்னங்களை காடே கபளிகரம் செய்தது. மரப்பாசி, மற்றும் மிகச்சிறிய செடிகள் பல வண்ண உறையாக பாறைகளை மூடியிருந்தன. இவை நினைவுச் சின்னங்களை கபளீகரம் செய்த மோசமான எதிரிகள். இவை அழிக்கப்பட வேண்டியவை.

மற்ற இரு குற்றவாளிகள் கபோக் அல்லது பட்டும் பஞ்சு மரங்கள். இவை குடையின் கம்பிகளைப் போல் பரந்து விரிந்திருக்கும். மற்றும் அத்தி மரம். அங்கோர் பகுதியில் தண்ணீர் வசதிக்கான மிகப்பெரிய செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை தொல்பொருள் ஆய்வின் ஆதாரங்கள் விளக்குகின்றன. இங்கே உள்ள பிரமாண்டமான அணைகள், கால்வாய்கள், வெள்ளத் தடுப்பு சுவர்கள் ஆகியவற்றின் மூலம் கெமர் இனத்தவருக்கு மேம்பட்ட விவசாயத்தொழில் நுட்பம் தெரிந்திருக்க வேண்டும் என்று அறிஞர்கள் நம்புகிறார்கள். கெமர்கள் விவசாயத்திலும், வெள்ளத்தடுப்பிலும் பெரும் அளவில் திறமை பெற்றிருந்தார்கள் என்ற கருத்தை சமீப காலத்தின் ஆய்வுக் கருத்து ஒன்று எதிர்க்கிறது. தொலைதூரப் புலனாய்வு கருவிகளை பயன்படுத்தியும் செயற்கைக் கோள் மூலம் பெறப்பட்ட காட்சிகள் மூலம் கெமர்கள் எப்படி விவசாயம் செய்து பயிர்களை வளர்த்தனர் என்பதை தீர்மானிக்கும் திறமையை பொறியியலாளர்கள் பெற்றனர். ஆராய்ச்சியின் மூலம் கெமர்களுக்கு விவசாயம் குறித்த விரிவான அமைப்பு முறை இருந்தது என்பதற்கு குறைவான ஆதாரங்களே கிடைத்தன.

ஆங்கோரின் பல நினைவுச் சின்னங்களைச் சுற்றியுள்ள பெரிய அகழிகளை விவசாயத்துக்கு பயன்படுத்தியிருக்க முடியாது. ஏனெனில் இவற்றிலிருந்து வயலுக்கு தண்ணீர் பாய நீர்வடிகால்கள் ஏதும் இல்லை என்று பொறியியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.



கெமர்களின் விரிவான கட்டுமான பணிகளில் ஈடுபட்டிருந்த பணியாளர்களை உணவு தந்து தொடர்ந்து வேலையில் ஈடுபட வைக்கும் அளவுக்கு அரிசி போன்ற பலவகையான பயிர் வகைகளை விவசாயம் செய்யும் அளவுக்கு அங்கோர் நிலப்பகுதி செழுமையாக இல்லை என்ற தகவலும் அதே ஆராய்ச்சி மூலம் கிடைத்தது. பொறியியலாளர்கள் சோதனை செய்து, கரடு முரடான மணற் பாங்கான நிலம் மற்றும் மழையாலும் உருகிய பனியாலும் உண்டான மண் அரிப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தினர். நீண்ட காலத்துக்கு ஆண்டுதோறும் பல வகையான பயிர்களைச் சாகுபடி செய்யும் அளவுக்கு மண் வளம் போதுமானதாக இருந்திருக்காது என்பதை ஆராய்ச்சி முடிவு செய்தது.

நினைவுச் சின்னங்களுக்கு கீழே ஓடிய நீரோட்டத்தில் அடிக்கடி ஏறி இறங்கும் தன்மை அவற்றின் உறுதித் தன்மையை அச்சுறுத்தியது. அகழிகளும், கால்வாய்களும் கழிவுப் பொருட்களால் அடைபட்டு அதிகபடியான தண்ணீர் வடிந்து போக முடியாதவாறு தடுத்து நிறுத்தின. கடந்த காலத்தில் பாறை நினைவுச் சின்னங்கள் (மழை பெய்து கடைகாலில் உள்ள சரளைக் கற்களால் வடிகட்டப்பட்டு பிறகு அகழியிலும், கால்வாய்களிலும், பாசன வாய்கால்களிலும் கலந்தது எனப் பதியப்பட்டுள்ளது.

வடிகால் வசதி இல்லாமையால் நினைவுச் சின்னங்களைச் சுற்றிலும் தண்ணீர் தேங்கி மணற் பாறைகளில் ஈரம் பரவி சிற்பங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது. இத்தகைய பாதகமான சூழ்நிலையே சிற்பங்களின் அழிவுக்கும், ஒட்டுமொத்த அமைப்பின் உறுதியின் பாதிப்பும் காரணமானது.

ஆங்கோரின் கலைப்பொருட்களின் திருட்டு திட்டமிட்ட வியாபாரமாகவே பெரும் அளவில் நடைபெற்று கெமர் நாகரிகத்தின் பழமைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக காட்சியளித்தது. தாய்லாந்துக்கும் கம்போடியாவுக்கும் இடையிலான மேம்படுத்தப் பட்ட எல்லை உறவு எல்லைகள் கடந்து கலைப்பொருட்களை கடத்திச் செல்ல துணை புரிந்தது. அங்கிருந்து கலைப் பொருட்கள் பாங்காக்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிறகு உலகச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டன. கலையை பாதுகாக்கும் பொருட்டு அங்கோர் தோம் நுழைவாயிலில் இருந்த பாய மேற் பகுதியை அடையாள சின்னங்களாக மாற்றி அமைத்தது சியாமில் இருந்த அங்கோர் பாதுகாப்பு மையம். பழையவை அங்கோர் பாதுகாப்பு மையத்தில் உள்ளன. கம்போடியாவில் உள்ள நினைவுச் சின்னங்களை பாதுகாக்க காவலாளிகள், பாதுகாப்பு அமைப்பு, கடுமையான சட்டம் ஆகியவை தேவை.

ஆங்கோரில் உள்ள நினைவுச் சின்னங்கள் தற்போது ஐக்கிய நாட்டு கல்வி அறிவியல் மற்றும் பண்பாடு அமைப்பின் கீழ் (யுனெஸ்கோ) கொண்டு வரப்பட்டன. இவ்வமைப்பு ஒருங்கிணைப்பாளராகவும், சார்பில்லா உலக அமைப்பாகவும் இயங்குகிறது. தொழில்நுட்ப, நிதி ஆகியவற்றை இணைத்து நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதே இதன் நோக்கம். பாதுகாப்பிலும், தொல்பொருள் ஆராய்ச்சியிலும் கம்போடியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் விதம் ஒரு செயல் திட்டம் உருவாக்கப்பட்டது. போல்பாட் பகுதியை பயிற்சி பெற்ற மூன்று கம்போடியர்கள் பார்வையிட்டனர். மற்றும் பிரான்சினால் பணியாற்றிய 1000 பேர்களில் இருவரும் பார்வையிட்டனர். 1789ஆம் ஆண்டில் ப்னோம் பென்ச் பல்கலைக் கழகத்தின் நுண் கலைத்துறை மீண்டும் திறக்கப்பட்டு, கம்போடிய நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் துறையில் தேவையான பயிற்சி அளிக்கும் பணிக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

## அங்கோர் - உலகப் பெருங்கோயில்

## கெமரின் கட்டிடக் கலையும் - அங்கோர் காலத்துக் கலைகளும்.

மூலப் பொருட்களிலும் நிர்மாணிக்கும் முறையிலும் கட்டிட அலங்காரங்களிலும் வரைவுகளிலும் குறியீடுகளிலும் அங்கோர் காலத்து கெமா நினைவுச் சின்னங்கள் ஒத்ததன்மை கொண்டவைகளாக உள்ளன. நினைவுச் சின்னங்களைத் தவிர்த்து வெங்கலச் சிலைகளும் பாறைச் சிற்பங்களும் செழுமையான கெமரின் கலைகளில் ஒரு பகுதியாகத் திகழ்கின்றன. மற்றப் பண்பாடுகளின் தாக்கங்களையும் இவைகளின் மூலம் உணர முடிகிறது. ஆரம்பத்தில் இந்தியக் கலைகளே இவற்றுக்குச் செயலூக்கமாக இருந்தன என்பது சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிகிறது. ஆங்கோரின் ஆரம்ப கால கட்டமைப்புகளில் ஜாவாவின் கலைகளின் தாக்கம் இருந்தது என்பதும் தெரியவருகிறது. சில கோபுரங்களின் வாயில் பகுதிகளில் உள்ள கலசங்களும், மதிற் சுவர்களும் ஒரே மாதிரியாகத் தோன்றுகின்றன. 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஏழாம் ஜெயவர்மன் உருவாக்கிய நினைவுச் சின்னங்களில் சீனக் கலைகளின் தாக்கம் இருக்கிறது. வெளிநாட்டவரின் பாதிப்புகள் இருந்த போதும் கெமர் கலை குறிப்பிடத்தக்க அளவிலும், சிறப்போடும் தனித்துவமாகக் காட்சியளிக்கின்றன. விண்ணுலகக் கடவுள்களின் பூலோக பிரிதிநிதிகளாகத் தோற்றம் அளிக்கும் உருவங்கள் மூலமும் அலங்காரங்கள் மூலமும் வெளிப்படும் மத உணர்வுகள் போல உலகில் வேறு எங்கும் இல்லை.

தொடரும்...

## உன்னுள் விழுந்த பொறி!

உனதுள்ளம் அறியாது
　ஒருநாளுன் உள்ளத்துள்
உணர்வூட்டும் பொறியொன்று வீழும்-அது
　உயிர்மூச்சை உள்வாங்கி
உருக்கொண்டு பிழம்பாகி
　உனதாற்றல் மெருகேற்றி நீளும்!

நினைப்பின்றி ஓய்ந்தாலோ
　நித்திரையில் ஆழ்ந்தாலோ
நொடிதன்னிற் பொறியவிந்து போகும்-அதை
　நெய்யூற்றும் உணர்வாலே
நெருப்பாக்கி வளர்த்தாலே
　நெடிதாகிப் பயன்தந்து சூழும்!

கனவான எண்ணங்கள்
　கருக்கொண்ட வண்ணங்கள்
கனியாகிக் கைதன்னில் வீழும் - உன்
　கண்ணுக்கு எட்டாத
கடைகோடிக் கோள்கூடக்
　கையெட்டும் வகைவந்து சேரும்!

மனமென்னும் கலசத்தில்
　மகிழ்வூட்டும் ஒளியாகி
மலர்கின்ற சுடராக மாறும் _ பொறி
　மறையாது அணையாது
மரணிக்கும் வரையுந்தன்
　மன்றத்தில் எரியேற்றி வாழும்!

கவிஞர் மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா, கனடா

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB & AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

# கேரளா...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

திருக்காது. சென்னை வெள்ளம் நீர் நிலைகளை, நீர் வழித்தடங்களை ஆக்கிரமித்து எழுப்பப்பட்ட முறையற்ற கட்டுமானங்களால், வெள்ளநீர் வடிய வழியில்லாமல் உருவான அழிவு என்றால், கேரள வெள்ளம் முறையற்ற வன அழிப்புகளால் உருவான வெள்ளம் இது எல்லாமும்தான் பேரழிவை உருவாக்குகிறது.

சென்னையில் எங்கு பார்த்தாலும் கார்கள் ரோட்டில்தான் நிற்கின்றன. இதனால், சாலைகளின் அகலங்களே குறுகிவிட்டது. கடைகள், வணிக வளாகங்கள் தொடங்கி வீடு கட்டும் சாதாரண மக்கள் வரைக்கும் யாருக்கும் கார் நிறுத்த இடம் இருக்க வேண்டும் என்ற அடிப்படை புரிதல்கூட இல்லாமல் போய்விட்டது. அதுபோல எல்லா கழிவுநீர் வடிகால்களிலும் குப்



இரண்டு இடங்களிலும் மக்களை நடுத் தெருவில் நிறுத்தியது கட்டுப்பாடற்ற வளர்ச்சியும் பேராசையும்தான்" என்று எச்சரிக்கிறார் பூவுலகின் நண்பர்கள் சுந்தர் ராஜன். தொடர்ந்து, 'திடீர் வெள்ளப் பெருக்குகளை தாங்கக் கூடிய வகையில் நகர வடிவமைப்புகள் இருக்கவேண்டுமென்று இந்திய தொழில்நுட்ப நிறுவன ஆய்வறிக்கை வலியுறுத்துகிறது. 1076 கி.மீ. நீள கடற்கரை கொண்ட தமிழகம் காலநிலை மாற்றத்தால், அதிக தீவிரமான காலநிலை நிகழ்வுகளை சந்திக்கும் வாய்ப்புள்ளது. ஆனால், குறைந்தநேரத்தில் அதிக மழை பொழிந்தால், அதனை தாங்கக்கூடிய வகையில் தமிழக நகரங்கள் கட்டமைக்கப்படவில்லை. இங்குள்ள நகரத்திலுள்ள வடிகால்கள் தினம் பெய்யக்கூடிய மழையின் அளவைக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆனால், மாதாந்திர அல்லது தினசரி சராசரி அளவுகள் எல்லாம் பழங்கதை. மூன்று மணி நேரத்தில் தீவிர மழைப் பொழிவு என்பதுதான் இன்றைய யதார்த்தம். தமிழகம் அதிகமாக நகர்மயமான மாநிலம் என்பதை இங்கே நாம் நினைவில் கொள்ளவேண்டும்" என்கிறார் கவலையுடன், சுந்தர் ராஜன்.

"மழை என்பது இயற்கை. ஆனால், அதனால் உருவாகும் அழிவுகள் மனிதனால் உருவாக்கப்பட்டதுதான். பணத்திற்காக, வசதிக்காக இயற்கையை அரசும் தனிமனிதர்களும் அழிக்கிறார்கள். எல்லா விதிகளையும் மீறி கட்டிடங்கள் கட்டுகிறார்கள். கடற்கரையில் இருந்து 500 மீட்டர் வரை கட்டிடங்கள் எதுவும் கட்டக்கூடாது என்பது இந்தியாவில் உள்ள சட்டம். ஆனால், சென்னை உள்ளிட்ட நகரங்களில் பல ஆயிரம் கட்டிடங்கள் கடற்கரையில் இந்த விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ளன. அதுபோல நீர் வடியும் பாதைகளில், நீர்நிலைகளிலும் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது. அரசு அதிகாரிகளின் துணையுடன்தான் இது நடக்கிறது.

பையை கொட்டி மூடி விடுகிறார்கள். இதனால், கழிவு நீரோ மழை நீரோ வடிய வழி இல்லாத சூழல்தான் இருக்கிறது. சென்னை மட்டுமல்ல தமிழகத்தின் எல்லா நகரங்களிலும் இதே நிலைதான் உள்ளது. அரசு மட்டுமல்லாமல் மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்பட்டால்தான் இதில் மாற்றம் வரும்" என்கிறார், தியடோர் பாஸ்கரன்.

"புவி வெப்பமயமாதல் என்பது உலகலாவிய சிக்கல். உலகம் முழுவதும் எரிபொருள் பயன்பாடு அதிகரிக்க, அதிகரிக்க புவி வெப்பமயமாதலும் அதிகரிக்கத்தான் செய்யும். அதனை தமிழகம் என்ற ஒரு மாநிலம் மாறுவதால் சரி செய்துவிட முடியாது. ஆனால், அதிலிருந்து தம்மை தற்காத்துக்கொள்ளும் வேலையை தமிழகம் செய்யலாம். அந்தவகையில் தமிழகம் கவனம் கொள்ளவேண்டிய, எதிர் காலத்தில் தமிழகம் சந்திக்கப்போகும் முக்கிய பிரச்சினை தண்ணீர் தண்ணீர் மட்டும்தான். வெள்ளைக்காரர்கள் காலம்வரை இங்கு வரத்து வாய்க்கால்கள் சிறப்பாக பராமரிக்கப்பட்டது. இப்போது அவை எல்லாம் பாழடைந்துவிட்டன. தமிழகத்தில், இன்றைய மற்றும் கடந்த ஆட்சியாளர்கள், முன்னோர்களின் நீர் மேலாண்மையை முற்றிலுமாக சிதைத்து விட்டார்கள். இதனால், நான்கு நாளில் பெரிய மழை பெய்தால், எல்லா நீரும் கடலில் கலந்து வீணாகும் நிலைதான் தற்போது உள்ளது. இந்த மாதம் காவிரியில் பல லட்சம் கன அடி தண்ணீர் சென்றும் அதனை எங்கும் தேக்கிவைக்க முடியவில்லை. காவிரிப் பகுதியில் உள்ள ஏரிகள் காய்ந்துதான் கிடக்கிறது. எனவே, இருக்கும் நீர்நிலைகளைத் தூர்வாரி, புதிய நீர்நிலைகளை உருவாக்கி, மழை பெய்யும்போது தண்ணீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைத்து, வறட்சி காலங்களில் பயன்படுத்த வேண்டும். இவ்விடயத்தில் தமிழக ஆட்சியாளர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அதுபோல திட்டமிடப்படாத நகரங்களும் இங்கு அதிகரித்து விட்டன.உதாரணத்துக்கு சென்னை பள்ளிக்கரணையில் 40 ஆயிரம் ஹெக்டேர் சதுப்பு நிலக்காடுகள் இருந்தன. அதுதான் சென்னையின் வடிகாலாக இருந்தது. அதில் இருந்து பக்கிங்காம் கால்வாய்க்கு சென்று அங்கிருந்து மழைநீர் கடலில் கலக்கும். இப்போது பள்ளிக்கரணையை முழுவதுமாக ஆக்கிரமித்து வெறும் 40 ஹெக்டேர் சதுப்பு நிலகாடுகள் தான் மீதம் உள்ளது. இதனால் சென்னையில் சிறுசேரி, வேளச்சேரி, பள்ளிக்கரணை எல்லாமே மழை வந்தாலே மூழ்குகிறது. இதனால் மனித இழப்புகள் மிக அதிகமாக இருக்கும்.

மேலும், தமிழகத்தில் பல இடங்களில் இப்போது 600 முதல் ஆயிரம் அடிவரை போர்வெல் மூலம் தண்ணீர் எடுத்து குடிக்கிறார்கள். அது சிறுநீரகத்தை பாதிக்கும். போர்வெல் தண்ணீரை எடுத்து விவசாயம் செய்தால் பயிர்களுக்கும் பாதிப்புதான். குடிநீருக்கும் சரி, விவசாயத்துக்கும் சரி மேல்மட்ட நிலத்தடி நீரைத்தான் பயன்படுத்தவேண்டும். நீர்நிலைகளில் தண்ணீரை தேக்கி வைப்பதன் மூலம்தான் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த முடியும். அதற்கு நீர் நிலைகளையும் நீர் வழித்தடங்களையும் பராமரிக்க வேண்டும்" என்கிறார், பேராசிரியர் ராமச்சந்திரன்.

தமிழகம் விழித்துக்கொள்ளுமா?

# கீழடி...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

என்ற மன உந்துதலினாலோ ஆய்வாளர்களிடம் கேட்கப்படும் கேள்விகள் அவர்களைப் பல இக்கட்டான சூழ்நிலைகளுக்குள் தள்ளி விடுவதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆய்வாளர்கள் ஒரு செய்தியாளர் கூட்டம், கருத்தரங்கு என்பவை நடத்தினால் இவ் விடங்களில் அதுபோன்ற கேள்விகளைக் கேட்கலாம். ஏன் இதனைக் கூறுகிறேன் என்றால், இதுபோன்ற தேவையற்ற கேள்விகளினால் இருதரப்பாருக்கும் தேவையில்லாத மனவருத்தங்கள் ஏற்பட்டதை அறியக் கூடியதாக உள்ளது.

இனி, கீழடி அகழ்வாய்வுகள் கிளறிக் கொண்டு வந்தவை பற்றிப் பார்ப்போம். தமிழர்கள் சிலருக்கு அகழ்வாய்வுகள் பற்றிய விபரங்கள், அகழ்வாவுகள் எவ் விதம் செய்கிறார்கள் என்ற பொதுப்படையான விளக்கம் வந்தது. பொதுவாகவே அகழ்வாய்வினைச் செய்பவர்கள் தெரிவு செய்யப்பட்ட இடத்தில் பத்தடி நீளத்திலும், பத்தடி அகலத்திலுமாக இருபதடி ஆழத்திற்குக் குழியை அகழ்ந்து தமது ஆய்வுகளைச் செய்வார்கள். தேவைக்கு



ஏற்ப இக்குழிகளை ஒன்றிணைத்துப் பெரிதாக்குவதும் உண்டு ஆனால், 10: 10: 20 என்பதுதான் நியமம். இந்தப் 10: 10: 20 என்ற பரிமாணம்தான் பல்லாயிரக்கணக்கான வருடங்களின் முன்னர் வாழ்ந்தவர்களைப் பற்றிய விபரங்களை அறிந்து கொள்ளும் சாரளமாக இருக்கின்றது. இந்தக் குழிகளை எவ்விதம் அகழ்கின்றார்கள் என்பதனை அடுத்த தடவையில் இருந்து பார்ப்போம், சரிதானே!

# நாமும்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

(Crime), துஸ்பிரயோகங்கள் போன்றன நடைபெறுவதாகத் தெரியவருகின்றது. இதனால் பராமரிப்பு செலவு அதிகமாகின்றது. இந்நிலைபாட்டால் பல அடுக்குமாடிமனைத் தொகுதிகள் குறுகிய கால வாடகையை முற்றாகத் தவிர்க்க எத்தனிக்கின்றன.

அத்துடன் ரொறன்ரோ நகரசபை இதனைக் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர புதிய சட்ட திட்டங்களை கொண்டுவர இருக்கின்றது. அதாவது இவ்வாறு குறுகிய கால வாடகைக்கு கொடுப்பவர்கள் நகரசபைகளில் முதலில் பதிந்து கொள்ள வேண்டும். மற்றும் மேலதிகமான 4% நகரசபை குடியிருப்பு வரியும் செலுத்த வேண்டிவரும்.

ரொறன்ரோ நகரசபை 28 நாட்களுக்குக் குறைவாக தொடர்ச்சியாக குடியிருப்பதனை Short Term Rental என்று கூறுகின்றது. இந்த வரைவிலக்கணம் Hotel மற்றும் Motel இற்கு பொருந்தாது.

**ஹொங்கொங் (Hong Kong)இல் அதிகூடிய வாடகை**

அண்மைக்காலங்களில் கனடாவில் வாடகை செலுத்தக் கூடிய அதிகூடிய நகரமாக வன்கூவர் காணப்படுகின்றது. ஒரு அறை கொண்ட அடுக்குமாடி அலகிற்குரிய மாதாந்த வாடகை $2090 ஆகக் காணப்படுகின்றது.

அண்மையில் கிடைத்த தகவல்களின் பிரகாரம் ஹொங்கொங் உலகிலே அதிகூடிய வாடகை பெறும் இடமாகக் காணப்படுகின்றது. ஓர் அறை கொண்ட அடுக்குமாடி மாதாந்த மனையின் வாடகை $2450 அமெரிக்கன் டொலர். இந்த 1 அறை கொண்ட அலகின் அளவு 400 சதுர அடி ஆகக் காணப்படுகின்றது. இப்பொழுது 120 சதுர அடியிலும் அடுக்குமாடி அலகுகள் ஹொங்கொங்இல் வாடகைக்கு கிடைக்கின்றது. பொதுவாக கனடாவில் (வன்கூவர், ரொறன்ரோ) போன்ற நகரங்களில் ஏறக்குறைய வருமானத்தின் 30% வாடகைக்கு செலுத்தப்படுகின்றது. ஆனால் ஹொங்கொங் இல் இந்தப் பெறுமானத்தில் 50% ஆன வருமானம் வாடகைக்கு செல்கின்றது. அடுக்குமாடி மனைகளின் தொடர் விலை அதிகரிப்பு, எதிர்காலத்தில் மனையின் அளவிலும், வாடகையின் மாதாந்த கொடுப்பனவிலும் ஹொங்கொங் போல எதிர்பார்ப்பது நியாயமானதே. இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?




# தமிழன்னை தவிக்கின்றாள்!

கலைஞருக்கு ஒரு இரங்கற்பா



தமிழ்த்தாயின் தவப் புதல்வா
தானாக எழுச்சி பெற்றாய்
அமிழ்தான தமிழ் மொழியை
ஆசை கொண்டு அரவணைத்தாய்
தமிழ் முரசாய் நீயிருந்தாய்
தமிழெங்கும் முழங்கி நின்றாய்
தவிக்க விட்டுப் போனதெங்கே
தமிழ் அன்னை தவிக்கின்றாள்!


சங்கத் தமிழ் இலக்கியத்தை
தானாகக் கற்று நின்றாய்
பொங்கிவந்த தமிழ் உணர்வால்
பொழிந்து நின்றாய் பலவுரைகள்
ஒல்காப் புகழ் தொல்காப்பியத்தை
உள்ளம் அதால் நேசித்தாய்
உனைப் பிரிந்து வாடுகின்றார்
ஓலம் அது கேட்கலையா!

வள்ளுவத்தை வாழ்வு எல்லாம்
மனம் முழுக்க நிறைத்தாயே
வள்ளுவத்தை பலர் அறிய
வரைந்தாய் நீ ஓவியத்தை
வள்ளுவர்க்கு சிலை எடுத்தாய்
வள்ளுவர்க்கு உரு கொடுத்தாய்
தெள்ளு தமிழ் அறிவுடையாய்
தேம்பி நின்று அழுகின்றோம்!

வெள்ளித்திரை உன் வரவால்
வீறு நடை போட்டதன்றோ
அள்ளிவந்த உன் தமிழை
ஆர்வமுடன் பலர் ரசித்தார்
எதுகை மோனைத் தமிழாலே
எல்லோரும் உனைப் பார்த்தார்
எல்லோரும் ஏங்கி நிற்க
எங்குதான் சென்று விட்டீர்!

சட்ட சபை வரலாற்றில்
சாதனைகள் பல படைத்தாய்
திட்டம் இட்டுச் செயலாற்றி
தீரனாய் உயர்ந்து நின்றாய்
கட்டழகு மீசை உடன்
கறுப்பு நிறக் கண்ணாடி
கலைஞர் அதை அடையாளம்
காணாமல் போன தெங்கே!

மு.க எனும் எழுத்தை
முணு முணுக்கும் மக்களெலாம்
முத்தமிழின் சொத்து என
மு.க வை மதிக்கின்றார்
மு.க. வின் துணிச்சலுக்கு
மு.க தான் சமமாகும்
மு.க வை காணாமக்கள்
மூச் சொழிந்து நிற்கின்றார்!



எம்.ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா

# அரஃபாத்

வெள்ளுடையில் பாவக்கறை
வெளுக்கும் வண்ணான் துறை

ஆதி பிதாவும் அன்னையும்
சந்தித்த 'அருள்மலை'த் திடல்
ஆகிரத்தின் 'மஹ்ஷரை' நினைவூட்டும் மக்கள் கடல்!

ஒருநிமிடமேனும் தரிபட
நிறைவேறும்
ஹஜ் எனும் பேறு
கருவிலிருந்து பாவக்
கறையின்றி வெளியாகும் சிசு போன்று!

கனவினை மெய்படுத்த
'கலீலுல்லாஹ்' அறிந்த இடம்
'காத்தமுன் நபி' இறுதிப் பேருரையின்
கட்டியம் கூறும் தடம்!

பாலுக்கு அழும்
பச்சிளம் பிள்ளை போல்
பாவமன்னிப்பால் 'ஈமானின்'
பசிக்கு அழும் நாள்!



நிறைவான மனத்தினில்
நிம்மதி 'ஆக்ஸிஜனாம்'
இறையின் காதலுக்குள்
இணையும் ஆன்மாவாம்!

கண்ணீர்க் கடலாகும்
பாலையின் பெருவெளி
எண்ணங்கள் தெளிவாக்கும்
ஏற்றிடும் 'கல்பின்' பேரொளி!

-கவியன்பன் கலாம்-
அதிராம்பட்டினம்

*குறிப்பு: 'அருள்மலை'- ஜபலர்ரஹமத்*
*'மஹ்ஷர்' - மறுமையில் விசாரணைத் திடல்*
*'கலீலுல்லாஹ்'- இறைவனின் நண்பர்*
*'காத்தமுன் நபி' - இறுதி நபி*

Edgewood Greens
A Master Planned Community by FLATO®

# BIGGER HOME
# BIGGER SPACE
# SMALLER PRICE




ELEVATION C

All dimensions are approximate and subject to change without notice. Illustrations are artist concepts only. E. & O. E. August 2018.

FLATO DEVELOPMENTS INC.
PINEVALLEY ESTATES

- Monthly payment starts $1,000. -$1500
- Price starts mid $400,000.
- Size from 1800 sq.ft.
- Development charge capped $3,500.
- 5 Appliance included.
- Brick homes

## REGISTER TODAY TO RECEIVE BROCHURE, FLOOR PLANS & PRICE LIST

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

HOMELIFE HIGHER STANDARDS

## For More info. Call 416.321.6969

# HomeLife / GTA Realty Inc.*Brokerage

5215 Finch Ave. E., #203, Toronto ON.

*Independently Owned & Operated


COTTAGE RENTALS
Starting at $349 per day
Kirkfield
Waterfront, 5 Bedrooms, 20 Sleeps.
Kirkfield
Lake access, 5 Bedrooms, 25 Sleeps.
Maritime
River access, 5 Bedrooms, 25 Sleeps.
Robin
Waterfront, 5 Bedrooms, 20 Sleeps.
Fenelon Falls
Lake access, 5 Bedrooms, 20 Sleeps.
Maritime
River access, 5 Bedrooms, 25 Sleeps.
IN KAWARTHA LAKE AREA
1 hr FROM TORONTO
* Amenities at the cottages include cutleries, utensils, beds, linens, TV, Wi-Fi, BBQ, Hot tub, Pool table, and fire pit.
A.ANTON JEEVA, FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.antonjeeva.com | www.newcondoproject.ca/com
#1
RE/MAX
Dynasty Realty Inc. Brokerage*
Tel: 905.471.0002
8 Shadlock St. #7, Markham ON L3S 3K9
Independently owned & operated



FBM
Focus Building Maintenance
சொந்தமாக தொழில் செய்ய விரும்புகிறீர்களா?
உங்களுக்கு வசதியான நேரத்தில் தொழில் செய்யும் வாய்ப்பு
GTA இல் முன்னனி நிறுவனமாகத் திகழும் Focus Building Maintenance
உங்களுக்கு இந்த அரிய வாய்ப்பை வழங்குகிறது
Night Supervisors
Sub-Contractors
Office and restaurant cleaners
(Part time/Full time)
பதிவு செய்ய நேரில் வர
235 Nugget Ave Unit 21
Scarborough ON
தொடர்புகளுக்கு
416-276-3136
416-283-2561
www.focuscleaning.ca

# விளையாட்டுக்கள்




விதுசிகா அருள்தாசன்
அகவை -13

## கிளித்தட்டு



எமது முன்னோர் வீரத்தையும் ஆற்றலையும் வளர்க்கும் விளையாட்டுக்களை ஒழுங்க மைத்து இருந்தனர். அதில் கிளித்தட்டும் எமது மரபு வழி விளையாட்டுக்களில் ஒன்று. கிளித்தட்டு விளையாடுவோர் இரு குழுக்களாகப் பிரிந்து நிற்பர். ஒரு குழு, கூட்டினுள் இறங்க மற்றைய குழு அதை எதிர்த்து மறிக்கும். மறிக்கும் குழுவின் தலைவரை கிளி அல்லது தாய்ச்சி என்று அழைப்பர். கிளித்தட்டின் அமைப்பில் எல்லைக்கோடு, நடுக்கோடு வழியே கிளி சுற்றித் திரியும். தட்டு மறிப்பவர் இடைக்கோட்டில் நிற்பர். முன் இருந்து இறங்குபவர்கள் காய் என்பர். பின்னிருந்து முன்னோக்கி வருவோர் 'பழம்' என்பர். காயும் பழமும் ஒரு பெட்டிக்குள் வந்தால் ஆட்டம் இழப்பர். கிளி எந்த நிலையில் நின்றும் எதிரிகளை தொட்டதும் அக்குழு ஆட்டம் இழப்பர். இறங்கிய குழுவினர் தொடக்கக்கோட்டை பழமாக தாண்டினால் வெற்றி பெறுவர்.

## சடுகுடு




சடுகுடு அல்லது கபடி என்று அழைக்கப் படும் விளையாட்டு தமிழர்களால் பல காலமாக விளையாடப்படும் விளையாட்டு ஆகும். இவ்விளையாட்டு இரு அணி களுக்கு இடையே நிகழும் ஆட்களை பிடிக்கும் ஒரு போட்டி. ஒவ்வொரு அணியிலும் ஏழுபேர் இருப்பர். இவ்வாட்டம் விளையாட வெறும் நீள் சதுரமான இடம் இருந்தால் போதும். இந்த ஆடுகளத்தை ஒரு நடுக்கோட்டால் பிரித்து ஒரு பக்கத்துக்கு ஓர் அணியாக இருப்பர். ஆட்டக்காரர்கள் எப்பொழுதும் ஓர் எல்லைக்கோடுகளை தாண்டி செல்லக் கூடாது. ஒரு அணியில் இருந்து ஒருவர் நடுக்கோட்டை தொட்டு விட்டு 'கபடி கபடி' என்று சொல்லிக்கொண்டோ 'சடுகுடு' என்று கூறிக்கொண்டோ எதிர் அணியினர் பகுதிக்கு சென்று எதிர் அணியினரை கையாலோ காலாலோ தொட்டு விட்டு எதிர் அணியினரிடம் பிடிபடாமல் நடுக்கோட்டை தாண்டி தம் அணியிடம் திரும்பி வரவேண்டும். தொடுபட்டவர் ஆட்டம் இழப்பர். ஆனால் எதிரணியினர் சூழ்ந்து பிடிக்க வருவர். கபடி கபடி என்று சொல்லிக் கொண்டே எதிரணியை தொட்டுவிட்டு அகப்படாமல் திரும்பி தன் எல்லைக் கோட்டுக்குள் வர வேண்டும். அகப்பட்டால் சென்றவர் ஆட்டம் இழப்பார்.

## கிட்டிப்புள்ளு

கிட்டிப்புள்ளு என்பது தமிழரின் பழமையான ஒரு விளையாட்டு ஆகும். கிட்டிப்புள், கிட்டிக்கோல் ஆகியவை இந்த விளையாட்டுக்குப் பயன்படும் கருவிகள். கிட்டிக்கோலால் புள்ளை அந்தரத்திலேயே முடிந்தவரை தட்டிவிட்டு மேலெழும்பிய புள்ளை கீழ்வரும் முன் தொலைவில் அடித்து விழுத்த வேண்டும். விழுந்த புள்ளை பின் கிட்டிக்கோல் கொண்டு அளந்து புள்ளிகள் வழங்கப்படும். பின்னர் மறு அணியினர் இதேபோல் விளையாடுவர்.

## கயிறு இழுத்தல்



கயிறு இழுத்தல் என்பது இரு குழுக்களாக ஒரு கயிற்றை இரு முனைகளிலிருந்தும் இழுக்கும் ஓர் எளிமையான விளையாட்டு ஆகும். யார் எதிர் குழுவினரை தம் பக்கம் இழுக்கிறார்களோ அவர்களே வெற்றி பெறுவர். இவ்விளையாட்டு தமிழர்களால் பரவலாக விளையாடப்படும் ஒரு விளையாட்டு ஆகும்.

**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# வரமாய் எண்ணி வாழ்ந்தால்...



துச்சமென்று எண்ணு துயரம்
தூரவிலகிப் போகும் துணிந்து
இச்சகத்தில் வாழ்வை விரும்பி
இனிதாய் அமைத்துக் கொள்ளு
அச்சம் தவிர்த்து வாழ்ந்தால்
ஆயிரம் நன்மைகள் உண்டு
உச்சம் தொட்டு உயர்ந்தால்
உலகே வணங்கு முனைக்கண்டு!

கொட்டும் மழையில் நனைந்தால்
கொடிய நோயுமுனைச் சேரும்
தொட்டு உணர முயன்றால்
தொல்லை செய்யும் தீயும்
பட்டுப்பூச்சி பாரோர்க்கு நல்ல
பயனைத் தந்தே மாளும் இங்கு
விட்டுக் கொடுத்து வாழ்ந்தால்
வியந்துனைப் போற்றும் உலகம்!

வெட்டவெட்ட வளரும், நாங்கள்
வீட்டில் நட்டவாழை, அன்பை
கொட்டிக் கொட்டி கொடுத்தால்
கொழிக்கும் இன்பம் நாளை
சுட்டுச் சுட்டு வளைத்தால்
சுகமாய் வளையும் இரும்பும்
மொட்டும் ஒருநாள் மலரும்
முடிவில் இரவும் புலரும்!

மரங்கள் நட்டு வளர்த்தால்
மண்ணில் பசுமை பூக்கும் இரு

கரங்கள் இணைந்தால் போதும்
கல்லும் சிலையாய் மாறும்
சரமாய் மாறியபின்னே பூக்கள்
சாமியின் தோளினைச் சேரும்
வரமாய் எண்ணி வாழ்ந்தால்
வாழ்வும் சுகமாய் மாறும்

கவிஞர் புரட்சிபாலன்

நீங்கள் உடுத்தியிருக்கிற விலை உயர்ந்த ஆடையை வைத்தோ, பயன்படுத்துகின்ற சொகுசு காரைவைத்தோ, உங்கள் அழகான அலைபேசியை வைத்தோ, வீட்டில் நீங்கள் வாங்கி குவித்திருக்கிறபொருட்களை வைத்தோ ஒரு போதும் உங்கள் வாழ்க்கை தரத்தை மதிப்பிடாதீர்கள்

நீங்கள் எந்த அளவுக்கு நிம்மதியாக இருக்கின்றீர்களோ, உங்கள் சவால்களுக்கு நடுவிலும் எவ்வளவு மனம் விட்டு சிரிக்கிறீர்களோ, சூழ்நிலைகள் மாறினாலும் எவ்வளவு சீக்கிரம் மகிழ்ச்சி மனநிலைக்கு வந்துவிடுகிறீர்களோ- அதில்தான் உங்கள் வாழ்க்கைத்தரம் உள்ளது.

# ஆறுமுகனே தேறுதல் அருள்வாய்!



நல்லூரின் நாயகமே நல்லெழில் குமரனே
எல்லோரும் ஏத்தும் எழிலார் ஏந்தலே
அல்லல் அகற்றும் அயில்வேல் அரசே
சொல்லிலடங்காத சுந்தர ரூபனே

குன்று தோறாடும் குறைதீர்க்கும் முருகனே
மன்றுள்ளாசிவனின் காதல் மைந்தனே
என்றும் உனதுதாள் மறவாத அடியாரை
புன்முறுவலாணைக்கும் புள்ளிமயிலோனே

வள்ளி தெய்வயானை மகிழ் மணவாளனே
தெள்ளமுதே தெவிட்டாத தேன் பாகே
அள்ளி யருள் சுரக்கும் ஆனைமுகன் தம்பியே
உள்ளமுவக்கும் உமையாள் மைந்தனே

வேலை விடாது கைக் கொள்ளும் வேலனே
காலைப் பிடிப்பாரைக் காக்கும் கதிர்வேலனே
மாலைப் பொழுதில் மயில்மீது காட்சி தரும்
சாலையில் குழுமம் அடியரை காக்கும் சண்முகனே

சூர் கடிந்தாய் சுகம் செய்தாய் பார்முழுது
சீர் பெற்று தமிழர் வாழ்வு சிறப்பு மிக
தார் மார்பா நல்லூரின் தமிழ் வேளே
கூர் கொண்ட வேலால் குறைகள் தீர்ப்பாய்!



நா.க. சிவராமலிங்கம்

# திராவிடப் போராளி கலைஞர் மு. கருணாநிதி - சிறப்புக் கட்டுரை

**- அம்ஷன் குமார் -**

படம் ஆரம்பித்துவிட்டது. சற்றே கரகரப்பான ஒரு வர்ணனைக் குரல் கடற்காட்சிகள் மீது ஒலிக்கிறது. அக்காட்சிகள் முடிவுற்று அதன் தொடர்ச்சியாக இப்போது அக்குரலுக்குரியவர் புத்தகங்கள் நிரம்பிய அறையில் தோன்றுகிறார். உரக்க வாசித்துக்கொண்டிருந்த ஒரு புத்தகத்தினை மூடிவிட்டபின் தான் அணிந்து கொண்டிருந்த கண்ணாடியை லாவகத்துடன் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டு நாற்காலியிலிருந்து எழுந்து மேசை முன் வந்து நின்றுகொள்கிறார். தன் தோள் மீது கிடக்கும் சால்வையை எடுத்து தன் மார்பின் குறுக்காகச் சாத்துகிறார். அலங்காரமான வார்த்தைகளுடன் எழுதுகிற தமிழில் தமிழரின் பெருமையை தமிழ் இலக்கியத்தினூடாக அவர் மக்களைப் பார்த்து ஆற்றும் உரையை, தியேட்டரில் படம் பார்ப்பவர்கள் கட்டுண்ட மனோபாவத்துடன் ரசிக்கிறார்கள்.

படம் ஆரம்பித்தவுடன் நேரடியாகக் கதையை மட்டுமே பார்க்க பழக்கப்பட்டிருந்த ரசிகர்கள் மிகுந்த உற்சாகத்துடன் சுமார் இரண்டரை நிமிடங்களுக்கு அவரைப் பார்த்துக்கொண்டும் அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டும் இருந்தார்கள். அவர் சொல்லியிருந்த அனைத்தையும் அந்தப் படத்திலேயே கதையில் சொல்லியிருந்தார்கள். அவர்தான் அப்படத்தின் வசனகர்த்தா. இருந்தும்கூட அவரும் நேரடியாகத் தன் பங்கிற்கு அவற்றைக் கூறியிருந்தார். கிடைத்த சந்தர்ப்பம் எதையும் விடக் கூடாதல்லவா?

அவரது தோரணையும் பேச்சும் பலரையும் கவர்ந்ததைப் போலவே சிறு வயதினனான என்னையும் உடனே கவர்ந்தது. அவர் எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் ஒரே சமயத்தில் திரையில் தோன்றினார். அவர் திராவிடத் தலைவர்களில் ஒருவர், அரசியல்வாதி போன்றவற்றையெல்லாம் நான் பின்னரே அறிந்தவன் ஆனேன்.

## இடைவிடாத பேச்சும் எழுத்தும்

கலைஞர் கருணாநிதி கூறியது கூறல் பற்றிக் கவலைப்பட்டதில்லை. அவற்றை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்திய விதத்தில் அவற்றின் பொருத்தங்கள் உணரப்பட்டன. தன் நெடிய வாழ்க்கை முழுவதும் அவர் தமிழரின் தொன்மையான திராவிட வாழ்க்கையை இலக்கியத்தை முன்வைத்து இடைவிடாது பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருந்தார். அவரது முன்னேற்றமான திட்டங்கள், செயல்கள் ஆகியவற்றிற்கும் அவர் திராவிட வரலாற்றிலிருந்து உத்வேகம் பெற்றார். தாலி கட்டாத திருமணம், விதவைத் திருமணம், பெண்களின் கற்பு நெறி, ஜனநாயகப் பண்பு, தமிழர் தம் வீரம், தமிழ் இலக்கியம் தமிழ் மொழி ஆகியன பற்றிய பெருமிதம், ஆரிய வெறுப்பு எல்லாவற்றிற்கும் ஒரே மூலம்தான். அவற்றிற்கு இசைவாகப் பொதுவுடமைக் கருத்துகள் சேர்ந்துகொண்டன. பெரியார் பள்ளியில் பயின்றதால் நாத்திகம் அவரிடம் இரண்டறக் கலந்துவிட்டது. ஆனால், இலக்கியம், கலை ஆகியவற்றின் மீது பெரியார் கொண்டிருந்த வெறுப்பினைக் கலைஞரும் அறிஞர் அண்ணாவும் ஏனைய திமுக தோழர்களும் அவரை விமர்சிக்காமல் மறுத்துவிட்டிருந்தார்கள்.

சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த கலைஞர் மு.கருணாநிதி சிறு வயதிலேயே அரசியலுக்கு வந்துவிட்டார். பள்ளிப்படிப்பு பாதியிலேயே நின்றது. ஆனால் அவர் வாழ்நாள் முழுவதும் படித்துக்கொண்டே இருந்தார். இருந்தும் அவர் 'படிக்காதவர்' என்று பொதுவாகக் கருதப்பட்டார். பழந்தமிழ் இலக்கியங்களுக்கு உரைகள் எழுதிய பின்னரும் கலைஞருக்கு அப்படியொரு அடையாளம் இருந்தது. பட்டப் படிப்புகூடப் படித்திராத ஜெயலலிதா படித்தவர் என்று கூறப்பட்டார்.

திருக்குறளைப் பொதுவெளியில் பரவலாக அறிமுகப்படுத்தியதில் தி.மு.க.வினருக்கு முக்கிய பங்குண்டு. அந்தப் பங்கின் அதிகமான பாகம் கருணாநிதியைச் சென்றடையும். கன்யாகுமரியில் திருவள்ளுவருக்கு அவர் அமைத்த சிலை, வள்ளுவர் கோட்டத்தை நிர்மாணித்தது ஆகியவற்றையெல்லாம்விட, குறள்களைப் பேருந்துகளில் எழுதி எல்லோரையும் படிக்க வைத்த பெருமை அவரைத்தான் சாரும். அவரது குறளோவியம் எல்லோராலும் எல்லாக் காலத்திலும் விரும்பிப் படிக்கப்படும். வள்ளுவரை அய்யன் என்று அவர் விளித்ததை மட்டும் தமிழ்ச் சமூகம் ஏற்க மறுத்தது.

## எல்லா நதிகளும் கடலை நோக்கி...

கதாசிரியர், திரைப்பட வசனகர்த்தா, மேடைப் பேச்சாளர், நாடகாசிரியர், இதழாளர் என்று பலவாறாயும் அறியப்பட்டவர். ஆனால் எந்தச் செயலை செய்தாலும் அதன்மூலம் தனது கருத்துகளைப் பிரச்சாரம் செய்வதையே முற்றாக விரும்பினார். நாடகம் என்கிற உருவம் பற்றியோ திரைப்படம் என்கிற உருவம் பற்றியோ அவர் கவலைப்பட்டது கிடையாது. அவரது புதினங்கள் இலக்கியமா இல்லையா என்பது பற்றியெல்லாம் அவர் கவலைப்பட்டது கிடையாது. சமகால இலக்கியம் பற்றி அவர் பெரிதாகக் கருத்து தெரிவித்ததில்லை. மேடைப் பேச்சிற்கும் எழுத்துக்கும் பெருத்த வேறுபாடுகளை அவர் வரைந்து கொள்ளவில்லை. மொழி வன்மை நிரம்பப் பெற்றவராக இருந்த படியால் அவரது கருத்துப் பிரச்சாரங்கள் அலுப்பூட்டியதில்லை.

அவரது பேச்சு, எழுத்து ஆகிய இரண்டும் மிகவும் தெளிவாக இருக்கும். எல்லாமே சிறு சிறு வாக்கியங்கள். பைந்தமிழ் பயின்றவராயினும் கடினமான சொற்களைப் பயன்படுத்த மாட்டார். புழக்கத்தில் இல்லாத சொற்களைக் கொண்ட சொல்லாக்கங்களை அவர் பிறப்பித்ததில்லை. அரூபமான சிந்தனைகளையும் அவர் எழுத்துகளில் காண முடியாது. ஓடிக் கொண்டே படிப்பவர்கள்கூட அவர் எழுதியதைப் புரிந்துகொள்வார்கள். வசனங்களில் இரட்டுற மொழிதல் இருக்கும். ஆனால் இருபொருள்படும் ஆபாசங்கள் அவற்றில் இருக்காது. ஓசை நயமிக்க அடுக்கு மொழி வாக்கிய நடை பலரையும் கட்டிப்போட்டது.

## எளிமையும் நகையுணர்வும்



எல்லாச் சமயங்களிலும் அவரிடமிருந்து எளிமையும் நகையுணர்வும் வெளிப்படும். அவரது மேடைப்பேச்சு விரும்பப்பட்டதற்கு அவையெல்லாம் முக்கிய காரணம். 1977இல் அவசரநிலை நீக்கப்பட்டவுடன் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அப்போது அவர் பங்கேற்ற ஒவ்வொரு கூட்டத்திலும் அவர் மறக்காமல் அவசர நிலை என்றால் என்ன, ஒரு நாட்டில் அதற்கான உத்தரவு எச்சமயத்தில் பிறப்பிக்கப்பட வேண்டும், அது எவ்வாறு இந்திரா காந்தியால் மீறப்பட்டது என்பதைப் பாமரர்களும் புரிந்து கொள்ளும் விதமாக எடுத்துரைப்பார்.

அப்போது எம்.ஜி.ஆர் காங்கிரஸுடன் தேர்தல் கூட்டு சேர்ந்திருந்தார். சுவரொட்டிகளில் எம்ஜிஆர், இந்திரா காந்தி ஆகியோரின் படங்கள் ஒன்றாக இடம் பெற்றன. கருணாநிதி, ஒன்றும் அறியாத கிராமத்தான் அந்த சுவரொட்டியைப் பார்த்தால் ஏதோ எம்.ஜி.ஆரும் இந்திரா காந்தியும் புதிய படத்தில் ஒன்றாக சேர்ந்து நடிக்கிறார்களோ என்று நினைத்துக் கொள்வான்' என்று கூறி சிரிப்பலைகளை உருவாக்குவார்.

எழுத்தும் பேச்சும் அவருக்கு எப்போதும் கைகொடுத்தன. அவருக்கு எல்லாச் சிறப்புகளும் வர அவை காரணமாக இருந்தன. எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்த பிறகு சில காலம் அவர் அநேகமாக மறக்கப்பட்டிருந்தார். ஆனால், தொண்டர்கள் மனதில் அவர் தொடர்ந்து இடம் பெற்றவண்ணம் இருந்ததற்கு அவர் எழுத்துகள்தான் முக்கிய காரணம். அக்காலங்களில் அவர் முரசொலியில் எழுதிய கடிதங்கள் தொண்டர்களை வேறெப்போதையும்விட அதிகமாகக் கவர்ந்தன. அநேகமாக அவரது சிறந்த முரசொலி எழுத்துகள் அவை என்று கூறலாம்.

அவரது வசனத்தால் "பராசக்தி" ஒரு சிந்தனையாளரின் சினிமாவாக மாறியது. தமிழ் நாட்டில் மட்டுமின்றி "பராசக்தி" வடநாட்டிலும் பேசப்பட்டது. எஸ்.எஸ். வாசனின் "சந்திரலேகா" படம் வந்தபோது தமிழ்நாட்டினரும் தம்மைப்போல, படத்தைப் பிரம்மாண்டமாக எடுக்க வல்லவர்கள் என்று வட இந்தியப் பட உலகினர் ஒப்புக் கொண்டனர். ஆனால், அதுவரை வெளிப்படுத்தியிராத தீவிரத்துடன் இந்து மதத்தையும் புராணங்களையும் விமர்சித்த குறைந்த பட்ஜெட் "பராசக்தி" படம் அவர்களை அதிரவைத்தது. அதெல்லாம் பெரும்பாலனவர்களுக்கான திரை ஊடகத்தில் சாத்தியம் என்று அவர்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. பராசக்தி, தமிழ் சினிமாவிற்கு அகில இந்திய அளவில் பெரும் மரியாதையைப் பெற்றுத்தந்தது.

## பேசும் படமும் பேச்சுப் படமும்

பராசக்தி அளவிற்கு அவரது மற்ற படங்கள் அமையவில்லை என்றாலும் திராவிடக் கருத்துகள் அதே நெடியுடன் தொடர்ந்து அவரது பல படங்களில் வெளிப்பட்டன. கருணாநிதியின் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளாதவர்களும் நீண்ட வசனங்களை ஒரு பாணியாகப் பின்பற்றத் துவங்கினர். சமூகப் படங்கள் மட்டுமின்றி பக்திப் படங்களிலும் மாயாஜாலக் காட்சிகளின் இடத்தை வசனங்கள் பிடித்தன.

பேசும் படத்தைப் பேச்சுப் படமாக்கினார் என்று அவர் ஏற்படுத்திய பாதிப்பு பற்றி கடுமையான விமர்சனம் எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. மனோகரா, ராஜாராணி போன்ற படங்கள் அவருக்கு அப்படியொரு புகழைத் தேடித் தந்தன. ஆனால் அவரது எல்லாப் படங்களும் முற்றான வசனப் படங்கள் அல்ல. பராசக்தி படத்திலும் அது நிகழவில்லை. அதில் பல காட்சிகளில் குறைவான வசனங்கள் இடம் பெற்றிருந்தன. அந்தப் புகழ் பெற்ற கோர்ட் சீனில்கூட நீண்ட வசனங்கள் குறைவுதான்.

திராவிட சினிமாவின் உச்சம் என்று கருதப்பட வேண்டிய மாடர்ன் தியேட்டர்ஸின் "மந்திரி குமாரி" படத்திற்கு அவர் எழுதிய வசனங்கள் மிகவும் அளவானவை. அதைப் பெருமளவு எல்லிஸ்.ஆர்.டங்கன் (Ellis R. Dungan) இயக்கியிருந்தார். திரைப் படத்தைக் காட்சி மொழியில் கொண்டு செல்லும் கலையைப் பயின்றிராதவர்கள் அவரது வசனங்களில் தஞ்சமடைந்தார்கள் என்பதுதான் சரியான புரிதலாக இருக்கும். அவரது வசனங்களைச் சரியாகப் பேசுவது ஒரு நடிகனின் திறமைக்குச் சான்று என்கிற எண்ணம் ஏற்பட்டது. அதை நடிகர்கள் சவாலாக ஏற்றனர். ரசிகர்கள் அவற்றை விரும்பியதால் படவுலகினர் அப்படியே அவற்றை ஏற்றுப் படத்தில் பயன்படுத்தினர். ஆனால் சினிமா அழகியல்வாதிகள் சுமத்திய பழி கலைஞரை வந்து சேர்ந்தது. படத்தின் காட்சி மொழிக் குறைபாட்டிற்கு வசனகர்த்தாவைக் குற்றம் சொல்வது எவ்விதத்தில் நியாயமானது?

அரசியல்வாதியாக, ஆட்சியாளராக, அவர் உழைத்ததற்குச் சற்றும் குறைவில்லாது எழுத்தாளராகவும் உழைத்தார். குறி வைத்துக் காய்கள் நகர்த்திய ராஜதந்திரத்தில் அவர் வெற்றி தோல்விகள் கண்டிருக்கிறார். திராவிடம் என்கிற இலக்கை நோக்கிய அவரது எழுத்து சரியான இலக்கை அடைந்தது.

(கட்டுரையாளர்:அம்ஷன் குமார்
எழுத்தாளர், திரைப்பட இயக்குநர்.
திரைப்படம், இலக்கியம் ஆகியவை குறித்துத் தொடர்ந்து எழுதிவருகிறார்.
சினிமா ரசனை, பேசும்பொற்சித்திரம் முதலான நூல்களின் ஆசிரியர்.
அவரைத் தொடர்புகொள்ள:
amshankumar@gmail.com)

# பொய்யும் புரட்டும்

## ஒரு கற்பனைப் பேட்டி பாகம்-2



- துறையூரான் -

நரம்பன் - பத்திரிகை நிருபர்
துரும்பன் - நாட்டின் தலைவர்

(நரம்பன் தலைவரைப் பேட்டி காண்பதற்காகக் காத்திருக்கிறார். சிறிது நேரத்தில் ஒருவர் வந்து அவரைத் தலைவரின் காரியாலயத்திற்கு அழைத்துச் செல்கிறார்.)

நரம்பன் - வணக்கம் ஐயா எப்படி இருக்கிறியள்?

துரும்பன் - வணக்கம், பரவாயில்லை - உன்ரை பேட்டியைப் பற்றி என்னுடைய காரியதரிசி சொன்னார். சில இடங்களிலை என்னை மறைமுகமாகக் கிண்டல் அடிச்சிருக்கிறாய். இந்தப் பத்திரிகைக்காரர் வழக்கமாகச் செய்கிற திருவிளையாடல் மாதிரி.

நரம்பன் - ஐயா குறைநினைக்காதேங்கோ பத்திரிகைகள் இல்லாட்டில் நீங்கள் ஆர், உங்கடை பின்னணி என்ன, இப்ப என்ன செய்கிறியள் என்று மக்களுக்கு ஒன்றும் தெரியவராது. பேனா, வாளிலும் வலிமையானது என்று நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை.

துரும்பன் - எனக்கும் அதுகள் விளங்கும். ஆனால் உண்மையைத் திரிச்சு எழுவது தான் எனக்குப் பிடிக்கிறதில்லை. அதுதான் உங்களை நான் அண்ட விடுவதில்லை.

நரம்பன் - ஐயா நாங்கள் உண்மையை திரிச்சு எழுதுவதை நீங்கள் கண்டால் எங்களின் மேல் மானநஷ்ட வழக்குப் போடலாம். அதை விட்டுப் போட்டு இந்தப் பத்திரிகைக்காரர் எல்லாம் பொய்யும் புரட்டும் எழுதுகிறாங்கள் என்று பொதுவாகச் சொல்லுவது உங்களுக்கு நல்லதல்ல. நீங்கள் ஒரு நாட்டின் தலைவர், நீங்கள் சொல்வதைச் செய்வதை உலகமே உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு இருக்குது. நாங்கள் இதைப்பற்றி எழுதாமல் விட்டாலும் பிற நாட்டு நிருபர்கள் கட்டாயம் எழுதத்தான் போறாங்கள். இதை நீங்கள் தடுக்க முடியாது.

துரும்பன் - நீ சொல்லுறது சரி ஆனால் என்னைப் பொறுத்தமட்டில். சில பத்திரிகைக்காரர் பழி வாங்குவது மாதிரி பழைய விடயங்களையெல்லாம் கிண்டிக் கிளறி எழுதிக் கொண்டும் தொலைக்காட்சியிலை காட்டிக் கொண்டும் இருக்கிறாங்கள். அதுதான் எனக்குப் பிடிக்காத விடயம். 10-15 வருடங்களுக்கு முந்தின விடயங்களை இப்ப கிளற வேண்டிய அவசியமென்ன என்றுதான் எனக்கு விளங்குதில்லை.

நரம்பன் - (சிரித்துக் கொண்டே) ஐயா, பத்திரிகைக்காரன்களை வேலையே 'சுடச்சுட' திடீர் செய்திகள் போடுவதுதான். அப்படி என்றால்தான் பத்திரிகை நல்லாய் விலைப்படும். மக்களும் விழுந்தடிச்சு வாசிப்பார்கள். தொலைக்காட்சியைப் பார்ப்பார்கள்.

துரும்பன் - திடீர்ச் செய்தி என்று சொல்லிக் கொண்டு எந்த நாளும் என்னைப்பற்றித் தான் எழுதிக் கொண்டிருக்கிறாங்கள். ஏன் வேறை விடயங்கள் இந்த நாட்டிலை நடக்கவில்லையோ?

நரம்பன் - நீங்களும் வியாபார உலகத்திலை கனகாலம் தொழில் பார்த்தனியள். நீங்கள் செய்யாத வேலையையா இவங்கள் செய்யிறாங்கள். இப்ப உங்கடை செய்திகளுக்குத்தான் கூடிய வரவேற்பிருக்குது. எனவே அதைப் பயன்படுத்தி அவங்கள் பணம் சம்பாதிக்கிறார்கள். நீங்கள் எப்படிக் குறுக்கு வழியிலை பணம் சம்பாதிச்சனியள் என்று உங்களுக்குத் தான் தெரியும்.

துரும்பன் - நீ இப்ப எனக்கு வேட்டு வைக்கிறாய் போலை கிடக்குது. அதெல்லாம் பழைய கதை - இப்ப நான் இந்த நாட்டின் தலைவர். அதுக்குத் தக்க மரியாதையைத் தர வேணும் எல்லாரும். அதைத்தான் நானும் எதிர்பார்க்கிறன்.

நரம்பன் - ஐயா மரியாதை என்பது கடைச் சரக்கில்லை. மரியாதையை நீங்கள் கொடுத்தால்தான் மற்றவனும் உங்களை மரியாதையாய் நடத்துவான். இந்தப் பத்திரிகைக்காரன் என்னைப் பற்றிப் பொய்யாக எழுதுகிறான் என்று சொல்லிக் கொண்டு அவன் எழுதுகிறது பொய், அதனாலை அவனை எங்கடை செய்தியாளர் கூட்டங்களுக்கு வரக் கூடாது, அவன் எழுதுகிற ஒன்றையும் ஒருவரும் நம்பக் கூடாது என்று நீங்கள் சமூக வலைத்தளங்களிலே செய்திகள் எழுதி விரோதத்தை வளர்த்துப் போட்டு வாங்கிக் கட்டிறியள். உங்கடை அந்தஸ்து என்ன கௌரவம் என்ன. அதுக்குத் தக்கமாதிரி நீங்களும் நடந்துகொள்ள வேணும். நான் முதலிலை சொன்னமாதிரி அவன் பொய் எழுதினால் உடனே மான நஷ்ட வழக்குப் போடுங்கோ. அப்ப விளங்கும். ஆர் பொய்யன் என்பது. இதை விட்டுப்போட்டு நீங்கள் வியாபாரி மாதிரி நடக்கிறதாலை-தான் உங்களை ஒருதரும் மதிக்கிறான் இல்லை.

துரும்பன் - இப்ப நீ எனக்குப் புத்தி சொல்லிகிறியோ?

நரம்பன் - ஐயா, நான் உங்களுக்குப் புத்தி சொல்ல வரவில்லை. நடந்த விடயங்களை ஒருக்கால் ஞாபகப்படுத்தினனான். நீங்கள் தான் எல்லாத்தையும் கிளறிக் கொண்டிருக்கிறியள் போலை கிடக்குது.

துரும்பன் - இவங்கள் என்னைப் பற்றிக் கூடாமல் எழுதும்போது நான் பேசாமல் இருந்தால் அது மெய்யாக்கும் அதுதான் அவர் பேசாமல் இருக்கிறார் என்று சனம் நினைக்குமெல்லோ?

நரம்பன் - ஐயா உங்கடை யோசனையும் செயலும் உங்களைப் படுகுழிக்குள் விழுத்திக் கொண்டிருக்குது என்று நான் நினைக்கிறன். உங்கடை ஆலோசகர்களும் நண்பர்களும் உங்களைப் பிழையாக வழி நடத்துகினம் அல்லது நீங்கள் அவையின்ரை பேச்சைக் கேளாமல் உங்கடை விருப்பத்துக்குச் செய்து கெட்ட பேர் எடுக்கிறியள்.

துரும்பன் - என்னை ஒருத்தரும் அசைக்க ஏலாது. நான் விரும்பியதைத்தான் செய்வன். இவங்கள் எல்லாருக்கும் பாடம் படிப்பிக்காமல் விடமாட்டன். எனக்கிருக்கிற அதிகாரத்தைப் பற்றி உனக்கு விளங்காது. எனக்குப் பக்க பலமாக மக்கள் பல பேர் இருக்கினம். நான் செய்வதை எல்லாம் அவை வரவேற்கினம். எங்கடை நாட்டுக்குள் கள்ளர், காடர், காமுகர், கொள்ளைக்காரர் எல்லாரும் களவாக இப்போது பல ஆண்டுகளாக வந்து எங்கடை நாட்டின் வளத்தை எல்லாம் உறிஞ்சித் தங்கடை நாட்டுக்கு அனுப்பு கிறாங்கள். இதை நாங்கள் இனியும் பார்த்துக்கொண்டு இருக்க ஏலாது. இவ்வளவு நாளும் இருந்த தலைவர்கள் தாங்கள் காசடிச்சுக் கொண்டு போட்டினம். எனக்குக் காசு முக்கியமில்லை. நாடுதான் முக்கியம்.

நரம்பன் - நீங்கள் சொல்வது சரி, ஆனால் எதையும் செய்வதற்கு ஓர் ஒழுங்கு முறை இருக்குது. நீங்கள் இந்த நாட்டின் தலைவர் என்று சொல்லிக் கொண்டு நாட்டின் சட்ட திட்டங்களை உதாசீனம் செய்து நீங்கள் நினைத்தமாதிரிச் செய்ய ஏலாது. இதை நான் உங்களுக்குச் சொல்லி விளங்கப் படுத்த வேண்டியதில்லை.

துரும்பன் - நீ சொல்லுகிற சட்டதிட்டங்கள் படி செய்ய வெளிக்கிட்டால் எனக்குத் தந்த நாலு வருடம் காணாது. செனட் சபை, மக்கள் சபை என்று அதிலுள்ள சோம்பேறிகள் ஒன்றையும் செய்ய விடாங்கள். எனக்குள்ள அதிகாரத்தைப் பாவித்துத்தான் நான் செய்யிறன். அதை மக்கள் வரவேற்கினம்.

நரம்பன் - நீங்கள் நினைக்கிறதிலை பிழை இருக்குதென்று நினைக்கிறன். மக்களிலை பெரும்பான்மையானவை நீங்கள் தேர்தலிலை முறையாகத் தெரிவு செய்யப் படவில்லை என்றும் பிற நாடொன்றின் உதவியாலைதான் தலைவராக வந்தனியள் என்றும் நினைக்கினை. அதோடு நீங்கள் ஆரம்பிச்சு வைச்ச இந்த விசாரணைக்குழு கூட உங்களுக்கெதிராகத்தான் வேலை செய்யிது போலை கிடக்குது. இதை நீங்கள் தொடக்கி வைச்சதே பெரிய பிழை என்று நான் நினைக்கிறன்.

துரும்பன் - அது ஒரு பிழை போலைதான் கிடக்குது. ஆனா அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஏனென்றால் அவையின்ரை அறிக்கையை நான் வெளியிட விடமாட்டன். அது அப்படியே அடங்கிப் போகும்.

நரம்பன் - அப்படியென்றால் ஏன் அதைத தொடர்ந்து நடத்த விடுகிறியள். மக்களின்ரை வரிப்பணமெல்லே வீணாப்போகுது. தெரிஞ்சு கொண்டு விட்டிட்டிருந்தால் அது உங்களுக்கே ஆபத்தாய் வாரதோ?

துரும்பன் - நான் எப்பவோ நிப்பாட்டத்தான் நினைச்சனான். ஆனால் என்ரை ஆலோசகர்கள்தான் தொடங்கியதை இடையிலை நிப்பாட்டினால் உங்களைப் பற்றித்தான் எல்லாரும் தவறாய் நினைப்பாங்கள். பேசாமல் விடுங்கோ. அறிக்கையை அமத்தி விடுவம் என்று சொன்னார்கள்.

நரம்பன் - ஐயா அவையின்ரை புத்தியைக் கேட்டு நீங்கள் தான் ஆபத்திலை மாட்டுப்படுவியளோ என்று நினைக்கிறன். என்றாலும் நீங்கள் மாற்றுவழி ஏதாவது வைச்சிருப்பியள் தானே.

துரும்பன் - ஓம் ஓம் இப்ப நான் உன்னோடை சில அந்தரங்க விடயங்கள் கதைத்துப் போட்டன் போலை கிடக்குது. இதை நீ எழுதிப் போட்டு என்னிடம் காட்டிப் போட்டுத்தான் பத்திரிகையிலை போட வேணும். அல்லாட்டில் இந்தப் பேட்டியைப் போடாமல் விட்டால் நல்லதென்று நினைக்கிறன்.

நரம்பன் - ஐயா நீங்கள் பல நல்ல விடயங்கள் இதுவரைக்கும் சொல்லியிருக்கிறியள். நான் உங்களைக் கஷ்டப்பட வைக்கமாட்டன். அப்படி உங்களுக்குக் காட்ட வேணுமென்றால் எழுதிப் போட்டு அனுப்பி வைக்கிறன், பாருங்கோ. என்னுடைய பேட்டியாலை உங்களுக்கு ஒரு கெடுதலும் வராது. இதுவரை வெளிவந்த பல செய்திகளையெல்லாம் எதிர்த்து நிக்கிறியள். என்ரை பேட்டி உங்களுக்கு ஒரு தூசு.

துரும்பன் - ந சொன்லுறதும் சரிதான். கூட இருந்தவங்களே குழி பறித்துப் போட்டாங்கள். ஆனால் நான் விழாமல் மேலைதான் நிக்கிறன்.

நரம்பன் - ஐயா நீங்கள் எல்லா விடயத்திலும் மேலைதான் கிடக்கிறியள். நல்லது. நன்றி. நான் போட்டு வாறன்.




# உயிர்ச்சத்து -D Vitamin -D



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

உயிர்ச்சத்துக்கள் பல இருந்தாலும் உயிர்ச் சத்து D க்கு மிகவும் முக்கியத்துவம் உண்டு. மருத்துவ உலகில் இது ஒரு சர்வரோக நிவாரணியாகக் கருதப்படுகிறது. புற்றுநோய், உளச்சோர்வுமுதல் இதயநோய் வரையில் பலவற்றிற்கும் உதவுவது இந்த உயிர்ச் சத்தாகும். இதனை ஒரு சூரியபிரகாச உயிர்ச்சத்து (Sunshine Vitamin) என்று அழைப்பர். காரணம் உலகில் உள்ள பலர் தினசரி இந்த உயிர்ச்சத்தினை சூரிய ஒளியிலிருந்து பெற்றுக்கொள்ளுகின்றனர். பல்வேறு மருத்துவ நிலையங்களும் ஆண்களை 600 IU உயிர்ச்சத்து D ஐ எடுக்க வலியுறுத்துவார்கள். ஆனால், இது போதாது என்பதால் கூடுதலான அளவில் எடுக்கவே தற்போது வற்புறுத்தப்படு கிறார்கள். இதனால் தற்போது 1000 IU என்ற அளவில் சராசரியாக எடுக்கிறார்கள்.

உயிர்ச்சத்து D என்பது பல்வேறு உயிர்ச் சத்துக்களின் கூட்டாகும். D1 தொடக்கம் D5 வரைக்கு ஐந்து வகையாக இச்சத்து உள்ளது. அடிப்படையில் ஒன்றானது எனினும் சிறிய அளவில் இது வேறுபடு கிறது. D1என்பது Ergocalciferol கொண்ட தாகும். D2 Ergosterol கொண்டதாகும் D3 Cholecalciferol கொண்டதாகும். D4 dihydroxy ergocalciferol கொண்டதாகும். D5 Sitocalciferol கொண்டதாகும். இவை வேறுவேறு காலங்களில் பாவனைக்கு வந்தவையாகும்.

பொதுவாக உயிர்ச்சத்து D என்றால் கல்சியம் என்றே எல்லோருக்கும் தெரியும். உயிரியல் ரீதியாக உடலின் பெரும் பகுதிக்கும் கல்சியமே தேவையாகிறது. ஹோர்மோன் சுரப்பி முதல் எலும்புகளின் வலுவரையும் இது மிகவும் தேவைப்படு கிறது. மூளை, இதயம், தோல், புறொன்ரேற், மார்பகம், சிறுநீரகம் எனப் பல உறுப்பு களுக்கும் உயிர்ச்சத்து D மிகவும் தேவையாகும். உயிர்சத்து D குறைந்து விட்டதென்றால் எதிர்ப்புச்சக்தியே குன்றி விடலாம். உயிர்ச்சத்து D என்பதனை VDR Vitamin D Receptor என்றே மருத்துவர் குறிப்பிடுவர். இது ஒவ்வொரு காலத்திலும் உள்ள உயிர்ச்சத்து Dயின் ஏற்புத் தன்மையாகும்.



உயிர்ச்சத்தின் முக்கியமான தேவை எலும்புகளின் மண்டலத்துக்கானதாகும். வயிற்றில் உறிஞ்சப்படும் இவ் உயிர்ச்சத்து எலும்பின் உறுதித்தன்மைக்கு உதவுகிறது. பொதுவாக எலும்புகளின் நிரந்தரமான வலுவுக்கு இது பலவழிகளில் உதவலாம். எலும்புசிதைவு (Osteoporosis) ஏற்படாதிருப் பதற்கு இதுவே உதவலாம். வயது முதிர்ந்த வர்கள் தங்களது எலும்புகளை முறி வடையாமல் பார்க்க வேண்டியுள்ளது. உயிர்ச்சத்து D குறைவதால் பல முதியோர்கள் படிகளில் தவறிவிழுகிறார்கள். எலும்பினது அடர்த்தி (Bone Density) குறைவடைவதே காரணமாகும். விளையாட்டு வீரர்களும் இவ் உயிர்ச்சத்து குறைந்தால் தங்கள் எலும்புகளை முறித்துக் கொள்வர். இதனால் உணவு மருந்து நிறுவனங்கள் உயிர்ச்சத்து D உள்ள பொருட்களை விநியோகிக்கின்றன.

முதியோர்களது மரணத்திற்கும் உயிர்ச்சத்து D குறைவதற்கும் தொடர்புண்டு. உயிர்ச் சத்து முதியோர்களின் இரத்தச் சுற்றோட் டத்திற்கு முக்கியமாகும். ஆய்வுகளின்படி உயிர்ச்சத்து D எடுப்பவர்களின் மரண விகிதம் குறைவடைவதாகவே கணிக்கப் பட்டுள்ளது. அதிகமான வெள்ளையின மக்கள் உயிர்ச்சத்து D எடுப்பதனால் கறுப்பு இனத்தவர்களைவிட கூடிய ஆயுள் பெறுகிறார்கள் எனவும் அறிக்கைகள் உள்ளன.

உயிர்ச்சத்து குறைபாடு கண்பார்வையுடன் தொடர்புடையதாகும். 50 வயதுக்கு பின்ப தாக கண்களில் AMD எனப்படும் Age Related Macular Degeneration நோய் பல ருக்கும் வருகிறது. இதற்கு வயது, இனம், மரபணு காரணம் என்றாலும் அண்மைய ஆய்வுப்படி உயிர்ச்சத்து D குறைபாடும் இந்நோய்க்கு காரணம் என கூறப்படுகிறது. University of Buffaloவில் நடைபெற்ற 913 பேரின் மீதான ஆய்வுப்படி உயிர்ச்சத்து D குறைவதாக இருந்த 88 பேருக்கு இந்நோய் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு இதன்மூலம் பார்வைக்கும் உயிர்ச்சத்து டி க்கும் உள்ள தொடர்பு அறியப்பட்டுள்ளது.

உயிர்ச்சத்து Dக்கும் புற்றுநோய் ஏற்படு வதற்கும் தொடர்புகள் உள்ளன. இச்சத்துக் குறைபாடுள்ளவர்களுக்கு குடற்புற்றுநோய்

(தொடர்ச்சி 34ஆம் பக்கம்...)



## BASEMENT FOR RENT

**WARDEN & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, cable, internet.
Close to all facilities. Avail. immediately.
**647.448.6464 / 416.332.0052**

**WARDEN & LAWRENCE**
2 bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry, internet. Two minute walk to the bus stop Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.827.2431**

**HWY 7 & NINTH LINE**
1 bedroom bsmt for rent. Parking, laundry, internet. Close to all facilities.
Avail. October 01, 2018.
தொடர்புகளுக்கு: **647.505.1131**

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, Laundry. No parking. Close to All facilities.
Avail. immediately.
**416.825.8083 / 647.995.3968**

**MARKHAM & SCARBOROUGH**
Bsmt for rent. Sep. entrance, parking, Laundry. Close to All facilities.
Avail. immediately.
**905.427.1370 / 647.500.4564**

**EGLINTON & MIDLAND**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, utilities. Close to TTC, school.
Avail. immediately.
**416.757.4735 / 416.528.9683**

**WESTNEY & ROSSLAND**
2 Bedroom bsmt for rent.
Parking, laundry. Close to All facilities.
Avail. October 01, 2018.
**647.545.9204 / 647.409.9204**

**MORNINGSIDE & MORNINGVIEW**
1Bedroom bsmt for rent. Sep.entrance, Parking, laundry. Ladies only.
Close to all facilities. Avail. immediately.
**416.299.6214 / 416.484.2319**

**WESTNEY & ROSSLAND (AJAX)**
2 Bedroom bsmt for rent. Sep.entrance.
Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.258.7156**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, 2 Parking, laundry. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.294.1966**

**ROUGE RIVER & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, Parking, laundry, internet. Close to hwy 401. Avail. September 01, 2018.
தொடர்புகளுக்கு: **416.418.2355**

**NELSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry. Single preferred. Close to all facilities. Avail. September 01, 2018.
தொடர்புகளுக்கு: **416.835.0273**

மேலும் பக்கங்கள் 29, 30, 31, 32, 33, 34

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Young couple only.
Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.998.0966**

**NINTH LINE & 14TH AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, one parking, laundry. Close to all facilities.
Avail. immediately.
**905.294.9067 / 647.309.9067**

**NELSON & MCLEVIN**
2 Bedroom bsmt for rent.
Laundry, utilities. Close to all facilities.
Avail. September 01, 2018.
தொடர்புகளுக்கு: **416.292.1953**

## BASEMENT FOR RENT

**CHURCH & ROSSLAND**
2 Bedroom bsmt for rent.
Sep. entrance, 2 parking, Laundry, internet. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**416.831.0942**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom bsmt for rent.
Sep. entrance, 1 parking, Laundry, internet. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**416.371.5444**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & 14TH AVE.**
2 Bedroom basement for rent.
Sep. entrance, parking, laundry, internet.
Close TTC, Hwy 407 and all facilities.
Small family preferred. No smoking & No pets. Rent $1,250.00 all utility inclusive
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.726.8403**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, Laundry, internet.
Close to Scarborough town centre with other facilities . Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**647.286.7716**

## BASEMENT FOR RENT

**MCLEVIN & SHEPPARD**
1 Bedroom walkout bsmt for rent.
Newly renovated kitchen & washroom. Close to all facilities.
தொடர்புகளுக்கு:
**416.454.9370 / 647.351.7205**

## ROOM FOR RENT

**BRIMLEY & ELLESMERE**
1 Room for rent in a house.
Only for girls. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.906.5013**

**WARDEN & FINCH**
1 Bedroom room for rent.
Laundry internet. Close to all facilities.
Avail. immediately.
**416.493.6126 / 416.276.6224**

**MCCOWAN & EGLINTON**
1 Room for rent in a apartment. Internet.
Single preferred. Close to all facilities.
Avail. immediately.
**647.696.0028 / 416.320.8979**

**DANFORTH & EGLINTON**
1 Room for rent. Laundry.
Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.838.6636**

**MCCOWAN & SHEPPARD**
1 Room for rent in a condo.
Sep.washroom. Female preferred.
Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **905.447.1306**

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent in a basement.
Single preferred. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.208.0950**

**MARKHAM & ELLESMERE**
1 Room for rent.
Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

**PHARMACY & LAWRENCE**
1 bedroom available in 3 bedroom upstairs house. Only ladies & Seniors 60 & older. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.985.7070**

**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom room for rent. Parking, laundry.
Males Preferred. No smoking & No drinking. Avail. immediately.
**647.707.0457 / 647.857.9536**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, utilities.
Family, Couple, & students Preferred.
No Pets. Close to school, TTC, walmart, shopping. Avail. October 01, 2018.
**647.761.5599 / 905.479.5599**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent.
Sep. entrance, parking, cable, internet, utilities.
Close to all facilities.
Avail. October 01, 2018.
**416.898.1242 / 647.707.7827**

## HOUSE FOR RENT

**MIDDLEFIELD & MCNICOLL**
3 Bedroom house for rent. 2 washroom.
Rent $1800 + 60% Utilities. No pets, no smoke, no alcohol. Avail. October 01, 2018.
தொடர்புகளுக்கு: **647.855.2148**

**TAPSCOTT & FINCH**
4 Bedroom house for rent.
Close to all facilities.
Avail. October 01, 2018.
தொடர்புகளுக்கு: **289.624.3787**

**HARMONY & TAUNTON (OSHAWA)**
4 Bedroom, 2 washroom & 2 familyroom house for rent. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.917.8265**

**NEILSON & SHEPPARD**
4 Bedroom house for rent.
Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.409.6480**

## BASEMENT FOR RENT

**MARKHAM & ELLESMERE (NEILSON)**
1 Bedroom bsmt for rent.
laundry, utilities. Close to all facilities. Couple/family preferred. Avail. immediately.
**647.296.9565 / 416.439.6665**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom basement with Sep. entrance, brand new kitchen, appliances and bathroom. Close to school and 1 min walk to TTC.
தொடர்புகளுக்கு: **647-401-7443**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent.
Sep. entrance, parking, Laundry, internet , utilities. Couple preferred.
Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.830.4894**

## BASEMENT FOR RENT

**ROSSLAND & WESTNEY**
2 Bedroom bsmt for rent.
Sep. entrance, Laundry, internet. Close to all facilities.
Avail. immediately.
**250.613.8389 / 905.999.4195**

**வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட**
வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட அழையுங்கள்:
**647.402.2937**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & ELLESMERE**

2 Bedroom bsmt for rent.
Sep. entrance, parking, laundry.
Close to school, hospital, TTC.
Avail. October 01, 2018.
**647.299.9580 / 416.722.8061**

## ROOM FOR RENT

**BRIMLEY & FINCH**

1 Room for rent in 2 bedroom basement. Sep. entrance.
Only for student ( boys ).
Close to all facilities.
Avail. immediately.
**416.473.4717 / 416.609.0660**

## ROOM FOR RENT

**MIDDLEFIELD & FINCH**

1 Bedroom in main floor for rent. Laundry, internet.
Close to TTC and all facilities.
Avail. immediately.
**416.567.1764 / 647.961.5520**

## ROOM FOR RENT

**9TH LINE & 14TH AVE.**

1 Room for rent in main floor.
Shared kitchen , Female preferred. Close to all facilities.
Avail. immediately.
**416.347.9446 / 905.201.6464**

## ROOM FOR RENT

**TAUNTON & BROCK ( PICKERING )**

1 Room for rent. Single preferred.
Close to walmart, bus stop, no frills.
45 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் விரும்பத்தக்கது. உதவிகள் செய்து கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **647.938.1054**

## ROOM FOR RENT

**MILLARD & HWY 48 (STOUFFVILLE)**

1 Room for rent. Male, couple or students preferred.
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**416.670.7436**

## APARTMENT FOR RENT

**MARKHAM & EGLINTON**

1, 2 & 3-Bedroom Apartments for Rent.
Utilities Included. Clean, Renovated High-Rise Building. Near TTC, Schools & Shopping. Tamil Store in Building.
On-Site Laundry.
**CALL: 416-264-2818**

## HOUSE FOR RENT

**MARKHAM & ELSON**

4 Bedroom & 3 ½ Washroom
2 Parking & Laundry.
Close to all facilities.
No smoke & No pets.
Avail. September 15, 2018.
Contact: **416-500-1142**

## HOUSE FOR RENT

**HWY 401 & HARMONY (COURTICE)**

3 Bedroom brand new town house for rent. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.999.4842**

## HOUSE FOR RENT

**WARDEN & HWY 401**

3 Bedroom house for rent.
Parking, Laundry.
Close to TTC, school, mall.
Avail. immediately.
**647.680.2947 / 289.660.0309**

## HOUSE FOR RENT

**ELLESMERE & ORTON PARK**

3 Bedroom house for rent.
Parking, laundry, utilities.
Close to all facilities.
Avail. immediately.
**647.998.0181 / 905.471.2444**

## HOUSE FOR LEASE

**MARKHAM & CASTLEMORE**

3+1 Bedroom & 2½ washroom 3 level townhouse for lease. $2250 +Utilities. 1,750 Sq.ft., fully upgraded, balcony. Near hwy 407. No Smoke & no pets. Avail. October 01, 2018.
தொடர்புகளுக்கு: **416.834.1081**

## HOUSE FOR SALE

கல்கிஸ்சையில் Police Stationக்கு அருகாமையில் புதிதாக கட்டிய மாடி வீடு ஒன்று (6 Perch) உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
**011.94.75.524.0728**

## HOUSE FOR SALE

**MORNINGSIDE & STAINES**

3 bedroom & 3 washroom townhouse for sale.
**We have more houses for sale & rent.**
Kannan Kankesu: **416.834.4200**

## CONDO. FOR SALE

**MARKHAM & EGLINTON**

2+1 Bedroom & 2 Full washroom condo. for sale.
**Coming Soon Another Condo. For Sale**
**Please Call @ 416.709.5000**

## HOUSE FOR SALE

**SCARBOROUGH**
**MARKHAM & EGLINTON**

2 Bedroom, 2 washroom condo. apartment with low maintenance fee & 1 Parking for sale $259,900.00

**AJAX**
**MAGILL & SULLIVAN**

Detached 2 storey 3 bedroom brick house with attached 2 car garage for sale $499, 000.00

**416.917.0557**
**Rajah Masillamany**
**(HomeLife / Future Realty Inc.)**

மேலும் பக்கங்கள் 28, 30, 31, 32, 33, 34

## RENT / LEASE

***ROOM RENT, BASEMENT RENT, HOUSE RENT.***
***visit to :***
**www.vlambaram.com**

## மணமகள் தேவை

யாழ். இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 34 வயது Diploma படித்து முடித்து சொந்தஜ; தொழில் புரியும் மணமகனுக்கு பெற்றோர் படித்த தகுந்த மணமகளைக் கனடாவில் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்புகளுக்கு: **416.669.6504**

## மணமகள் தேவை

வேளாளர் குலத்தில் பிறந்த 35 வயதுடைய கட்டாறில் வேலை செய்யும் மணமகனிற்கு கனடா அல்லது USA இல் மணமகள் தேவை. (குழந்தைகள் இல்லாத விவாகரத்தானவர்களும் விரும்பத்தக்கது)
**Viber:**
**+94.77.383.5061/ 416.276.8840**

## ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கை துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.
**416.890.6497/**
**srisai2912@hotmail.com**

## இலவச திருமணசேவை

**இலவச திருமண சேவைக்கு**
தொடர்பு கொள்ளவும்
**905.607.3896**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

I am working with a group of students who are looking to rent rooms , house or basement apartments in Scarborough and surrounding area.
**உங்களது** rooms , house or basement **இனை சட்டரீதியாக** University / College Students **இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட**

***HARI SANTHIRARAJAH - 647.262.8490***
HomeLife Future Realty Inc. Brokerage Inc.

## BASEMENT / ROOM WANTED

**For working professional person.**

கனடாவிலும் இலங்கை மற்றும் இந்தியாவிலும் பணிபுரியும் குடிவரவு ஆலோசகருக்கு ( Immigration consultant ) தங்கியிருந்து பணிபுரியக்கூடியவாறான Parking வசதியுடன் Basement / room தேவைப்படுகின்றது. இலங்கை இந்தியா நேரப்படி வேலை செய்வதால் இரவிலும் பணிபுரியக்கூடியவாறும் அடிக்கடி பயணப்படுவதால் மாதம் $600க்கு மேற்படாமலும் எதிர்பார்க்கப்படுகிறது. GTAஇல் Scarborough / Vaughan/ Mississauga போன்ற இடங்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: **647.717.8226**

## HOUSE FOR SALE/ RENT

**SEWELLS & HUPFIELD**

3 + 2 bedroom, 3 full washroom & 2 kitchen house for sale/rent.
Hardwood floor, double garage, 2 separate laundry, 4 parking.
Close to Bus, school ( 5 minute walk ), Shopping centres.
Avail. Immediately.
**416.315.4653 / 647.200.8907 / 647.550.5343**

## RESTAURANT FOR SALE

**MORNINGSIDE & LAWRENCE**

Liquor license (42 seats ) உடன்
Restaurant
விற்பனைக்குண்டு.
Monthly rent $1500 மட்டுமே.
தொடர்புகளுக்கு: **647.606.1009**

## வாகன போக்குவரத்து

**Western** பல்கலைக்கழகம், விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி சுற்றாடல், மற்றும் குறுகிய தூரம்.
தொடர்புகளுக்கு: 416.880.5952

## BINS RENTAL

**METRO EAST DISPOSAL**

Commercial, Residential & Industrial waste removal
bins rental
**Francis Uthayan:**
**416.671.5025 /647.856.6902**

## புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிகத் தரமான புகையிலை, சுருட்டு விற்பனைக்கு உண்டு.
கிடைக்கும் இடம் Warden & Finch, Morningside & Sewells. வரி கட்டப்பட்டது
தொடர்புகளுக்கு: **647.629.9095**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.
**MOVING / DELIVERY AVAILABLE.**
தொடர்புகளுக்கு:
பிறேம் - **647.835.5244**

## MINIVAN SERVICE

6 பேர் செல்லக்கூடிய
Dodge Grand Caravan.
உங்கள் பயண தேவைகள் எதுவானலும் அழையுங்கள்.
**Call Ajanthan:**
**647.544.2515**

## தையல் வகுப்புக்கள்/Orders

**MARKHAM & LAWRENCE**

Saree Blouse, Skirt & Blouse, Ladies Items மற்றும் Saree Blouse Block எடுத்து தைப்பதற்கும் கற்றுக் கொடுப்பதுடன், மணப்பெண்ணுக்கும் blouse தைத்துக் கொடுக்கப்படும்.
**416.438.2552 /647.853.5524**

## AZ DRIVERS WANTED

Amero Logistics is currently looking for AZ Drivers for Toronto Montreal run & city drivers for city work. Need1 year experience & clean abstract. Pay .55 cents per mile plus waiting time after 2 hrs & pay weekly. For more info call **(647) 274-0300**

## பராமரிப்பாளர் தேவை

முழுநேரம் இரண்டு முதியோரை பராமரிக்க ஆள் தேவை.
Need a housemaid to take care of 2 seniors for full time.
தொடர்புகளுக்கு: **416.779.7563**

## CONSTRUCTION WORKERS WANTED

Dry wall framer-Tile workers
5 days work.
**Contact Ken:**
**416.523.7933**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**GAS STATIONS IN PETERBOROUGH.**

Full time cashier needed.
சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.
தொடர்புகளுக்கு: **416.545.9959**

## DRIVERS WANTED

அனுபவமுள்ள உள்ள
PIZZA PIZZA Drivers தேவை.
அல்லது Victoria park & Sheppard சந்தியில் Store #100க்கு நேரில் வரவும்
**647.831.1602 / 416.727.3869**

## குழந்தை பராமரிப்பாளர் தேவை

**BOVAIRD DR. E. & HEART LAKE RD (BROMPTON)**

வீட்டில் இருந்து குழந்தைப்பேறு பார்ப்பதற்கு பராமரிப்பாளர் ஒருவர் தேவை.
**416.402.4126 / 647.631.5942**

## DRIVERS WANTED

**SAYAN TRANSPORT LTD**

Dz, Az, Bz Drivers wanted for straight truck.
Full time & Part time.
Call or text : **647.309.5030**
**sayan.26@hotmail.com**

## COOK WANTED

கனேடிய Restaurant Bar & Grill ஒன்றிற்கு Full time & Part time Cook தேவை.
தொடர்புகளுக்கு: **647.624.9677**

## வேலைக்கு ஆட்கள் தேவை

Part time & Full time வேலைக்கு ஆட்கள் Night Day & Night time. Starting $17 per hour. ஆண்களுக்கு மட்டும். Must have G Licence. Down Town Area தெரிந்திருக்க வேண்டும்.
**416.453.0000/416.520.4746**
**(call only 9a.m - 5p.m)**

## LOT PERSON / AUTO DETAILER WANTED

SCARBOROUGH வில் அமைந்துள்ள Used Car Dealer Ship ஒன்றிற்கு வாகனங்களை Cleaning செய்ய, Display Lot ஐ பராமரிப்பதற்கு ஆட்கள் தேவை. Must have Ontario valid Driver Licence. Full / Part time position available.
தொடர்புகளுக்கு: **416.419.2300**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**STRATFORD** நகரத்தில் இயங்கிவரும்
BAR & GRILL RESTAURANT க்கு
COOK & HELPER தேவை. தங்குமிட வசதி தரப்படும்.
நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: **416.716.5592**

## CARS, VANS & TRUCKS WANTED

**Any make, Any condition.**
**Pay top dollars.**
**Contact: 416.835.3475**

## KITCHEN STAFF / DRIVER WANTED

FULL TIME / PART TIME FOR RESTAURANT – TO START IMMEDIATELY.
**CONTACT: 416-985-8341**

## AZ DRIVERS WANTED

Need immediately experience drivers (At least one year) for long & short run with in Canada. Full time, Part time & on call.
**647.528.2224 / 647.830.4644**

## ஈழ உறவுகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவோம்

நமது சமுதாயத்தில் இடம்பெறும் தேவைகளை எமது சேவைகளால் பூர்த்தி செய்து அதன்மூலம் கிடைக்கப்பெறும் வளங்களை கொண்டு ஈழ உறவுகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திவருகிறோம்.
எமது சேவைகளில் சில:
தோசை & அப்பம் catering services. Private Piano lessons , Local transportation , Local delivery ,Cleaning etc. உங்கள் தேவையை எங்களுக்கு அறியத்தாருங்கள், நாங்கள் சிறப்பாக உங்கள் தேவையை பூர்த்தி செய்வோம்.
தொடர்புகளுக்கு: 647-992-4775 - www.Jobs2serve.net

## HOUSE / ROOM FOR RENT

**KENNEDY & EGLINTON**

TWO BEDROOM, KITCHEN + DINING etc.
SPACIOUS LIVING HALL + all facilities.
Good for working family - neat & clean very convenient location-bungalow (401 hwy, TTC 43, Kennedy subway)

**Please call : 416.264.3899**

## HOUSE FOR RENT

**BROCK & TAUNTON**

Specious never lived in beautiful brand new detached house for rent in **NORTH PICKERING** near **HWY 407**.
Approximately 2400 sq.ft with 4 bedrooms & 3 washrooms. Separate family room with walk out balcony. Hardwood throughout with lot of upgrade. unfinished 11 ft. basement. Double garage.

**416.358.8241 / 647.881.6172 / 416.731.4322**

## A-Z U.S.A. DRIVERS WANTED

**3,000 TO 3,800 MILES PER WEEK GURANTEED**

EXPERIENCED BASED PAY RATE **(0.45 - 0.70)**
SINGLE / TEAM
***NEW DRIVERS*** ALSO WELCOME !!!

**CONTACT JAY : 202-956-8556**

## KITCHEN HELPER WANTED

***Richmond Hill or Downtown location***

**Please call - Ken : 647-298-0939**
**or email: info@thaibasil.ca**

## ARE YOU LOOKING FOR WORK ?

Please Call: ***416.514.0733*** or
email your resume to: infoandemployment@gmail.com

- General Labourers / window assemblers
- Saw Machine Operator
- Electrician (309A) / Electrical Apprentice
- G driver and driver helper
- Forklift Operator - Raymond Reach / Counter Balance
- General labour in Painting company and Window factories
- Plumbers-install pipe (4th year, 5th years and Licenses)
- Refrigerator and air condition Technician
- Die and Tool in Aluminium Factory

## DRIVER WANTED

***Markham Boxgrove*** பகுதியில் இருந்து MDHS பாடசாலைக்கு Pick & Drop செய்வதற்கு தகுந்த ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். செப்ரெம்பரில் இருந்து உடனடியாகத் தேவை.

***647.242.9455 / 647.821.3533***

## வேலைக்கு ஆட்கள் தேவை

**BRADFORD** இல் இயங்கிவரும் Magna Warehousக்கு Cleaners தேவை. Full time 6:00am to 2:00pm or 7:00am to 4:30

**NEWMARKET & AURORA**

Magna head officeக்கு Female Cleaners தேவை. 8:00am to 4:30pm

தொடர்புகளுக்கு: **416.951.9504**

## சொர்க்கம் திருமணசேவை

36 வயதுடைய கனடாவில் வாழும் Roman Catholic மதத்தை சேர்ந்த விவாகரத்தான மணமகளுக்கு கனடாவில் அல்லது இலங்கையில் மணமகனை தேடுகின்றோம்.
மற்றும் இலங்கை இந்தியாவில் இருந்து நல்ல வரன்கள் எடுத்து தரப்படும்.

**416.666.1855 / 647.504.3336 (viber)**

## மணமகன் தேவை

யாழ்ப்பாணம் கோண்டாவிலை சேர்ந்த 35 வயதுடைய சதய நட்சத்திரம் கும்பராசி, பட்டதாரி ஆசிரியை மணமகளுக்கு U.S.A யில் வாழும் மாமா, சித்தி கனடா அல்லது அமெரிக்காவில் இருக்கும் மணமகனை தேடுகின்றனர். U.S.A மணமகன் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: **716.603.5134 / 347.444.6994**

## Musical Instruments - Buy/ Sell / Repair

- We sell / buy / repair all kinds of musical instruments.
- We buy your used Veena, Miruthangam or Harmonium in any condition.
- We pay cash or give credit to buy a new one.


உங்களிடமுள்ள பழுதடைந்த எல்லாவிதமான இசைக்கருவிகளையும் திருத்திக்கொள்ள அல்லது உயர்ந்த விலைக்கு விற்று புதிய இசைக்கருவிகளை வாங்கிக்கொள்ள அழையுங்கள்

**Trinity Instruments: 416.261.1919**
151 Nashdene Road Scarborough, ON M1V 4C4



## A1 CEYLON

**COURIER SERVICES**



சிறிய அளவிலும் பெரிய அளவிலும் Moving செய்து தரப்படும். புதிய பெரியதும் சிறியதுமான Cargo & Cube சாரதியுடன் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
உங்கள் வீட்டிற்கு வந்து முதற்தரமான போட்டோ வீடியோ சேவைகளை வழங்கும் A1 கொழும்பு & செய்ற் பிரான்சிஸ் போட்டோ வீடியோ நிறுவனத்தின் மற்றுமொரு புதிய சேவை
கனடாவில் உங்கள் வீட்டிற்கு வந்து பொதிகளை எடுத்து இலங்கையில் உள்ள நீங்கள் சொல்லும் விலாசத்தில் பாதுகாப்பாக ஒப்படைக்கப்படும்.

**முன்பதிவு அவசியம் Tel: 416 613 2999**

## AZ DRIVERS WANTED

Minimum 2 years experience.
Full time, Part time & on call.

**Call - Sankar: 416.732.6931**

## COMPUTER REPAIR

**Laptop, Computer Repair, Virus Removal, Data Recovery, Upgrading, Networking, Printer Problems & Any Other**

**Troubleshooting** அனைத்து விதமான **Computer** திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக் கொடுக்கப்படும்.

**Please Call Varun: 416.894.6244**

## MINIVAN SERVICE

11 பேர் செல்லக்கூடிய MINIVAN SERVICE
வார இறுதியில் Montreal, Val morin Temple & Airport மற்றும் உள்ளிட சுற்றுலாவுக்கும் அழைத்துச் செல்லப்படும்.

தொடர்புகளுக்கு : **416.303.5682**

# FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
# WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

***Scarborough* – Morningside / Sheppard – Basement**
(1Brm+1Bath) Close to all Amenities. Pvt entrance. Available from 1st September. Suitable for working individual or a couple
**[Asking$800/m]**

***Scarborough* – Nielson / Sheppard – Condo Apt**
(2Brm,1Bath) Well Maintained. Open Concept, Walk To Mall, Groceries, Medical Blding. Eat In Kitchen. Walkout To Balcony. Close To mosque, Churches, Schools, Ttc At Doorstep. **[Asking $1600/m]**

***Scarborough* – Finch / Brimley– Full house**
(3Brm, 3Bath) Move In Condition. Steps To Finch Ttc, School, Park, All Amenities And Shopping. **[Asking $2100/m]**

***Scarborough* - Sheppard / Dvp – Condo Apt**
(1Br + 1Bath) On Sheppard/Hwy 404/Hwy 401. Stylish, Bright And Spacious, S/Steel Appliances. Granite Kitchen Countertop, Huge Balcony And Laminate Flooring. 24 Hours Security, Step To Fairview Mall, Restaurants, Shops, Bank, Sunway/Ttc/Bus Stop And More
**[Asking $1700/m]**

*** *Toronto* – Bathurst / Front – Condo apt**
(1Brm, 1 Bath) Luxury Brand new condo, Newer Appliance, Nice view,24 hr security. Close to all amenities. **[Asking $2200/m]**

*** *Toronto* – Heath/ Avenue – Condo apt**
(1Brm, 2 Bath) Spacious Vacant Property, Has A Nice Deck, W/O To Large Patio, Big Wood Kitchen, Back Splash, Eat-In-Bar And Lot Of Storage Cabinets Fireplace. Close to all amenities. **[Asking $2250/m]**

***Markham* – Markham / Denison– Condo unit**
(1Brm, 1Bath) Near All necessary amenities (Walmart, Grocery Store, Banks, Shopping Centre, Costco, Home Depot, Canadian Tire, Restaurants) Steps To Ttc And Close To Schools. Energy Efficient Design/ Solar Panels To Keep Utilities Low. **[Asking $1700/m]**

*** *Markham – Markham* / Elson – Main Floor**
(4 Brm, 4Bath) Close To Costco, No frills, Great School, Shopping, Parks, Bank & Transportation. Available immediately. **[ Asking $2600/m]**

*** *Markham* – Markham / 16th Avenue – Town house**
(2Brm, 1 Bath) Brand new house, 3 levels, 3 parking, close to all amenities **[Asking $1900/m]**

***Markham* – Markham / Steeles – Main floor**
(4Brm, 3Bath) Close to shopping, schools, ttc, Banks, school, park and all amenities **[Asking $2100/m]**

***Oshawa – Taunton* / Harmony – Full house**
(4Brm, 4Bath) Bright and spacious, Hwd throughout main floor, Oak stairs, Close To All Amenities, Schools, Transit, Shopping, Hwy 407 & 401. . **[Asking $2100/m]**

***Ajax* – 401/Westney/Rossland – Main floor**
(4Brm, 3Bath) Bright & Spacious With Separate Living, Dining, & Family Room. Master Bedroom With W/I Closet & 5 Pc Ensuite. Large Backyard To Enjoy. Close To Prestigious Schools, Hwy 401, 407, Go Train, Shopping & All Amenities. **[Asking $2250/m]**

watsonpm1989@gmail.com **MANAGING RESIDENTIAL PROPERTIES**

Karu: 416-616-7278 Vithy: 416-509-9557 Watson: 416-417-8432

# We make it easy for you to be a Landlord!

**OUR SERVICES INCLUDE:**

- Marketing, listing and showing properties
- Answering lease enquiries
- Tenant screening, pre-qualifying, negotiating lease and finding the right tenant
- Property inspections before and after renting
- Handle tenant enquiries
- rent collection and deposit to Landlord
- Eviction of bad tenants
- Scheduling Maintenance and repairs of property
- Year end accounting
- Renewal of lease
- Market value update

**You can relax while we take care of your investment property!**

**WATSON**
PROPERTY
MANAGEMENT LTD

**Direct: 416-284-9999**
WatsonPM1989@gmail.com
111 Grangeway Ave. Suit #301
(RBC Building) Toronto, ON M1H 3E9

ALEXANDER IMMIGRATION SERVICES
CANADIAN IMMIGRATION & CITIZENSHIP CONSULTING FIRM
கனடா குடிவரவு குடியுரிமை ஆலோசனை நிறுவனம்

- Study Permit
- Spousal Sponsorship
- Express Entry
- Visitor Visa
- Citizenship Applications
- LMIA based Work Permits
- Visa Extension
- Super Visa - Parents
- Parents Sponsorship
- Business Immigration
- Provincial Nominees
- PR Card Renewals
- Post Graduate Work Permits
- Humanitarian Applications

தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மூன்று மொழிகளில் சேவை.
உன்னதமான தொழில்முறை சேவைக்கு அழையுங்கள்.

Canadian Government Regulatory Body Licensed Immigration Consultant

Hemalatha K Alexander, B.Sc, MBA, RCIC, Commissioner of Oaths
by Tel : +1 647 773 3673 or email : info@alexanderimmigration.ca

10 Milner Business Court Suite 354 Toronto M1B 3C6 ON Canada

JOB JOB JOB
PHARMACY & FINCH /MIDDLEFIELD & FINCH
பகுதியில் உணவகம் ஒன்றிற்கு Cashier, Srilankan style cook & Helper வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
நேரில் வந்து Apply செய்யவும். தொடர்புகளுக்கு: **416.318.9866**

உடனடி வாடகைக்கு
வீடுகள், கொண்டோக்கள் வாடகைக்கு விட, வாடகைக்கு பெற்றுக்கொள்ள
அழையுங்கள்: **416-816-9011**

மேலும் பக்கங்கள் 28, 29, 30, 31, 32, 34

வீடு, அறை, நிலஅறை (**BSMT),** கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

சிறுநீரகம் தேவை
**38** வயதுடைய 2 வயதுப் பெண் குழந்தையின் தந்தைக்கு A+ மற்றும் O வகை இரத்த மாதிரி உடையவர்களின் சிறுநீரகம் (kidney) உடனடியாகத் தேவைப்படுகிறது. தானம் செய்ய விருப்பம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**647.975.3962**

எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?
வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.456.9796


வாழும் திறன்
இயற்கையுடன் இணைந்து இன்புற்று வாழ்தலுக்கான சிறப்பு வகுப்புக்கள்
பிரபல்யமான இந்திய சமய சாஸ்த்திர நிபுணர்
வி. கணேஷ் அவர்களால் Middlefield & Mcnicoll சந்திப்புக்கு அருகாமையில் நடைபெறுகின்றது. ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம்.
வி. கணேஷ்: 416.816.2563 **மகேன்:** 416.893.1222
ஆறுமுகம் (AGR): 416.832.9467

# மறக்கத் தெரியாத...

## 37ஆம் பக்கத்தொடர்ச்சி

அவ்வப்போது கனடியப் பத்திரிகைகளிலும் பத்திகள் (Column) எழுதி வருகிறார். பிரபல எழுத்தாளர் (ஜே.கே) ஜெயகாந்தனுடன் நெருங்கிப் பழகிய நண்பர்.

ஒருநடு நிசிப் பொழுதில் என்னைத் தொலைபேசியில் அழைத்தார். 'Mrs. அமிர்தலிங்கம் வந்திருக்கிறா. வாருங்கள். அவவிடம் போவோம்'.
'இந்நேரத்திலா', 'எந்நேரமாயினும் வரச் சொல்லியுள்ளார்'. ஹென்றி புரோசா (Henri Bourassa) மெற்ரோவிற்கு அருகில் உள்ள அவரது உறவினர் வீட்டிற்கு இருவரும் சென்றோம். இந்த நடுநிசி சந்திப்புப் பற்றி பல வருடங்களுக்கு முன் ரொறன்ரோ ஈழநாடு இதழில் 'அன்னையைக் கண்டேன்' எனும் தலைப்பில் எழுதி பலரது பாராட்டுக்களையும் சிலரது விமர்சனங்களையும் கேட்டவன் நான்.

'மறக்கத் தெரியாத மனசு' அல்லவா. மீண்டும் சில நினைவுகளை விளம்பரம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அம்மையாருடனானா அந்த நடுநிசி நேரச் சந்திப்பும் உரையாடலும் என் மனதில் இளங்கோ அடிகள் எழுதிய சிலப்பதிகார வழக்குரை கதை போல் காட்சியாக விரிந்தது.

எங்களைக் கண்டவுடனேயே அவர் குரல் தழுததழுத்தது. விழிகளில் நீர் கோர்த்தன. 'நீர் வார் கண்ணை எம் முன் வந்தோய்" எனும் சிலம்பின் வரிகள் நினைவுக்கு வந்தது.



"அவர் இல்லாமல் அநாதரவற்றவளாக முதன்முதலாக உங்களைச் சந்திக்கிறேன்". "செற்றனள் போலும், செயிர்த்தனள் போலும்.... கணவனை இழந்தாள் கடையகத்தானே!"

விருந்தோம்பும் பெரும் பண்பு கொண்ட இவர்களின் அருங்குணத்தையோ பலவீனமான நுழைவாயிலாகக் கொண்டு, கொடியவர்கள் செய்த கோரதாண்டவத்தை கண்முன்னால் காண நேர்ந்த சரித்திரத்தின் ஒரு சாட்சியம் இவர். தானைத் தளபதி அமிர் ஐயாவின் மறைவுகேட்டு துடித்தெழுந்து நான் எழுதிய கண்ணீர்ப் பூக்களின் பிரதியை நண்பர் மூர்த்தி அம்மையாரிடம் கையளித்தார். உணர்ச்சி மேலிட்டு அழத் தொடங்கினார்.

இச்சந்திப்பிற்குப் பிறகு சில வருடங்கள் கழித்து "கனடா தமிழ் கலாச்சாரச் சங்கம்" (மொன்றியலில் ஏற்பாடு செய்திருந்த வாணி விழா நிகழ்ச்சிக்கு அம்மையாரை உரை நிகழ்த்த அழைத்திருந்தோம். அப்போது அவர் மகனுடன் இலண்டனில் வாழ்ந்து வந்தார். விமானச்சீட்டும் அனுப்பி வைத்திருந்தோம்.

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களில் முக்கிய பங்கு வகித்த கனடா தமிழ்சங்க நிர்வாகிகளான திரு. எஸ். ப. கனக்ஸ், திரு. மூர்த்தி (தாயகம்) அளவெட்டி ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரிடம் ஆலோசனை செய்தபின்பு அம்மையாரின் வருகை நிறுத்தப்பட்டது. தமிழ் ஈழத்தின் 'மங்கையர் திலகமாகத் திகழும்" தமிழ்த்தாய்க்கு அவமானம் நேர்ந்தால் அது முழு இலங்கைத் தமிழருக்குமே அவமானம், மற்றும் இழுக்கு என்று கருதி வன்முறையாளர்களுக்கு இடமளிக்காமல் அவர் வருவதைத் தவிர்த்தோம்.

தொடர்ந்தும் நமது பூமியும் மக்களும் பாவத் திற் குட் பட் டவர்களாகவே வாழ்கிறார்கள். இத்துன்பியல் வாழ்வைக் காலம் தான் சீர்ப்படுத்த வேண்டும்.

- மனசு தொடரும்

## வாடகைக்கு கொடுப்பவர்களின் கவனத்திற்கு!

*அண்மைக் காலமாக சிலர், தம்மிடம் வாடகைக்கு பெறுவதற்குரியவர்கள் இருப்பதாகக் கூறி பிழையான தகவல்களை வழங்கி உங்கள் ஆதனத்தை வாடகைக்கு எடுத்து கொடுப்பதுடன், வாடகையாளரிடம் பெறும் பணத்தை தமதாக்கி கொள்கின்றார்கள். இதனை சிலர் தொழிலாக, மிகவும் கவனமாகச் செய்வதால், பலர் இவர்களின் வலைக்குள் விழுந்ததாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. முகவராக அல்லது இடைத்தரகராக இவ்வாறு தொழில்படுபவர்களிடம் மிகவும் கவனமாக இருப்பதால் நீங்கள் இவ்வாறானவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.*

*இடைத்தரகர்கள் / முகவர்களைப் பற்றிய முழுத்தகவல்களை, ஆதனத்தை காட்டுவதற்கு முன்பாக பெற்று இவர்களைப் பற்றிய விபரங்களை உறுதி செய்தபின் உங்கள் ஆதனத்தை அவர்களுக்குக் காட்டுவதே சிறந்தது.*

*- விளம்பர நிர்வாகம்*

# மலச்சிக்கலை தவிர்க்க

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்




மாறிவிட்ட வாழ்க்கை முறை, தவறான உணவு பழக்கம் காரணமாக மலச்சிக்கல் பலரை பாடாய்படுத்துகிறது. நார்ச்சத்து மிகுந்த உணவை தவிர்ப்பது, மைதா போன்ற உணவுப்பொருட்களை உட்கொள்வது, பீற்சா, பேர்கர் போன்ற உணவுகளை சாப்பிடுவது, மது, புகை பழக்கம், சரியான நேரத்துக்கு உணவு உட்கொள்ளாமை, உடல் பருமன் போன்ற பல்வேறு காரணங்களால் மலச்சிக்கல் பிரச்சினை ஏற்படுகிறது. வயது ஏற, ஏற செரிமான மண்டலத்தின் செயல்திறன் குறையும். முதுமையில் உணவுமுறை மாறுவது, உடற்பயிற்சி குறைவது, தேவையான அளவு தண்ணீர் குடிக்காதது ஆகியவை மலச்சிக்கலுக்கு காரணமாகிவிடும்.

மூட்டுவலி, இடுப்புவலி உள்ள முதியவர்கள் அடிக்கடி மலம் கழிப்பதை தவிர்ப்பதால் அவர்களுக்கு மலச்சிக்கல் வருகிறது.

பெண்கள், கர்ப்ப காலத்தில் மசக்கை காரணமாக அதிகம் தண்ணீர் குடிக்க மாட்டார்கள். இதனாலும் கருவில் வளரும் குழந்தை, தாயின் குடலை அழுத்துவது, ஹோர்மோன் மாற்றம், ஆசனவாய் சுருங்குதல் ஆகிய காரணங்களாலும் தற்காலிகமாக மலச்சிக்கல் உண்டாகலாம். மலம் கழிப்பதில் சிரமம் என்பதற்காக, மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் வயிற்றுப்போக்கை ஏற்படுத்தும் மாத்திரைகளை சாப்பிடுவது தீர்வாகாது. இச்செயல் பெருங்குடலில் உள்ள உணர்வு நரம்புகளை பாதிக்கும். இதன்பிறகு, சாதாரணமாக மலம் கழிப்பதும் சிரமமாகிவிடும். 'எனிமா' பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடும். அடிக்கடி 'எனிமா' பயன்படுத்துவது நல்லதல்ல.

ஆரோக்கியமாக உள்ள ஒருவர், சரியான உணவு முறையை பின்பற்றி, தேவையான அளவு தண்ணீர் குடித்து, தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். மலம் கழிக்க வேண்டும் என்கிற உணர்வு வந்ததுமே கழித்து விடுகிற பழக்கத்தைப் பின்பற்றினாலே போதும். தினமும் குறிப்பிட்ட நேரத்தில் மலம் கழிப்பது வழக்கமாகிவிடும். நாம் சாப்பிடும் உணவு வகைகளில் நார்ச்சத்து நிறைந்த பழுப்பு அல்லது சிவப்பு அரிசி, கோதுமை, கேழ்வரகு, தினை, வரகு, கொள்ளு போன்ற முழு மற்றும் சிறுதானியங்கள் மலச்சிக்கலை தவிர்க்க உதவும்.

பச்சை நிற காய்கறிகள், வாழைத்தண்டு, பொட்டுக்கடலை, கொண்டைக்கடலை, மொச்சை போன்ற பருப்புகள், கீரைகள், ஓரஞ், கொய்யா, மாதுளை, அப்பிள், அத்திப்பழம், பேரீச்சை, மாம்பழம் போன்ற



பழங்களில் நார்ச்சத்து அதிகம். இவற்றை தினசரி உணவில் அதிகமாக சேர்த்துக் கொண்டால் மலச்சிக்கல் தீரும்.

தினமும் இரண்டரை முதல் மூன்று லீட்டருக்கு குறையாமல் தண்ணீர் குடிக்க வேண்டும். காலை எழுந்ததும் வெதுவெதுப்பான நீர் அருந்தலாம். கோப்பி, தேநீர், மென்பானங்கள் குடிப்பதை தவிர்த்து இளநீர், பழச்சாறுகளை அதிகம் அருந்த வேண்டும். இனிப்பு வகைகளையும், கொழுப்பு உணவுகளையும் குறைத்துக் கொள்ள வேண்டும். துரித உணவு வகைகளை தவிர்க்க வேண்டும். இரவில் இரண்டு வாழைப்பழம் சாப்பிட வேண்டும். தினமும் நடைப்பயிற்சி செய்ய வேண்டியது மிக அவசியம். இயலாதவர்கள் வீட்டிலேயே செய்யக்கூடிய உடற்பயிற்சிகளை செய்யலாம். மலம் கழிப்பதற்கென போதுமான நேரத்தை ஒதுக்க வேண்டியது மிகவும் அவசியம்.

# உயிர்ச்சத்து...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

கூடுதலாக ஏற்படுவதாக அறிக்கைகள் உள்ளன. தங்களது உணவுகளுடன் உயிர்ச்சத்து D எடுப்பவர்கள் இந்த ஆபத்திலிருந்து குறைவுபடுவதாக மருத்துவ அறிக்கைகள் கூறுகின்றன. உயிர்ச்சத்து D3 புற்றுநோய் மரணங்களை குறைக்கிறது எனவும் அறிய முடிகிறது.

உயிர்ச்சத்து Dயுடன் இதயம் சம்பந்தமான பல நோய்கள் தொடர்புள்ளன. பக்கவாதம், நாடிகளுடன் சம்பந்தப்பட்ட நோய்கள், மாரடைப்பு, இதயதுடிப்பு, இரத்த அழுத்தம் என்பனவும் உயிர்ச்சத்து குறைபாட்டால் ஏற்படும் நோய்களாகும்.

எமது உடலின் எதிர்ப்புச்சக்தி (Immune System) சரியாக தொழிற்படவும் உயிர்ச்சத்து D இன்றியமையததாகும். இக்குறைபாட்டால் வைரஸ் தொற்று நோய்கள், (எயிட்ஸ் உட்பட) ஏற்படலாம். குறிப்பாக சயரோகம் (Tuberculosis) ஏற்பட வாய்ப்பு உண்டு. மூச்சுக்குழாய் கூட பல நோய்வாய்ப் படலாம். இதில் ஆஸ்த்மாவும் அடங்கும். அத்துடன் Multiple Sclerosis எனப்படும். நரம்பு மண்டல பாதிப்பு இதன் குறைபாட்டால் ஏற்படலாம். அத்துடன் Crohn's எனும் வயிற்று நோய்களை ஏற்படுத்தலாம். குடற்புண் நோய்களும் ஏற்படலாம்.

உயிர்ச்சத்து D குறைவதால் நீரிழிவுக்கான சாத்தியம் அதிகம். 2014இல் நடைபெற்ற பல்வேறு ஆய்வுகள் இதனை நிரூபிக்கின்றன. அத்துடன் உளச்சோர்வு, மறதி நோய், அல்சைமர் நோய் என்பனவும் ஏற்பட வாய்ப்புளது. இதனால் உயிர்ச்சத்து Dயை மேற்குறிப்பிட்ட நோயாளிக்கு வழங்க வைத்தியர்கள் சிபார்சு செய்கிறார்கள். எமது உடலில் உள்ள தசைகள் எல்லாம் உயிர்ச்சத்து D ஐ கொள்ளுவதால் வலிமையாக உள்ளன. அவை செயல்குன்றுமானால் தசைப்பிடிப்பு, தசை இறுகுதல் ஏற்படலாம். இவ்வாறு தசைகள் சீராக இயங்குவதற்கும் உயிர்ச்சத்து D அவசியமாகும். அத்துடன்



Vitamin D Foods

உயிர்ச்சத்து D குறைவடைந்தால் உடல் எடை குறைந்தது 2 இருந்தாலாவது கூடிவிடலாம் என அறிக்கைகள் உள. குறிப்பாக 65வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இப்பிரச்சினை உள்ளது. அத்துடன் உயிர்ச்சத்து Dஐ உட்கொள்பவர்களுக்கு Fibromyalgia எனப்படும் உடல்நோவு, பதற்றம், மனச்சோர்வு என்பன குறைவடையலாம். தொடர்ந்து இந்த உயிர்சத்தானது உடல் உபாதைகளை குறைக்கிறது.

மாதவிடாய் நின்று போகும். பெண்களுக்கு உயிர்ச்சத்து D மிக தேவையாகும். குறிப்பாக கொலஸ்ரோல் எனப்படும் கொழுப்புச்சத்து இச்சத்தினால் குறைவடைகிறது. தொடர்ந்து 1000 மி.கிராம்ஸ் கல்சியமும் 400 IU உயிர்ச்சத்து Dயை உட்கொண்டவர்களுக்கு இக்கொலஸ்ரோல் குறைவடைந்தது. மேலும் பெண்களின் கருப்பை பாதுகாப்புக்கும், ஹோர்மோன் சுரப்புக்கும் இச்சத்து இன்றியமையாதாகும். கருப்பை கட்டிகள் இதனால் தோன்றுவதில்லை.

தொடர்ந்து தலைவலியால் பாதிப்புறுபவர்கள் கூட உயிர்ச்சத்து D உட்கொள் வதால் பலன் பெறலாம். குறிப்பாக ஒற்றைத் தலைவலிக்கு இவ்வாறான உயிர்ச்சத்து D தேவையாகும்.

உயிர்ச்சத்து D ஏனைய உயிர்ச்சத்துக்கள் போன்றதல்ல. சூரிய வெளிச்சத்தின் மூலம் உடலே இந்த உயிர்ச்சத்தினை பெற்றுக் கொள்கிறது. ஏனைய உயிர்ச்சத்துக்களை அவ்வாறு பெறமுடியாது. உதாரணமாக உயிர்ச்சத்து C யை பெறவேண்டுமென்றால் பழங்கள் அல்லது மரக்கறிகளை உண்ண நேரிடுகிறது. அத்துடன் இந்த உயிர்ச்சத்து ஹார்மோன்களாக மாறிவிடும் சக்தியும் கொண்டது. இது Calcitriol ஆகும். எனவே எமது உடல் உயிர்ச்சத்து Dஐ பெற வேண்டின் சூரிய வெளிச்சம் உதவ வேண்டும். பதில் உணவுகளை பெற வேண்டும். இதனை சரியான அளவில் எடுக்கவும் வேண்டும். கூடினாலோ குறைந்தாலோ நல்லதல்ல. எனவேதான் உயிர்ச்சத்து D முக்கிய ஆராய்ச்சிகளுக்கு உட்படுகிறது. குழந்தைகளை பொறுத்த மட்டில் கடுமையான உயிர்ச்சத்து D குறைவடைந்தால் என்புருக்கி (Rickets) என்னும் நோய் வருகிறது. வயது வந்தவர்களுக்கு இதனை Osteomalacia எனப்படுகிறது. இது பொதுவாக உடைந்துபோகும் எலும்புக்கானதாகும்.

எமது உடலில் சூரிய வெளிச்சம்படுமானால் தோலானது உயிர்ச்சத்து Dஐ ஏற்படுத்தி ஈரலுக்கு அனுப்பும். அதேபோல பதிலாக பெறப்படுகின்ற உயிர்ச்சத்து Dயும் ஈரலுக்கே அனுப்பப்படுகிறது. அங்கு ஈரலானது இதனை 25 (0H) D என்ற பொருளாக மாற்றுகிறது. வைத்தியர்கள் எமது உடலில் உயிர்ச்சத்து D என்று கூறினால் எமது இரத்தத்தில் உள்ள 25 (OH) D என்ற அளவையே அது குறிப்பதாகும். இந்த இரசாயனப் பொருள் உடலில் உள்ள எல்லா திசுக்களுக்கும் அனுப்பப்படுகிறது. சிறு நீரகமும் இதில் அடங்கும். தற்போது இந்த உயிர்ச்சத்து D தனது தொழிற்பாட்டை செய்ய ஆரம்பிக்கும். இது இரண்டு வேலைகளை செய்கிறது. இரத்தத்தில் கல்சியத்தை ஏற்படுத்தி எலும்புகளை பாதுகாக்கிறது. அடுத்து உடற் கலங்களை செயல்படுத்தி தொடர்புபட வைக்கிறது.

பொதுவாக உயிர்ச்சத்து நிறைந்த உணவுகள் பலவாகும். மீன், முட்டை, காளான், பால், ஒறேஞ்சாறு, ஓட்ஸ் வகைகள், வெண்ணெய், மார்ஜரீன் போன்றனவாகும். இவ்வாறான உணவுகளால் பெறப்படும் உயிர்ச்சத்துகள் போலவே எமது திறந்த மேனியும் இந்த உயிர்ச்சத்தினை தோற்றுவிக்க வல்லதாகும். வசந்த காலங்களில் சூரியவெளிச்சம் பெற பலர் துடிப்பது இதனால்தான். இயற்கையான முறையில் இவ் உயிர்ச்சத்து பெற முடிகிறது. சூரியவெளிச்சத்தில் புற ஊதாக் கதிர் (Ultraviolet B) உள்ளது. சூரிய-வெளிச்சத்தில் பெறப்படுவது உயிர்ச்சத்து D3 ஆகும். இதனை Cholecalciferol என்பர். மிக விரைவில் இது ஏற்படுகிறது. வெள்ளை மேனியுள்ளவர்களுக்கு 15 நிமிடமே போதும். ஆனால் கறுத்த தோல் உள்ளவர்களுக்கு சில மணிநேரம் வேண்டும். எமது உடலானது 10,000 தொடக்கம் 25,000, 1U of உயிர்ச்சத்து Dபெற்றுக்கொள்ள ஒருநாளில் முடிகிறது. எனவே உயிர்ச்சத்து D பெறவேண்டி கூடிய நேரம் சூரியனுக்கு முன்னால் நிற்பது தவறாகும். பொதுவாக தோல்நிறம், வாழும் பிரதேசம், எவ்வளவு நேரம் என்பதனை பொறுத்தே எமது உடலில் உயிர்ச்சத்து D

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

# உயிர்ச்சத்து...

## 27ஆம் பக்கத்தொடர்ச்சி

சேருகிறது. வெளியே செல்லாமல் வீடுகளுக்குள் உள்ளவர்களுக்கும் சாதாரண சூரிய வெளிச்சம் இந்த உயிர்ச் சத்தினை வழங்குகிறது. இதனை விடுத்து வெளியே சென்று அதிக நேரம் வெளிச்சம்பட நின்றால் அது ஆபத்தானாகும். தோல் புற்றி நோய்க்கு வழிவகுக்கும். எனவே பல மேல்பூச்சுகள் தேவைப்படுகின்றன.

இவ்வாறான இயற்கையான உயிர்ச்சத்து போதாதபடியால் பல்வேறு மருத்துவ நிறுவனங்களும் இதனை உட்கொள்ளும் அளவுகளை அறிவுறுத்துகின்றனர். உயிர்ச் சத்து D Council குழந்தைகளுக்கு 1000 IU ஒரு நாளுக்கும் வயது வந்தவர்களுக்கு 5000 IU ஒரு நாளுக்கு எடுக்க கூறுகிறது. ஆனால் உணவு உயிர்ச்சத்து சபை இதற்கு மாறாக சிறுவர்களுக்கு 600 IU ஒருநாளும் வயது வந்தோர்க்கு 800 IU ஒரு நாளுக்கு எடுக்கவும் கூறுகிறது. இப்படியான அளவுகளை வைத்தியரிடம் ஆலோசனை பெற்று எடுப்பதே சிறப்பானது. காரணம் பல்வேறு மருந்துசபைகளுக்கிடையில் போட்டிகள் நிலவுகின்றன. எனவே இரத்த




பரிசோதனை மூலம் உயிர்ச்சத்தின் அளவு 25 (OH) உள்ளதா என பார்க்கலாம். அதிலும் Dயில் பலவகை உள்ளதாலும் குழப்பம் உள்ளது. அத்துடன் எடுக்கின்ற ஏனைய மருந்துகளையும் அனுசரித்தே இதனை பாவிக்க வேண்டும். உண்மையில் கண்டபடி இந்த உயிர்ச்சத்து D பாவிப்பது தவிர்க்கப்படுகிறது. வைத்தியரின் ஆலோசனை பெற்றே பாவித்தல் வேண்டும்.

சிலருக்கு அதிகம் வியர்க்கிறதென்றால் இது உயிர்ச்சத்து Dயின் குறைபாடே காரணமாகும். சிலருக்கு தூக்கம் வருவதில் பிரச்சினை உள்ளதா. அவர்களுக்கும் இந்த உயிர்ச்சத்து குறைந்துள்ளது என்பதே அர்த்தமாகும். எவராவது கைகளை பிடித்து அமுக்கினால் எலும்பு முறிந்து போகிறதென்றால் காரணம் இச்சத்து குறைப டு தான். எதற்கெல்லாம் சளி, காய்ச்சல், பிடித்துக் கொள்கிறதா, அதற்கும் காரணம் இந்த சத்து குறைவது ஆகும். அடிக்கடி பதட்டம், மனஅழுத்தம் ஏற்பட்டு தவிக்கிறோமா அதற்கும் கூட இந்த சத்து சம்பந்தம் உள்ளது.

அண்மைய ஆய்வுப்படி Dementia எனப்படும் மூளைச் செயலிழப்புக்கூட இச்சத்து குறைவால் ஏற்படுவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. டாக்டர் டேவிட் லீவெல்ன் என்பவர் இதுபற்றி 1600 பேரிடம் செய்த போது இந்த உண்மை தெளிவாயிற்று. கூடவே அல்சைமர் நோய் ஏற்படவும் இச்சத்து குறைவடைவதே காரணம் எனவும் அறிந்துள்ளனர். எனவேதான் சூரிய ஒளியில் வளரும் காளான் (Mushroom, முக்கியமாக கருதப்படுகிறது. அதுபோலவே பால், முட்டை மஞ்சட்கரு, சோயா பொருட்கள், தோடம்பழம் ஆகியவற்றை பாவிக்க கூறுகின்றனர்.

குளிர்வலயங்களில் சூரிய வெளிச்சம் போதியளவு இல்லாமையால் இந்த உயிர்ச் சத்தினை பெற வில்லைகள் அல்லது குளிசைகள் எடுக்கின்றனர். நவீனமுறை வாழ்க்கையில் முன்பு கேள்விப்படாத புதிய புதிய நோய்கள் பல ஏற்படுவதற்கு உயிர்ச் சத்து D குறைபாடே காரணமாகும். கொழுப்பில் கரையக்கூடிய விசேடமான உயிர்ச்சத்து உடலின் இயற்கை தொழிற்பாட்டில் இன்றியமையாதாகும். பல மத்திய கிழக்கு நாடுகள் சாதாரண தண்ணீர்ப் போத்தலில் உயிர்ச்சத்து Dஐ கலந்து விற்பனை செய்கிறார்கள். ஆனால் நாம் போத்தல்களில் உள்ள குளிசைகளில் மட்டுமே தஞ்சமடைந்துள்ளோம்.


# யோகா சோதிடம்



- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


சரவணை சேவா மன்றம் - கனடா

## 20வது வருட ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும்

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 02ஆம் திகதி 2018 ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணியளவில் வழமைபோல் MILLIKEN PARK AREA "C"யில் சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய பழைய மாணவர்களுடன் இணைந்து நடத்தவுள்ளனர். (Steeles & Mc-Cowan). வருடம் ஒருமுறை நடைபெறும் ஊர் கூடிக் குதூகலிக்கும் இக்கோடைகால ஒன்றுகூடலில் அனைவரையும் வந்து ஒன்றுகூடி எம் உறவுகளை சந்தித்து அளவளாவுவது மட்டும் அல்லாது மதியம் முதல் பரிமாறப்படும் BBQ, ஊர்க்கூழ் மற்றும் சிற்றுண்டியிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு: தலைவர் S. சண்முகராஜன் - 905.554.3671
செயலாளர் எஸ். ஜெயானந்தசோதி-647.409.8966/289.221.0679 Cell
பொருளாளர் எஸ். தயாளன் 416-716-7514

# EDUCATION

## Review Questions18- 17

### CHEMISTRY 11

(i) A 17.2 g of impure $NaHCO_3$ contains 3g of $KNO_3$. Solubility of $KNO_3$ and $NaHCO_3$ are 32g and 8g. What is the smallest volume of water at 20°C that could be used to remove the impurity and leave pure $NaHCO_3$

(ii) A 20.0 g sample that is 95% $K_2Cr_2O_7$ is allowed to react with 50.0 g of gaseous hydrogen chloride. How much $Cl_2$ is produced in grams?

$K_2Cr_2O_7 (aq) + 14HCl(g) \rightarrow$

$7H_2O(l) + 2KCl (aq) + 2 CrCl_3(aq) + 3 Cl_2(g)$

(iii) A sample of crushed eggshell (2g), containing Calcium carbonate is mixed with 100 ml of 0.5mol/L HCl and then the excess HCl in the mixture was titrated with 22ml, 0.5mol/L NaOH. Determine the mass percent of Calcium carbonate in egg shell.

### FUNCTIONS 11

A company manufactures toy-cars. The company uses the function $P_{(t)} = -25t^2 + 250t - 400$ to model its profit. $P_{(t)}$= profit in thousands, t = the number of toy-cars sold in tens of thousands. Determine least number of toy-cars that should be sold to breakeven.

(B) Explain how the emission spectrum of hydrogen is related to the energy levels in hydrogen.

### ADV. FUNCTIONS 12 1320

(i) A ploynomial with the equation of $f_{(x)} = ax^3 + bx^2 + cx + d$ has the following properties

(a) Remainder -7 when divided by $(x-1)$
(b) Same remainder when divided by $(x-2)a(x+2)$
(c) one of the factor $x$

Determine the equation of the polynomial.

### BIOLOGY 12 New

(i) Explain the role of hypothalamus in thermoregulation

(ii) Describe the importance of restriction enzymes in biotechnology

## Answer Key : 18-15

### BIOLOGY 12

(i) Muscle glycogen converted directly to glucose -1-phosphate by glycogen phosphates, which does not consume energy. But the liver glycogen converted into glucose. Therefore, one fewer ATP will be produced when liver glycogen undergoes ATP production.

(ii) Transpiration - The loss of water vapour from plant tissues through stomata Define the term transpiration.

Transpiration creates a pulling force called transpiration pull. Which assists water and minerals absorbed by roots to be transported to leaves.

Transpiration also causes cooling effect on plants which prevents the plants from heat stress.

(iii) 5'cap – modified by addition of 7, methyl guanosine (GTP) that is added to the 5' end. The 3' end, modified by enzymatic addition of a poly-A-tail.

(Poly-A tail – sequence of about 200 adenine nucleotides) to the 3' end of mRNA before it exits the nucleus.

- These modifications inhibit degradation of mRNA in the cytoplasm, may facilitate attachment to the small ribosomal subunit and may regulate protein synthesis by facilitating mRNA's export from the nucleus to the cytoplasm.

(ii) Explain when and how mRNA is modified
in the nucleus and the purpose.

Answer key
18- 17 next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj

KEEN TUTORING CENTRE

# அழகிய சான் பிரான்சிஸ்கோ...
## Beautiful San Francisco...



சுந்தரம்
இந்திரராஜா

சான் பிரான்சிஸ்கோ(San Francisco) உலகில் புவியியல் ரீதியாக ஆசீர்வதிக் கப்பட்ட நகரங்களில் ஒன்றாகும். ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத் திலுள்ள ஒரு பிரதான நகரமாகும். புனித ஃபிரான்சிஸ் நினைவாக இந்நகரம் பெயரி டப்பட்டது. இயற்கை வனப்பு, முற்போக் கான அரசியல், தொழில் முனைப்பு, மற்றும் பன்மய சமூகங்கள் இப்பகுதிக்கு அடையாளங்களாக உள்ளன. அமெரிக் காவில் கல்லூரி பட்டம் பெற்றவர்கள் கூடுதலாக உள்ள இடங்களில் இரண் டாவதாக உள்ளது. இங்குள்ளோரின் சராசரி குடும்ப வருமானம் மாநில சராசரி யை விடக் கூடுதலாக உள்ளது. உலகின் சிலிக்கான் பள்ளத்தாக்கு என அழைக் கப்படும் பகுதி, சான் பிரான்சிஸ்கோ பகுதி



யில் உள்ளது. சிலிக்கான் பள்ளத் தாக்கு என்றவுடன் எதோ பள்ளத்தாக்கு பகுதி என நினைத்து விட வேண்டாம். நாம் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் கம்ப்யூட்டர், தொலைத்தொடர்புகள், தக வல்பரிமாற்றம் உள்ளிட்ட உயர் தொழில்நுட்பங்கள் அனைத்தும் இங்கு தான் உருவாகின்றன. நூற்றுக்கணக்கான தொழில்நுட்ப நிறுவ னங்களின் தலை மையகம் இங்கேதான் உள்ளன.

**சான் பிரான்சிஸ்கோ விரிகுடா** *(San Francisco Bay):*

சாக்ரமெண்ட்டோ மற்றும் சான் யோக்குவைன் ஆறுகளிலிருந்தும் சியாரா, நெவாடா மலைகளிலிருந்தும் வரும் நீர் இந்த விரிகுடா வழியாக பசிவிக் பெருங்கடலை அடைகிறது. ஆறு கள் அல்லது சிற்றாறுகள் கடலுடன் கலக்கும் நுழைவாயிலை தங்கக் கதவு-கோல்டன் கேட் (Golden Gate) என அழைக்கப் படுகின்றது. இந்த நீரிணையின் குறுக்கே தான் புகழ்பெற்ற கோல்டன் கேற் பாலம் (Golden Gate Bridge) கட்டமைக் கப்பட் டுள்ளது.

**கோல்டன் கேற் பாலம்** *(Golden Gate Bridge):*

கோல்டன் கேட் நீரிணையின் மீது கட்டப்பட்டுள்ள ஒரு தொங்குபாலம் ஆகும். இப்பாலத்தின் மொத்த நீளம் 1.7 மைல்கள் அல்லது 2.73 கிலோ மீட்டர்கள், இதன் அகலம் 90 அடிகள், உயரம் 746 அடிகள். 1933ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் நாள் இந்த பாலத்தின் கட்டுமான பணி ஆரம்பிக்கப்பட்டது. 1937ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் நாள் கட்டிமுடிக்கப்பட்ட போது உலகின் மிகப்பெரிய தொங்கு பாலமாக இருந்தது. மேலும் இப்பாலமே அப்போது சான் பிரான்சிஸ்கோவின் அடை யாளச் சின்னமாக விளங்கியது. கோல்டன்



கேட் பாலம் கட்டப்படுவதற்கு முன்னால் சான் பிரான்சிஸ்கோ மற்றும் மாரின் மாகாணத்தை இணைக்கும் ஒரே வழி பசிபிக் பெருங்கடலில் படகு மூலம் தான் இருந்தது. புள்ளிவிபரங்களின்படி ஆண் டுக்கு ஒரு லட்சத்து இருபதாயிரம் மக்கள் அப்போதே பாலத்தை பாவித்து கடந்ததாகவும், ஒவ்வொரு இரண்டு வாரங்களுக்கு ஒருவர் பாலத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்வதாகவும் தெரிகி றது. உலகிலேயே இந்த பாலம் மிக வும் பிரபலமான இடமாகவும், புகைப் படங்கள் கூடுதலாக எடுக்கப்பட்ட பாலமா கவும் உள்ளது. கார் மூலம் அல்லது நடந்து அல்லது சைக்கிள் வழியாக சான் பிரான்சிஸ்கோ விரிகுடா மேலேயுள்ள பிர- பலமான தொங்கு பாலம் பாவித்து கடப்பது அவசியம்.

**அல்கட்ராஸ் தீவு:**

அமெரிக்கப் பழங்குடி யினர் (Native American) 10,000 ஆண்டுகளாக கலிபோர் னியாவின் சான் பிரான்சிஸ்கோ பகுதியில் வசித்து வருகின் றனர் எனக் கூறப்படுகி றது. சான் பிரான்சிஸ்கோ நகருக்கு வடக்கே, வளைகுடாவில் உள்ள அல்கட் ராஸ் பாறைத் தீவில் நிறைய தங்கும் அல்கட்ராஸ் (பெலிக்கன் வகை) பறவைக- ளின் முட்டைகளைச் சேகரிக்கவும், தங்கள் இனத்தில் குற்றம் இழைத்தவர்களைத் தண்டிக்கும் நோக்கில் தீவில் ஒதுக்கி வைக்கவும் அல்கட்ராஸ் தீவை அவர்கள் பயன் படுத்தியிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. ஆகவே, தீவின் வரலாறு ஸ்பெயின் மக்கள் அல்லது ஸ்பானிஷ் காரர்கள் கலிபோர்னியா பகுதிக்கு குடியே றத் துவங்கிய 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து தொடங்கி யிருக்கலாம். அவர்கள் வந்த காலத்தில், வளைகுடாவின் வடபகுதி யில் 'மிவோக்' (Miwok) மற்றும் தென்பகுதியில் 'ஒலே- ானே' (Ohlone) என்ற இரு பழங்குடி பிரிவு- களைச் சேர்ந்த 10,000 பழங்குடி மக்கள் சான் பிரான்சிஸ்கோ பகுதியில் வாழ்ந் திருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது.

அமெரிக்க இராணுவம் தனது சிறைச்சாலையை 1933 இல் கைவிட்டு தீவில் இருந்து வெளியேறியதும், 1934 இல் அல்கட்ராஸ் தீவின் சிறைச்சாலை அமெரிக்க அரசின் மத்திய சிறைச் சாலையாக (Alcatraz Federal Penitentiary) மாற்றியமைக்கப்பட்டது. கட்டிடங்கள் புதுப் பிக்கப்பட்டு, காவல்கள் பலப்படுத் தப்பட்டு, சிறையில் இருந்து தப்பிக்க நினைப் பவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் நோக்கில் தப்புவதைக் கண்டால் உடனே சுட்டுக் கொன்றுவிடும் கட்டளைகளும் கொடுக்கப்பட்டன. தப்பிக்க விரும்பும் கைதிகளுக்கு சிறையின் தீவிர கண் காணிப்பும், இரும்புக் கம்பிகளும், உயர்ந்த மதில்களும், முள்வேலிகளும் பெரும் தடை- யாக இருந்ததுடன் அல் லாமல் சிறை ஒருதீவில் அமைந்து இருந்ததும், தீவில் இருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள கரையை அடைய கடல் பகுதியை நீந்திக் கடக்கும் தேவை யும், கடலின் நீரின் (50°F அல்லது 10°C) குளிர் தன்மையும், ஆபத்தான அலை களும், நீரோட் டங்களும், மூடுபனி சூழ்வதும், கடலில் மனிதர்களை உண் ணும் சுறாக்கள் என மேலும் பல தடைகள் இருந்தன. அனுமதி யற்ற எந்த ஒரு படகும் தீவின் 600 அடி எல்லைக்குள் நுழைய அனுமதியும் கிடை யாது. மூன்று சிறைக் கைதிகளுக்கு ஒரு காவலாளி என்ற விகிதத்தில் கண்காணிப்பு



இருந்தது. தப்பிக்க விரும்பிய கைதிகள் இவற்றைப் பெரிதுபடுத்தியதில்லை. தப்பு வதற்கு இத் தனை தடைகள் இருந்தாலும், தப்பும் முயற்சியில் உயிர் போனாலும் போகட்டும், ஆனால் தப்பித்துவிட வேண்டும் என்று தொடர்ந்து திட்டங்களும் தீட்டப்பட்டுத்தான் வந்தது. சிறை இராணு வத்தின் கட்டுப் பாட்டில் இருந்த பொழுதும், பிறகு அமெரிக்க மத்திய சிறைச்சாலையாக இருந்தபொழுதும் தப்பும் முயற்சிகள் பலவும் அரங்கேறின என்பது சிறையின் வரலாறு.

மிகவும் கொடுமையான கொள்ளைக் காரர்களும், கொடுமையான கொலை காரர்களும், பெரும் கடத்தல்காரர்களும் அங்கு அடைக்கப் பட்டிருந்ததுடன் அல்லாமல், யாரும் தப்பவே வழியில்லை என்றிருந்த நம்பிக்கையையும் முறியடித்து சிறைக்கைதிகள் சிலர் அங்கிருந்து தப்பிவிட்டதும் சாதாரண ஒரு சிறைச் சாலைக்கு இந்தப் புகழ் வரக் காரணமாக இருந்தது. அல்கட்ராஸ் தீவுச்சிறையில் இருந்து 'தி கிரேட் எஸ்கேப்' (The Great Escape) என்று அழைக்கும் வகையில் ஜூன் 11, 1962 நள்ளிரவில் மோரிஸ் மற்றும் ஆங்கலின் சகோதரர்கள் இருவர் (Morris and the Anglins) என மூன்று கைதிகள் தப்பிச் சென்று சிறையின் பெருமைக்குக் களங்கம் ஏற்படுத்தியதே அரசின் இந்த முடிவிற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. அல்கட்ராஸ் சிறையில் கைதிகளைப் பராமரிக்க ஆகும் செலவு மிக அதிகம் என்றும் எனவே வேறு சிறை யைக் கட்டிப் பராமரிப்பது இதைவிடச் சிறந்த முறை எனக் காரணம் காட்டி அமெரிக்காவின் அட்டர்னி ஜெனரல் ராபர்ட் கென்னடி அவர்களின் உத்தரவின் பேரில் இச் சிறைச்சாலை 1963இல் இழுத்து மூடப்பட்டது. கைதிகள் வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டனர். அல்கட் ராஸ் சிறைக்குப் பதிலாக இல்லினாய்ஸ் (Marion, Illinois) மாநிலத்தில் ஒரு அதிக கண்காணிப்புச் சிறை கட்டப்பட்டது.

சிறை மூடப்பட்ட பின்னர், இன்று அல் கட்ராஸ் தீவு அமெரிக்க வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு சுற்றுலாத் தலமாக மாற்றப்பட்ட பின்னர் ஆண் டொன்றுக்கு சுமார் ஒன்றை மில்லியன் மக்கள் உலகிலேயே கடுமையான சிறைச்சாலை எப்படி இருக்கும் என்ற ஆர்வத்தில் இத்தீவைப் பார்வையிட வருகி- றார்கள். இத்தீவின் பாறைத் தன்மையால் இது 'தி ராக்' ("The Rock") என்றும் அழைக்கப்படுகிறது.

**கப்பல் துறை-39** *(Pier-39):*

சான் பிரான்சிஸ்கோ பட்டினத்தின் வட கரையில் உள்ள ஒரு மீனவர் துறை முகத்தில் அக்டோபர் 4, 1978 இல் திறக் கப்பட்ட 39ம் இலக்க கப்பல் துறை இப்போ பிரபலமான சுற்றுலாத் தலமாகும். காரணங்கள்: அங்கு கட்டப்பட்ட பல் பொருள் வர்த்தக மையம் உள்ளது, புதிதாக பிடித்த உடன் நண்டு மற்றும் உடன் இறால் பாவித்து சமைத்த உணவுகள் விற்பனை செய்யும் உண வகங்கள் பல உள்ளது, நூற்றுக் கணக்கான கடல் சிங்கங்கள் (Sea Lions)எப்போதும் கூடும் இடம் உள்ளது, நீங்கள் இங்கிருந்து அல்கட்ராஸ் தீவுக்கு ஒரு சுற்றுப்பயணம் மேற்கொள்ள படகு சேவை பெறும் இடம் உள்ளது, மற்றும் சைனா டவுனுக்கு (China Town) அரு காமையிலும் உள்ளது. பார்வையாளர் எப்போதும் நாள் முழுவதும் நிறைந்து காணப்படும் இடம் பியர் -39 எனலாம்.

வடக்கு நோக்கி நகரும் வட அமெரிக்க பூமித்தட்டும், தெற்கு நோக்கி நகரும் பசிபிக் பூமித்தட்டும் ஒன்றோடு ஒன்று பக்கவாட்டில் உரசிச்செல்லுகிறது நாம் அறிந்ததே. இந்த உரசல் கோடு வட அமெரிக்கா கடற்கரை பகுதிப் பட்டினங் களான சான் பிரான்சிஸ்கோ, லாஸ் ஏஞ்சல்ஸ் ஊடாக சென்று மெக்சிக்கோ எல்லையையும் தாண்டிச் செல்கிறது. இந்த



பிளவுக்கோட்டினை சான் அன்றியாஸ் பிளவுப் பெயர்ச்சி (The San Andreas Fault) என்று பெயரிடப் பட்டுள்ளது. இதன் காரணமாக 1989 லோமா பிரீட்டா (Loma

(தொடர்ச்சி 42 ஆம் பக்கம்...)

# மறக்கத் தெரியாத மனசு - பாகம் 7

## மங்கையர்திலகம் - மங்கையர்க்கரசி



வீணை மைந்தன்

யூலை மாதத்தில் சில மறக்க முடியாத மாபுருஷசர்களின் நினைவு நாள் வணக்கத்திற்குரியதாகின்றன. இலங்கைத் தமிழர்களின் நியாயமான உரிமைகளை மீட்டெடுப்பதற்குப் பாடுபட்டு உயிர் நீத்த தமிழினத் தலைவர் தானைத் தளபதி தியாகி அமிர்தலிங்கம்.

இசைநாடக மேதை நடிகமணி வைரமுத்து (தமிழகம்), பாரதம் ஈறெடுத்த தேசியக் கலைஞன் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகய மூவரினதும் நினைவு நாட்கள் வருடாவருடம் யூலை மாதத்தில் நன்றி மறவாத தமிழ்மக்கள் பலரால் நினைக்கப் படுகின்றன. வணங்கப்படுகின்றன. மூவரோடும் எனக்கு அன்பான பிணைப்பும் மரியாதையும் இருந்தது.

முதலில் இங்கு நான் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்பும் நினைவுகள் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களுட னானது. சிறுவனாகவிருக்கும் போதே அன்னையை நான் நன்கு அறிவேன். எங்களூருக்கு அருகில் உள்ள குரும்பசிட்டி கிராமம் (தெல்லிப்பளை) தான் அவருடைய பிறந்தபதியாகும். “பெண்ணுக்கு விடுதலை-யென்றிங்கோர் நீதி பிறப்பித்தேன், அதற்குரிய வெற்றி கேளிர்” என்று பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்த அமரகவி சுப்பிரமணியபாரதியார் போன்று.... சுதந்திரத்திற்குப் பிற்பட்ட இலங்கைத் தமிழர் அரசியல் தளத்தில் 1956-1977 வரையான காலப்பகுதியில் கால் நூற்றாண்டுக்கு மேலாக தமிழர்களதும் தமிழ்ப் பெண்களின தும் உரிமைப்போராட்டத்தில் தமிழ்மக்களை ஓரணியில் திரட்டி அறப்போராட்டத்திலும் ஏனைய சட்டமறுப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தி அரசியல் பிரக்ஞையை சாதாரண மக்கள் மத்தியில் வேரூன்றச் செய்ததில் பெரும்பங்கு வகித்தவர் திருமதி மங்கையற் கரசி அமிர்தலிங்கம் அவர்கள் என்பது வரலாறு. அவர் காலத்துக்கு முன்பும் சரி பின்பும் சரி தமிழர் அரசியல் களத்தில் நட்சத்திரமாக பரிணமித்த ஒரே பெண்மணி அம்மையாராகும்.

தமிழரசுக் கட்சியின் பொது மேடைகளில் அவரது கம்பீரமான பிரசன்னம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. மேடைகளில் அவர் தேசிய எழுச்சிப் பாடல்களை இசைத்தபோது மக்களின் உள்ளம் உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கியது.

ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமைகள் குறித்து அம்மையார் அவர்கள் இறுதிவரை மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் கொண்டவ ராகவே திகழ்ந்தார். எந்த விடியலையும் காணமுடியாத ஓர் இருள் சூழ்ந்த நிலையில் தான் தமிழ் இனத்தின் வாழ்க்கை



இருக்கிறது. இதற்குமுன் சிங்களப்பகுதியில் இனவாதப் பிரச்சினைகள் தோன்றும்போது ஓடி வருவதற்கு எமது உறவுகளுக்கு சுதந்திரமான தமிழ் பிரதேசம் இருந்தது. இன்று பல இலட்சம் தமிழ் மக்கள் உயிரைத் தியாகம் செய்தும் நமது பூமி பறிபோன நிலை மனதிலே மாபெரும் அச்சத்தைத் தருகிறது.

ஒரு நேர்காணலில் அம்மையார் கூறிய கூற்று இது. இப்போதுள்ள தலைமுறைத் தமிழ் இனம் இதுபற்றி யோசித்துப் பார்க்க வேண்டும்.

நமது பிரதேசத்தை ஓரளவிற்காவது பாதுகாக்கக்கூடிய தலைவர்கள் அப்போது இருந்தார்கள். ஜனநாயகப் பலத்துடன் நமக்கு தன்னிகரற்ற தலைமை இருந்தது. அத்தலைமையும் தலைவரின் உயிரும் அநியாயமாகப் பறிக்கப்பட்டது தமிழ் இனத்தின் துரதிஷ்டமேயாகும்.

ஒரு கால் நூற்றாண்டுக்கு முன் மொன்றியல் நகரில் வாழ்ந்த உறவினர் இல்லத்திற்கு திருமதி. அமிர்தலிங்கம் அவர்கள் வருகை தந்திருந்தார். அப்போது எனக்கு மிகவும் நெருக்கமான நண்பர் மூர்த்தி என்பவர் இங்கு வாழ்ந்து வந்தார். இவருடைய முழுப்பெயர் நாராயண மூர்த்தியாகும்.

(தொடர்ச்சி 33ஆம் பக்கம்...)



Math tutorial 71

Answers to tutorial 370

1)f(x) =$x^4$-3$x^3$-13$x^2$+3x +12 we can find the first two factors by substituting 1 and -1 for x ,the remainder is zero .So (x-1)( x+1) are the two factors,to find he other factors use the method of comparing coefficients

$X^4$-3$x^3$-13$x^2$+3x +12 =(x-1)(x+1)($x^2$+kx -12)

In this k=-3,therefore the roots are

($x^2$-1)($x^2$-3x -12)

2)8$x^3$+36$x^2$ +54x =2170

8$x^3$+36$x^2$+54x -2170 =0 when x=5 y=0 .Therefore the thickness of ice is 5cm

3)C(X) =F +v(x)

C(x+h)=F +V(x+h)

Rate of change of cost is

Lim$\frac{C(x+h)-C(X)}{h}$ =Lim(x>h){ V(x+h)-V(x)}h

Wich is independent of F-fixed cost

4)V=4πr$^3$/3 when v=1435 ,r=7

Dv/dt=4π$r^2$dr/dt

8=4π(49)dr/dt, dr/dt=8/196π =.01cm/s

5)Three points are collinear so they don't define a unique plane.

Tutorial371 (Questions)

1)A tangent to the parabola y=3$x^2$-7x +5 is perpendicular tox +5y -10=0

Determine the equation of the tangent

2)Find the eqn. of the normal at(2 ,3 )to the curve $x^3$+$y^3$-3xy =17 at the point (2 .3)

3)An object moves ,so that its velocity ,v, is related to its position,s , according to v=$\sqrt{(b^2}$+2gs) ,where b and g are constants Show that the acceleration of the object is constant

4)Find a vec. Eqn.of the linepasses thro. the point (4,5)and is perpendicular to line r=(1,8)+t(3,7)


By MrS.F.Xavier(Teacher)6473409490/4167322228

# நூல் விமர்சனம்

**- ரதன்**

தெற்காசியா கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் பற்றிய நூல் இது. நூல் பல சர்ச்சைகளுக்குரிய விடயங்களையும் பதிவு செய்துள்ளது. இவ் விடயங்கள் தவறானவையா? சரியானவையா?

## Asian Waters – Humphrey Hawksley





"Sri Lanka's crippling quarter century long war with its Tamil minority, which Sri Lanka only defeated, with China's help, in 2009" என பக்கம் 137இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் சீனா, அம்பாந்தோட்டை துறைமுகத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. கொழும்பு துறைமுகத்திலும் சீனாவின் ஆதிக்கம் அதிகமாகவுள்ளது. சுமார் நூறு வருடங்களின் பின்னர், இலங்கை புகையிரதப் பாதைகள் 270 மில்லியன் டொலர் செலவில் சீனாவால் புனரமைக்கப்படுகின்றன. போரின் போதும், அதன் பின்னரும், இலங்கை சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக நாடுகளிடமிருந்து 65 பில்லியன் டொலரை கடனாகப் பெற்றுள்ளது. இதில் 8 பில்லியன் டொலர் சீனாவிடமிருந்து பெற்ற கடன். இலங்கைக்கு கிடைக்கும் வருமானத்தில் 95 வீதம் வட்டிக்கே செல்கின்றது. இவ் விடயத்தில் சீனா அவசரம் காட்டவில்லை. ஆறுதலாகத் தருமாறு கூறியுள்ளது. சோவியத் யூனியன்-அமெரிக்க நிழல் யுத்தத்தின்போது, அண்டை நாடான இந்தியா சோவியத் சார்பாக இருந்தது, இலங்கை அமெரிக்கா சார்பாக இருந்தது. தற்போதைய சீனா-அமெரிக்கா வர்த்தக யுத்தத்தின்போது இலங்கை சீனாவின் பக்கமும், இந்தியா அமெரிக்காவின் பக்கமாகவுள்ளன.

'தென் சீனக் கடல் பிராந்தியத்தில், அமெரிக்காவின் ஆதிக்கம் சீனாவினால் நிறுத்தப்பட்டுள்ளது. அக்கடல் பிராந்தியத்தில் உள்ள தாய்வான், Parcel தீவுகள், Scarborough Shoal தீவு, Spartly தீவு, Dongsha தீவு மற்றும் அக்கடல் பிராந்தியத்துள் உள்ள தீவுகள் சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. சீனா தன்சானியா, பாகிஸ்தான், இலங்கை, கென்யா, மொரீசியஸ், மாலை தீவு, பர்மா போன்ற நாடுகளின் துறைமுகங்களை விரிவாக்கித் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றது. பனமா கால்வாய்க்குப் போட்டியாக நிக்கரகுவாவில் 173 மைல் நீளமான கால்வாயை சீனா 40 பில்லியன் டொலர் செலவில் வெட்டுகின்றது. இக் கால்வாய் அற்லாண்டிக் கடலையும், பசுபிக் கடலையும் இணைக்கின்றது. பனமா கால்வாயை ஹொங்ஹொங் நாட்டைச் சேர்ந்த நிறுவனமே நடத்துகின்றது இது சீன அரசு சார்பு நிறுவனம். 911 இன் பின்னர் அமெரிக்கா எதிர்த்த அல்லது ஓரங்கட்டிய நாடுகளுக்குள் சீனா சென்றது.' போன்ற விடயங்கள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இந்திய விரிவாக்கம் பற்றிய தனி அத்தியாயம் இந்நூலில் உள்ளது.


## Being Mortal




இந்நூலின் ஆசிரியர் Atul Gawande. இவர் ஒரு வைத்தியர். நியூ யோர்க்கர் போன்ற சஞ்சிகைகளில் இவரது கட்டுரைகள் தொடர்ந்து வெளிவருகின்றன. இந்த நூலினை நாமனைவரும் அவசியம் வாசிக்க வேண்டும். முதியவர்கள், இறந்து கொண்டிருப்பவர்கள், மரணம் போன்ற விடயங்களை உரையாடுகின்றது. முதியவர்களின் சுதந்திரம் பற்றி விரிவாகக் கூறப்படுகின்றது. முதியவர்களின் பக்கம் இருந்து பல கதைகளினூடாக, வாசிப்பவர்கள் மனதில் பலவற்றை தெளிவுபடுத்துகின்றது. வைத்தியரும், நூலசிரியருமான அற்றுள், தனது குடும்ப அனுபவங்களையும் பதிவு செய்துள்ளார். நல்ல ஒரு கதை சொல்லியாக அற்றுள் இந்நூலினூடாக வெளிப்படுகின்றார். நூலை வாசித்து முடித்தபோது, பல விடயங்களில் நாங்கள் தவறாக நடந்துள்ளமை தெரிகின்றது. இந் நூலைப் பற்றி நியூயோர்க்கர் சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரையிலிருந்து "The surgeon in the story is the father of Atul Gawande, who is also a surgeon as well as a writer for The New Yorker. His new book, "Being Mortal," is a personal meditation on how we can better live with age-related frailty, serious illness and approaching death. "Being Mortal" is a valuable contribution to the growing literature on

> வேறு எந்த சுதந்திரமும் வேண்டாம்.
> சிறையில் புத்தக வாசிப்பை மட்டும்
> அனுமதிக்க வேண்டும்.
> - நெல்சன் மண்டேலா

## சதைகள் - பச்சை நரம்பு





அனோஜன் பாலகிருஸ்ணன்

இவர் ஒரு பொறியியல் பட்டதாரி. தற்சமயம் உயர் கல்வியை இங்கிலாந்தில் கற்று வருகின்றார். இவரது சிறுகதைத் தொகுப்பு சதைகள். இவரது மொழியும் வித்தியாசமானது. இவர் தேர்வு செய்துள்ள அல்லது கதை சொல்லும் களங்களும் புதியது. ஆண்-பெண் உறவில் உள்ள சிக்கல்கள், சமத்துவமின்மை, சாதி, மாற மறுக்கும் சமூகம் என இவர் இயல்பாக நகர்ந்து செல்கின்றார். அண்மைக் காலங்களில் தமிழுக்குப் புதிய விடயங்களையும், நுணுக்கமான சமூக அரசியலையும் இவரது கதைகள் வெளிப்படுத்துகின்றன. அசங்கா என்ற சிறு கதை பாலியல் உறவுச் சிக்கல்களை குறிப்பாக திருமணமான சிங்கள பெண்ணுடனான உறவு பற்றிப் பேசினாலும், அதன் பின்னணியில் நுண்ணிய இன அரசியலும் வெளிப்படத் தவறவில்லை.இலங்கையில் இருந்து எழுதுபவர்களின் படைப்புக்களில் குற்றவுணர்வையும், வெறுமையையும் நுகரக் கூடியதாகவுள்ளது. இது யதார்த்தமானது. அது சதைகளிலும் வெளிப்படுகின்றது. சதைகள் என்பன வெறும் சதைகள் அல்ல. அச்சதைகளினூடு மிகப் பெரிய மனித வாழ்வேயுள்ளது. தமிழுக்கு கிடைத்துள்ள ஒரு புதிய வரவு இது.

அனோஜனின் பச்சை நரம்பு சிறுகதை தொகுப்பும் கதை சொல்லி ஒரு புதிய தளத்தில் கதைகளை கூறிக்கொண்டு செல்கின்றார். 'வாசைனை' சிறுகதை ஒரு பெண்ணைப் பற்றியதை, ஆணான அனோஜன் தன் பார்வையில், ஒரு பெண் என்ற ரீதியில் குறிப்பிடுகின்றார். கதை சொல்லி ஒரு பெண். மாறாக கதைசொல்லி ஆணாக இருந்தால் படைப்பின் மீதான நேர்மை பதிவாகும். இவரது மற்றைய கதைகளில் இந்தக் குறைபாடு இல்லை. உடலரசியலை இவரது கதைகள் முன்வைக்கின்றன. பாலியல் சுதந்திரம் என்பது சமூக ஒழுக்கக் கோட்பாடுகளால் ஒடுக்கப்படுகின்றன என்ற விமர்சனத்தை இவர் பல கதைகளினூடாக கூறுகின்றார். போருக்குப் பின்னரான வாழ்வியலாகவும் இக்கதைகள் உள்ளன.




# தெரிந்ததும் தெளிந்ததும்

## தொழிலாளர்களும் தொழில்முனைவோர்களும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

"தொழிலாளர்கள் தொழிலாளர்களாகவே வாழ வேண்டியது தானா? முதலாளிகள் அதிஷ்டக்காரர்கள் தான். சும்மா இருக்க, செல்வமும் வசதிகளும் முதலாளிகளிடம் குவிந்து கொண்டு இருக்கின்றனவே!" இலங்கையில் என்னுடன் உரையாடிக் கொண்டிருந்த ஒரு ஓட்டோ வைத்திருக்கும் இடதுசாரி சிந்தனை கொண்ட இளைஞர் கூறியவை தான் இவை.

இவை எனது எண்ணத்தில் நுழைந்து கொண்டு சில கருத்துக்களை கிளர்ந்தெழச் செய்தன. எல்லா நாடுகளிலும் மக்களது தேவைகளை நிறைவேற்ற உற்பத்திகள் நடைபெறுகின்றன. அதில் பல்வேறு வளங்கள் பயன்படுத்துகின்றன. இரண்டு மனிதர்கள் பங்குபற்றுகின்றார்கள். அவர்களில் ஒருவர் உற்பத்தி எண்ணத்தை தொடங்கியவர். தொழில் தொடங்குபவர், தொழில் முதலாளி. மற்றையவர் பணி புரிபவர். தனது உழைப்பை வழங்குபவர் தொழிலாளி.

எங்கள் நாட்டில் எங்கள் சிரமங்களில் சிறு நிலவிவசாயிகள் குறுந்தொழில் முயற்சியாளர் என பலரைப் பார்த்திருக்கிறேன். அங்கு இருவரும் ஒருவர்தான். இருவகை பணி நிலைகளும் பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துதான் காணப்படுகின்றனர். புகையிலைப் பயிர் செய்பவரும் சரி, பனங்கட்டி தயாரிப்பவரும் சரி, தொழிலாளி தான் முதலாளி. முதலாளிதான் தொழிலாளி.

ஆனால் நகர் மயமாக்கமும், சந்தை விரிவாக்கமும், தொழில்நுட்பம் மாற்றங்களும் வளர்ச்சி பெறத் தொடங்க இருவரும் பிரிபடத் தொடங்கினர். தொழிலாளி என்பவரிடமிருந்து முதலாளி பிரிந்து பிரிந்து விலகத் தொடங்கினான். முதலாளி மேல் நோக்கி நகரத் தொடங்கினான். தொழிலாளி அதே இடத்தில் நின்றான், அல்லது கீழ் நோக்கி நகர்ந்தான். அப்போது இருவருக்குமிடையில் தொழில்நுட்ப எஜமான் ஒருவன் இடையில் நுளைந்து கொண்டான். வேறு பலரும் அந்த எஜமானுடன் இணைந்து கொண்டனர். தொழிலாளி முதலாளி இடைவெளி நீண்டது. வலிமை பெற்றது. தொழிலாளி தொழிற்சங்கங்கள் அமைத்தான். முதலாளிகள் தொழில் முனைவோர் சம்மேளனங்களை நிறுவினர்.

தொழிலாளிக்கு வேதனம் கிடைக்கிறது. முதலாளிக்கு இலாபம் கிடைக்கிறது. பங்குலாபங்கள் கிடைக்கின்றன. இவை இரண்டும் நாட்டின் தேசிய வருமானத்தில் மிகப் பெரிய தொகையை வழங்குகின்றன. இவை உயரும்போது நாடு வளர்கிறது.

தொழிலாளி முதலாளி நல்லிணக்கம், ஒத்துழைப்பு என்பன அதிகரிக்கும்போது நாடும் முன்னேறுகிறது. இவர்களிடையில் முரண்பாடுகள் வளரும்போது நாடும் வீடும் சிதைந்து சின்னாபின்னப்படுகிறது. வறுமையும் வேலையின்மையும் பரவுகிறது.

ரஷ்யாவில் பிறந்த கார்ல் மாக்கஸ் "கப்பிற்றல்" என்ற நூலை வெளியிட்டார். அதில் தொழிலாளர்களை தொழிலாளர் வர்க்கம் என்றார். மூலதனம் முதலிட்டவர்களை முதலாளி வர்க்கம் என்றார். இரு சக்திகளாக விளக்கினார். எதிர் திசைகளில் செயல்படுபவர்களாக விபரித்தார்.

உற்பத்தியில் தொழிலாளியின் உழைப்பின் பங்கு முக்கியமானது. அது உழைப்பின் பெறுமதி, அதுவே உற்பத்தியாகும். பண்டத்தின் பெறுமதியை தீர்மானிக்கிறது. அந்த உற்பத்திக்கு உரிய பெறுமதி ஊதியமாகத் தொழிலாளிக்கு வழங்கப்பட வேண்டும் என்றார் கார்ல் மாக்ஸ். முதலாளிகள் அந்த பெறுமதியை முழுதாக தொழிலாளிக்கு கொடுப்பதில்லை. அதில் ஒரு பகுதியை தமதாக்கிக் கொள்கின்றனர். மேலதிகமாக அவர்கள் எடுத்துக் கொள்வது தான். "சுரண்டல்" என்றும் விளக்கினார். இந்தச் சுரண்டலால் முதலாளி வீங்கிப் பெருத்து விடுகின்றனர். தொழிலாளி தனக்குரியதை இழந்ததால் தேய்ந்து வறுமையில் வீழ்கிறான் என்றார். அந்தக் கால தொழிற்சாலை நிலைகளையும், தொழிலாளர் நிலைமைகளையும் அவதானித்து தனது விளக்கங்களை உலகமயப்படுத்தினார்.

மாக்ஸின் இத்தகைய சிந்தனைகளை உலகுக்கு பரப்புதற்கு நிதியுதவி வழங்கிய அவரது ஜேர்மானிய நண்பர் பிரெடெரிக் ஏங்கெல்ஸ் ஒரு தொழில்துறை முதலாளி தான். எனினும் கார்ல் மாக்ஸ் இறுதிக் காலத்தில் வறுமையிலேயே வாழ்ந்து இறந்து போனார். அவரது சிந்தனைகள் உலகை கூறுபோடும் வலுவான அரசியல் ஆயுதமாகி விட்டது.

பின்பு பல நாடுகளில் பலமாறுதல்கள் தொடர்ந்தன. நாடுகளின் அரசாங்கங்கள் தொழிலாளர் சங்கங்களை ஆதரித்தன. தொழிலாளர் நலன் பேணும் திட்டங்களுக்கு அரசாங்கங்கள் ஆதரவு நல்கின. தொழிலாளர் கல்வி, வாழ்க்கை, அரசியல் என்பன மேம்பட்டன.

பல தொழிலாளர்கள் தனிப்பட்டமுறையில் சுய தொழில் முனைவோராயினர். இங்கிலாந்தில் றொபேட் ஓவன் கூட்டுறவு எண்ணங்களை விதைத்தார். அந்த வழியில் கூட்டிணைந்து தொழிலாளர்கள் பல முறைகளில் வளரத் தொடங்கினர். எட்டு மணித்தியால வேலை நியதி உலக நியதியாயிற்று. மே தினம் கொண்டாடப்பட்டன.

### தொழிலாளர்கள் சில பண்புகளுடன் தற்போது பணி புரிகின்றனர்.

- தமக்கு ஆர்வமுள்ள துறைகளில் தம் அடிப்படைக்கல்வியையும், பயிற்சியையும் பெறுகின்றனர்.
- நேரமுகாமைத்துவத்தின்படி தொழில்களை புரிகின்றனர்.
- தொடர்புடைய தொழில் நுட்பங்கள் பற்றிய கல்வியையும் பயிற்சியையும் பெற்று பொருத்திக் கொள்கின்றனர்.
- புதிய வாய்ப்புக்கள் வரும்போது ஊக்கம் நிறைந்தவர்கள் புதிய கல்விக்கும் தொழில் நுட்பத்துக்கும் தம்மை மாற்றுகின்றனர். பதவி உயர்வு பெறுகின்றனர். அல்லது சுயதொழில் தொடங்குகின்றனர்.
- தொழிலாளர் பற்றிய சட்டங்கள் பற்றி அறிகின்றனர். ஒன்றிணைந்து அதற்காக போராடுகின்றனர். வெற்றி பெறுகின்றனர்.
- சில சமயங்களில் அரசியல் சக்தியாக அரசியல் கட்சியாக வளர்ந்து விடுகின்றனர். போலந்தின் வலஸ்போ போல வளர்கின்றனர்.
- தொழில்முறை நோய்கள், விபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வையும் கல்வியையும் பெற்று காத்துக் கொள்கின்றனர்.
- தொழில் செய்யும் போதும், ஓய்வு பெற்ற பின்னும் அவசியமான நிதிப் பாதுகாப்புக்களை உருவாக்கிக் கொள்கின்றனர்.
- இவர்கள் மேல்நோக்கி உறுதியாக நகரத் தொடங்கி விட்டனர். இவர்களது துயர்முகங்கள் மறைகின்றன.

### முதலாளிகளின் பண்புகளிலும், நோக்கங்கங்களிலும், செயல்களிலும் தற்போது மாற்றங்கள் பரவிவிட்டன.

- தொழில்முனைவோர் மக்களின் தேவைகளையும், சந்தைகளின் அசைவுகளையும் மதிப்பிடுகின்றனர்.
- போட்டியாளர்களது திறமை, பலம், பலவீனங்கள் பற்றி தொடர்ந்து அவதானம் செலுத்துகின்றனர்.
- தொழிலாளர் ஊக்கம், திறன்கள், பயிற்சி பற்றி திட்டமிட்டு செயல்படுத்துகின்றனர். அவைபற்றி அவர்களுடன் கலந்துரையாடுகின்றனர்.
- தேவையான மூலதனத்தை இலாபகரமாக திரட்டுவதற்கு ஏற்ற நிதிச் சந்தைகளை தேடுகின்றனர்.
- தொழில்நுட்ப மாற்றங்கள், நலன்கள், செலவுகள், அபாயங்கள் பற்றி கூர்ந்து அவதானிக்கின்றனர்.
- தொழில்முனைவோர், தொழில் நிறுவனங்கள் பற்றிய அரசின் கொள்கை மாற்றங்கள், வரிவிதிப்பு, வரிவிலக்கு பற்றிய நடைமுறைகளை இடைவிடாது அறிகின்றர்.
- உள்நாட்டிலிருந்து உலக நாடுகள் வரை தமது நிறுவனங்களை விரிவு படுத்த ஆலோசனைகளைப் பெறுகின்றனர்.

இவ்வாறு பல்வேறு அறிவையும், அவதானங்களையும் திறன்களையும், உபாயங்களையும் பெற்றும், வடிவமைத்தும் வருகின்றனர். இதனால் தொழிலாளர்களை விடவும் அதிகமாக செல்வமும், வசதியும் பெற்றவர்களாக தொழில்துறை முதலாளிகள் வளர்கின்றனர், வாழ்கின்றனர், உச்சம் தொடுகின்றனர். தொழில் முதலாளிகள் அரசியல்வாதிகளாகவும், அரசியல் தலைவர்களாகவும் வளர்ந்து விடுகின்றனர். பல சமயங்களில் அரசுக்கு அதிக நன்கொடைகள் வழங்கி தமது தீர்மானங்களை வலிமைப்படுத்திக் கொள்கின்றனர்.

தொழிலாளர்களை விடவும் தொழில்முனைவோராக தொழில்துறை முதலாளிகளாக இருப்பது அதிக சவால்கள் நிறைந்ததாகும். ஒரு நாட்டின் மிகப் பெரிய சக்தி அவர்கள். தொழில் முதலாளிகள் தோற்றுப்போகும் போது மீண்டும் குறுகிப் போய் தொழிலாளர்கள் ஆகின்றனர். தொழிலாளர் திறமையும் ஊக்கமும் உயரும்போது சுயதொழில் முனைவோராக அல்லது கூட்டுத் தொழில் முனைவோராக மாறுகின்றனர். வளர்ந்து விடுகின்றனர். பல நாடுகளிலும் இதற்கு பல உதாரணங்களைக் காட்ட முடியும். தொழில்முனைவோர் என்பது திறந்த வெளிப்பாதைதான்.

தொழில்முனைவோரும் அதிகம் படிக்கின்றனர். பல்வகை அனுபவமும், வேறுபட்ட திறமைகளும் கொண்டவர்கள் இணைகின்றனர். பல நாடுகளிலுள்ள தொழில் முதலாளிகள் தொழில்முனைவோர் இணைகின்றனர். உலக நிறுவனங்களை உருவாக்கி உலக சந்தையைக் கட்டுப்படுத்துகின்றனர்.

தொழிலாளர்களும் தமது கூட்டை உடைத்துக் கொண்டு தொழில்முனைவோர் ஆகலாம் தானே!

# பண்டைய தமிழர் பண்பாடு

ஆசிரியர்: பாலசுந்தரம் இளையதம்பி
வெளியீடு: மணிமேகலை பிரசுரம்
7, தணிகாசலம் சாலை,
தி.நகர், சென்னை - 600 017

பண்டைய தமிழர் பண்பாடு - ஒரு புதிய நோக்கு எனும் இந்நூல், பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பியால் எழுதப்பெற்றது. இது, பெயருக்கேற்ப பண்டைய காலத் தமிழர்களின் வரலாற்றை மீள்கட்டமைப்பு செய்யும் வகையில் இந்நூலாசிரியரின் ஆய்வுப் பார்வை தெளிவாக உள்ளது.

பண்டைய தமிழர் வாழ்ந்த நாட்டிற்கு நாவலந்தீவு நிலம் எப்பெயரால் வழங்கப்பட்டு வந்தது என்பதை ஆதாரங்களுடன் விளக்கும் அவர், பிற்பாடு அப்பெயர் மருவியதற்கான காரணங்கள் உள்ளிட்டவற்றை விரிவாகச் சொல்லும் பாங்கு அருமை.

மேலும், பண்டைய தமிழர் நிலம் குட்டுவர் நாடென்றும், சோழ நாடென்றும், பாண்டிய நாடென்றும் வழங்கப்பட்டு வந்ததை விளக்கும் அவர், அன்றைய தமிழரின் வாழ்வியல் விழுமியங்களை எடுத்துரைப்பது, சிறப்புகளை விளக்குகிறது.

பூம்புகார் போல, கி.மு., 1600 முதல் கி.மு.,9600 ஆண்டுகளுக்கு முன், கடல் கோள்களால் அழிவுற்ற குமரிக் கண்ட நாடுகள் குறித்தும் ஆய்ந்தறிந்து கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் இந்நூலில் அதிமுக்கியமானவை. பண்டைய தமிழ் வளர்த்த பெருநாடுகள் குறித்து, இன்றைய தமிழர்கள் படித்தறிவது அவசியம். அதற்கு இந்நூல் பெரிதும் உதவும் என்பது உண்மை.








நிலம் - பல இடங்களில் பூமி அதிர்ச்சி, நிலப்பிளவு, மண் சரிவு...
நீர் - நீரைப்பகிர வாதிட்டனர். வெள்ளம் அணையை பிரித்தது.



அவர்களை பிரித்தது. நீரால் மக்களுக்கு மட்டும் அழிவில்லை. கடல் வாழ் உயிரினங்களும் கடலில் இறந்துள்ளன. அண்மையில் மெச்சிக்கோ கடற்கரையில் கிட்டத்தட்ட 300 கடல் ஆமைகள் கடலில் சட்டவிரோதமாக வீசப்பட்ட வலையில் சிக்கி இறந்துள்ளன.



ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுநம்யும் ஏமாப் புடைத்து. (126)
ஆமையைப் போல, ஐம்பொறிகளையும் இந்த ஒரு பிறப்பிலே அடக்கிக் கொள்ளுதலில் வல்லவனானால், அதனால் எழுமையும் பாதுகாப்பு உண்டு.
ஐந்தடக்கும் ஆமையும் வலையில் சிக்கி இறக்கிறது.
அதுவும் சிற்றாமைகள். உலகம் முழுவதும் கடல் வாழ் உயிரினங்கள் இறந்துகொண்டே போகின்றன. பலவித சட்டங்கள் போட்டாலும் மனிதனை மனிதன்
வீட்டிலும் வீதிகளிலும் பள்ளிகளிலும் பள்ளிவாசல்களிலும் சுட்டுப்பழகியவர்கள்...
ஊர்வன பறப்பன நடப்பனவற்றை விட்டுவைப்பார்களா?



தீ (அக்கினி) - காடு காக்க வளர்த்த மரங்களை அக்கினி அழிக்கிறது. வீடுகள் அடுக்குமாடிக் கட்டடங்கள் ஏதோ காரணத்தால் தினம் தினம் தீக்கிரையாகின்றன.


ஆணவம் பிடித்த மனிதனோ அகிம்சாவாதியோ பணம் படைத்தவனோ பரம ஏழையோ சுடுகாட்டில் அவரது பயணம் தீயில் ஆரம்பிக்கிறது.
முடி சார்ந்த மன்னரும் பிடி சாம்பல் ஆவது திண்ணம்.
சிலவேளைகளில் அவர்கள் ஆசையின்படி கடற்கரைகளில் புதைக்கப்படலாம்.



காற்று - கடலிலிருந்து புயலாகப் புறப்பட்டு புரட்டி எடுக்கிறது.
தென்னை இளம் கான்றினிலே தாலாட்டும் தென்றலது.....
தென்னை தனை சாய்த்துவிடும் புயலாக வரும்பொழுது...

ஆகாயம் - வான் நின்று உலகம் வழங்கி வருதலால் தான்அமிழ்தம் என்றுனரப் பாற்று

மழை பெய்ய உலகம் வாழ்ந்து வருவதால் மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம். மழை பெய்கிறது. மலையிலிருந்து மரங்களின் தடைகளைத் தாண்டி கிணறு கேணி குளம் ஏரி ஆறு கடல்... எனத் தானே தன்வழியே போகும் மழை வெள்ளத்தை எங்கும் செல்லாதபடி..ஊர்களில் கோவில்களில் அரசர்களாலும் கொடை வள்ளல்களாலும் வெட்டப்பட்ட கிணறுகள் குளங்கள் திருக்குளங்கள் ஏதோ காரணங்களுக்காக மூடப்பட்டு எயர் கொண்டிசனுடன் வீடுகள் உல்லாச விடுதிகள் ஆடம்பர அடுக்குமாடிக் கட்டடங்கள்...கட்டப்படுகின்றன.




அப்படியானால் மழைவெள்ளம்...?

எனக்கு யாரைத்தெரியும் நான் எங்கே..போவேன்..? என சிவாஜி கணேசன் பேசியது போல வெள்ளம் கேட்கிறது...
வெள்ளம் போக வழி வைக்காவிட்டால் வெள்ளப் பெருக்கால் வள்ளத்தில் போகவைக்கும். வெள்ளமா?...வள்ளமா...?
மக்களை சிந்திக்க வைத்துவிட்டது.




அப்பா வேலையில்லை.
அப்ஸ் வேலை செய்யவில்லை.



நாளைக்கு லேபர் டே. நீண்ட காலத்திற்கு பிறகு...பிராங்பேட் பேரம்பலம் ரூபியின் அப்பா...ரூபனின் மாமா...உலகர் - ராசம்மாவின் சம்பந்தி வருகிறார்.
மாமி ஆட்டிறைச்சி இதிலை எலும்பில்லாதது ரூபனுக்கும் எனக்கும் உங்களுக்கும்தான் அளவாக காச்சுங்கோ.

அந்த சின்ன மீனை பொரிச்சு விடுங்கோ..மாமாவுக்கும், டடிக்கும், அன்னம்மா அன்ரிக்கும். செல் ..அன்ரிக்கும் அவைக்கு கொழுப்பு கூட...ஜ..மீன் கொலஸ்ரோல்...என ரூபி சொல்லிக் கொண்டிருந்த




பொழுது கேரள வெள்ளத்தை ஹெலிகெப்டரிலிருந்து பிரதமர் மோடி மூடிய கெலிகெப்டர் கண்ணாடியூடாக எதுவித சலனமின்றி பார்ப்பது போல செக்கண்ட் செல்லம்மாவும் ஆட்டிலறி அன்னம்மாவும் ரூபியை பார்த்தனர். பலவித உலகச் செய்திகளை உலகர்குழாம் நன்மை தீமைகளை தாழித்துக் கொண்டிருந்தனர். ராசம்மாவும் ரூபியும் கிச்சினில் தாழிப்பதைவிட காதுக்கு சுவையா இருந்தது.

உலகண்ணை மலையாள படம் நடிக்கிற பிருத்விராஜ், அவற்றை அம்மாவும் படம் நடிக்கிறவவாம். அவ விலை கூடின லம்போகினி கார் வைச்சிருந்தவவாம். தங்கள் பகுதியில் லம்போகினி கார் ஓடுவதற்கு தரமாக இல்லையென்று போக்குவரத்து அமைச்சுக்கு கடிதம் போட்டவவாம், உந்த வெள்ளத்துக்கு அவவை பெரிய அண்டாவ-லை வைச்சு இழுத்துக்கொண்டு போயினம். வரதன் நேற்று வட்ஸ்அப்பிலை படம் காட்டினவர் என்றபடி மூக்கைச்சுழித்தா...





சமையல் மணத்தையும் மிஞ்சிய சென்ற் வாசனை
....ஐபொட் அகிலா. வழக்கமாக..அடித்துக்கொண்டுவரும் சென்ற் வாசனை...சமையல் பொரியல் கரியல் மணம் வெளியேற திறந்த கதவுவழியாக..
செல்போனில் கதைத்தபடி...ஐபொட் அகிலா வர எல்லோரும் ஐபொட் அகிலாண்டேஸவரியைப் பார்க்க....
யேஸ், நான் புளோரிடாவுக்குப்போட்டு இப்பதான் வந்தனான்.

என்னோடை படிச்ச கோகிலா...அதுதான் கூகிள் கோகிலா, என்னோடைதான் வந்தவ என்று சொல்லும்போது லிப்ஸ்ரிக்கை எடுத்து சொண்டுக்கு பெயின்ற் அடித்துக்கொண்டு ஐபொட் அகிலாவுடன் உள்ளே நுழைந்தா கூகிள் கோகிலா.
யார் இந்த கூகிள் கோகிலா? உலகர் வீட்டில்...



செப்ரெம்பர் 1;15

1. தமிழறிஞர் தனிநாயக அடிகள் நினைவு தினம் (1980)



2. உலக தேங்காய் தினம்
2. தெல்லிப்பழை துர்க்காதேவி கொடி. 12 செப்ரெம்பர் தேர்



3. செப்ரெம்பர் லேபர்..டே விடுமுறை
4. பாடசாலை கல்லூரி சர்வகலாசாலைகள் ஆரம்பம்.



5. அன்னை திரேசா நினைவு தினம். (1997)



7. கலாயோகி ஆனந்தக்குமாரசாமி நினைவுதினம். (1947)
7. கூகிள் ஆரம்பிக்கப்பட்ட தினம் (1998)




8. அனைத்துலக எழுத்தறிவு நாள்.
8. ஆத்மயோதி நா.முத்தையா, ஆத்மஜோதி இதழாசிரியர் (1918-1995)
8. யேசுக்கிறிஸ்துவின் அன்னை மரியாள் பிறப்பு.




11. சுப்பிரமணிய பாரதியார் நினைவு தினம்.
(என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்)



11. அமெரிக்க நியூ யோர்க் வர்த்தக மையம் பென்ரகோன் தாக்குதல் 911. (2001)
12. விநாயக சதுர்த்தி விரதம்.




12 பாடகி சுவர்ணலதா நினைவு தினம்.
15. பேறறிஞர் அண்ணா (சி.என். அண்ணாத்துரை தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் 1909-1969)
15. அனைத்துலக மக்களாட்சி நாள்

## மாதகல் மான்மியம் - இரண்டாம் பதிப்பு

மாதகல் மான்மியம் - இரண்டாம் பதிப்புக்கான வெளியீடு கடந்த 26-08-2018 அன்று மாதகலில் இடம்பெற்றது. திரு. சபா. அருள்சுப்பிரமணியம், திரு. வி. சிற்றம்பலம் ஆகியோரின் உழைப்பில் உருவான மாதகல் பற்றிய பல தகவல்களைத் தாங்கிய இந்நூல் மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கத்தால் வெளியிடப்பட்டது. கனடா மாதகல் நலன்புரி சங்கமும், மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கமும் 25 ஆண்டை நிறைவு செய்வதால் அதன் பதிவாக இந்நூல் வெளியிடப்பட்டது. விழாவின் தலைமை விருந்தினராக யாழ். பல்கலைக்கழகக் கணிதப் பேராசிரியர் சிறி சற்குணராசா அவர்களும் சிறப்புவிருந்தினராக விஞ்ஞானப் பேராசிரியர் பு. ரவிராஜன் அவர்களுடன் யாழ். தொழிற் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. அ. அன்ரன் தனேஸ் அவர்களும் கலந்துகொண்டனர். மாதகல் மான்மியம் நூலுடன் இளம்மழலை, முதுமழலைச் சிறாருக்கான அடிப்படைச் சொற்களை அறிமுகம் செய்யும் 'சொற்சிமிழ்' நூல்கள் இரண்டும் வெளியிடப்பட்டன. முதற்பிரதிகளை திரு. அன்பழகனும், திருமதி. பு. இராமநாதன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

- சபா. அருள்சுப்பிரமணியம்.


Mike is looking forward to your support to serve as your
Councillor - Ward -7
Elaguppillai (Mike) Srinathan B.Sc
Vote for the future
MARKHAM
9TH LINE
HWY 407
7
MCCOWAN RD
YORK DURHAM LINE
STEELES AVE E




FOR SALE

Established Turn Key Business Opportunity

Be Your Own Boss!

Own Two Retail Units In

The Shops Of Westwood Square.

410 Sq/Ft, Right In The Middle Of The Food Court & Beside The Escalator Leading To The 2nd Floor. Near Many Anchor Stores Such As Tim Horton's, Walmart, LCBO, Shoppers Drugmart, Freshco., Royal Bank, TD Bank, Scotia Bank, CIBC, TTC Bus Terminal, Highways And Much More.

**All Chattels And Inventory Of Over 200K Included In Price.**



Pravisha Nagaretnam
Sales Representative

d: 416.727.7686
o: 416.987.8000
f: 416.987.8001
pravisha@teampravisha.com
teampravisha.com

RE/MAX PREMIER INC
9100 Jane St.,Bldg L, #77
Vaughan Ont. L4K 0A4


# அழகிய சான்...

36 ஆம் பக்கத்தொடர்ச்சி

Prieta) என்று பெயர் கொண்ட பூகம்பம் ஏற்பட்டது. பூகம்பத்தினால் சான் பிரான் சிஸ்கோ கடல் சிங்கங்கள் சுதந்திரமாக வாழ்ந்து வந்த பல பெரும் பாறைகள் கடல்நீருக்குள் மூழ்கி விட்டன. கடல் சிங்கங்கள் பாதுகாப் பிற்காக அன்றிலி ருந்து பியர்-39 இல் படகுகள் கட்டிவைத் திருக்க பயன்படுத்திய மிதக்கும் மரமேடை-களை தமதாக்கி கொண்டு வெய்யில் வாங்குவதற்காக அதிக அளவில் தங்கி பார்வையாள ரைக் கவருகின்றன. அவை கத்துவது கழுதைகள் கத்துவது மாதிரி இருக்கும். பிள்ளைகள் அவைகளது குரலையும் ரசிக்கிறார்கள்.

**கேபிள் ஃ டிராம் கார்கள்:**

உலகெங்கும் தேசிய நினைவுச் சின்னங் களாக கட்டிடங் களை மட்டுமே அங்கீக ரித்துள்ளார்கள். அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில் ஓடும் கேபிள் கார்களும் (Street cable cars) தேசிய நினைவுச் சின்னமாக அங்கீகரிக்கப்பட் டுள்ளன. இப்படி நகரும் வாகனம் ஒன்று தேசியச் சின்னமாக அறிவிக்கப்பட்டிருப்பது, உலகில் இங்கு மட்டுமே!. சான் பிரான் சிஸ்கோ மலைச்சரிவு போன்ற நில வமைப்பு, கடும் சரிவான தெருக்களுக்கு போக்குவரத்து வழங்குகின்றன இந்த கேபிள் கார்கள். அதிகாலை 6 மணிக்கு ஆரம்பித்து நள்ளிரவு வரை தொடரும் இந்த கேபிள் கார்களின் சேவைகள். யூனியன் சதுர்க்கம் இலிருந்து நொப் ஹில் உச்சிக்கு, கேபிள் கார்கள் ஒரு பரபரப் பான போக்குவரத்து சேவையை வழங்கு கின்றன. சான் பிரான்சிஸ்கோ கேபிள் கார் மூலம் சவாரி செய்தீர்களானால் உங்கள் வாழ்க்கையில் மிகவும் மறக்கமுடியாத சம்பவமாக அது இருக்கும் அல்லது நம்பமுடியாத சந்தோஷம் தரக்கூடிய உணர்வு கிடைத்ததாக ஒப்புக்கொள்வீர்கள். நகரில் இருந்து மூன்று வெவ்வேறு பாதை களில் கேபிள் கார்கள் சேவையை வழங்குகின்றன. இரண்டு கேபிள் கார் பாதைகள் கடும் சரிவானவை. உன்ன தமான நகரக் காட்சிகள் இவ்விரண்டு பாதைகளிலும் கிடைப்பதனால் கூடிய பார்வையாளர்கள் இவ்விரு கேபிள் கார்




பாதைகளிலும் சவாரி செய்வார்கள்.

**ஃபெர்ரி சந்தை கட்டிடம்**
(Ferry Building Marketplace):

ஃபெர்ரி சந்தை கட்டிடம் சான் பிரான் சிஸ்கோ விரிகுடா முழுவதும் பயணிக்கும் கப்பல்களுக்கும், கேபிள் கார்களும் ஒரு முனையாகும். ஃபெர்ரி சந்தை கட்டிடம் சந்தை தெரு அடிவாரத்திலும் நகரத்தின் கிழக்கு கரையிலும் மற்றும் சான் பிரான்சிஸ்கோ துறைமுகத் தெரு வழியை ஒட்டியும் அமைந்துள்ளது. சான் பிரான்சிஸ்கோவின் சுற்றுப்புறங்களையும், சுற்றியுள்ள வளைகுடா சமூகங்களையும் இணைக்கும் போக்குவரத்தின் மையமாக இது உள்ளது. இக் கட்டிடத்திற்கு அருகில் காந்தி சிலையை வைத்து இருகிறார்கள். 1988 ஆம் வருடம் சான் பிரான்சிஸ்கோ மேயர் திரு ஆர்ட் அக்னோஸ் அவர்கள் இந்த சிலையை நிருவுள்ளார். 2.47ஏக்கர் பரப்பில் 1898ஆண்டில் கட்டிமுடிக்கப்பட்ட இக் சந்தை கட்டிடத்திற்கு மத்தியிலுள்ள 245 அடி (75 மீ) உயரக் கடிகார கோபுரம் அதன் அடையாளம். நீங்கள் சுற்றுலா விருந்தினராக இருந்தால் பொருட்களை வாங்க கடைகள், சாப்பிட உணவகங்கள், மற்றும் சான் பிரான்சிஸ்கோ விரிகுடா காட்சிகளை அனுபவிக்க சரியான இடம்.

**கோல்டன் கேட் பூங்கா** *(Golden Gate Park):* பைசிக்கிள் ஓட, நடக்க, ஓட (Hiking), ஓய்வெடுக்க 1,107 ஏக்கர் பரப்பளவும் மூன்று மைல் நீளமும் அரை மைல் அகலமும் கொண்ட ஒரு செவ்வக வடிவமானது இந்த கோல்டன் கேட் பூங்கா. பசுமையான புல்வெளி, பைசிக்கிள் ஓட பாதையமைப்பு, ஒதுக்கப்பட்ட ஏரிகள், திறந்த தோப்புகள், பயிரிடப்பட்ட தோட்டங் கள் மற்றும் சில சிறந்த அருங்காட் சியகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

சான் பிரான்சிஸ்கோவில் கண்டு களிக்க இன்னமும் பல இடங்கள் உள்ளன. இங்கு பெரும் நிறுவனங்கள் மட்டும் அல்லாது உலகின் தலை சிறந்த கல்வி நிறுவனங் களும் உள்ளன. அமெரிக்காவின் அதி முக்கிய இடமாகவும் தொழில்புரட்சி, இணையபுரட்சி, அறிவியல் புரட்சியின் தாயகமாக இது விளங்குவதால் இளைஞர் களின் கனவுலகமாகவும் உள்ளது.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm


விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416.754.7338 / 416.724.7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



FOR ALL YOUR MORTGAGE NEEDS
Access over 30 lenders with one application
Refinance
Purchase
Renewal
Dedicated and knowledgable team...
Provide you with the best solutions for
1st and 2nd Mortgage...
Our commitment to you is to provide with the very best...
1st Mortgage starting 6.50%* for Private
2nd Mortgage starting 9.99%* for Private
Approval funded within 48 hours*
APPROVED
APPROVED
APPROVED
Pradeepraj Mani
Mortgage Agent
LIC# M14001956
416.997.3862
np_57@hotmail.com
*Some conditions apply
MORTGAGE ALLIANCE
Gaya Kathir
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
416.806.2274
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca


வீடு வாடகைக்கு பெற்றிட...
Mega Financial Group
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
Cell: 416.670.7436
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
Buy / Sell / Lease
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)


Homesby Natheesh
BUY SELL/ RENT INVEST with Homes by Natheesh
www.HomesbyNatheesh.ca
info@HomesbyNatheesh.ca
FREE Home Evaluation
FREE Home Staging
FREE Virtual Tour
For all your Real Estate needs...
Natheesh Parameshvaran
SALES REPRESENTATIVE
647.545.8462


வீடு என்பது நமது கனவு
The Realtor for your Dream House
BUY...
SELL...
LEASE...
INVEST...
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc.



ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES


கனடிய குடிவரவு விண்ணப்பங்களும் சட்டரீதியான விசா ஏற்பாடுகளும்
CANADA MIGRATION PILOT
STUDY - WORK- SETTLE IN CANADA
• Visit/Tourist Visa • Super Visa • Student Visa
• Family Sponsor/Spouse Visa • Express Entry
• Citizenship Appilication / PR Renewal
• Parents/ Family Permanent Resident Visa
Searuban Sivaratnam
6477178226


வீடு, நிலம், வர்த்தகநிலையங்கள்
வாங்க, விற்க, வாடகைக்கு விட அழையுங்கள்...
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8 Bus: 905.201.9977
*Independently Owned & Operated


BUY & SELL
WITH CONFIDENCE
FREE HOME EVALUATION
Free Home Staging, Professional Photography,
Floor Plan & Flexible Commission
THELEPAN
VIGNESWARAN
416-666-1401
www.thelepan.com
Homelife Galaxy Real Estate Ltd. Brokerage Independently Owned & Operated


BUYING OR SELLING
வீடு வாங்க விற்க...
Indra Michael Xavier
Sales Representative
Direct: 647-995-6829
Indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr. Unit 205 Markham ON. L3S 4N8
Tel: 905.201.9977 Fax: 905.201.9229


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Muthucumaraswamy
Broker
Direct: 416.567.6209
TEAM TITANS
Residential / Commercial / Purchase / Sale / Investment / Leasing


Life Insurance
Non Medical
Super Visa
RESP
வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Realtor/Financial Advisor
Cell: 416.716.1540
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


HOMES & CONDOS FOR SALE
156 L'amoreaux Dr - Toronto
$699,900
Detached 2 Storey
37 Fireside Dr - Toronto
$929,500
Detached 2 Storey
1 Silbury Dr - Toronto
$699,900
Detached 2-Storey
4060 Lawrence Ave -Toronto
$389,800
2 Bed Rm. Condo
16336 Highway 48 Rd - Stouffville
$728,800
Detached Bungalow
3558 Regional Rd 57 Rd - Scugog ON.
$499,000
Detached Bungalow-Raised
1st & 2nd Mortgages available upto 1Million
A.ANTON JEEVA
Broker
Dir: 416.575.5055
RE/MAX
Dynasty Realty Inc. Brokerage*
Tel: 905.471.0002


BALACHANDRAN LAW
LITIGATION
எங்களுடன் தமிழிலும் தொடர்பு கொள்ளலாம்
AGHI BALACHANDRAN
Web: www.balalaw.ca
E-mail: agh@balalaw.ca
Tel: 647-466-2444
Fax: 647-494-5474
East Office: 3852 Finch Avenue East, Suite#302, Scarborough ON, M1T 3T9
West Office: 151 City Centre Drive, Suite 201, Mississauga, ON, L5B 1M7.